# ஒரு மலர்

ரமணிசந்திரன்



## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஒரு மலர் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : அக்டோபர், 1982 |
| இரண்டாம் பதிப்பு | : மே, 1987 |
| பதினொன்றாம் பதிப்பு | : டிசம்பர், 1999 |
| பனிரெண்டாம் பதிப்பு | : மார்ச், 2002 |
| பதின்மூன்றாம் பதிப்பு | ; டிசம்பர், 2003 |
| பதினான்காம் பதிப்பு | : மே, 2005 |
| பதினைந்தாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2006 |
| பதினாறாம் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| பதினேழாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2009 |
| பதினெட்டாம் பதிப்பு | : பிப்ரவரி, 2011 |
| பத்தொன்பதாம் பதிப்பு | : மே, 2012 |
| 20ம் பதிப்பு | : டிசம்பர், 2013 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 220 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |




# ஒரு மலர்

## பதிப்புரை

புகழ் பெற்ற எழுத்தாளர் திருமதி ரமணிசந்திரனின் எழுத்துக்களிலே உண்மை, நேர்மை, ஒழுக்கம், குடும்பப் பாங்கு அத்தனையும் இருப்பதனால்தான் தனிப்பட்ட வாசகர்கள் - அதுவும் பெண் வாசகர்கள் ஏராளமாகப் பெருகி வருகிறார்கள்.

இவரது நாவல்கள் வெறும் பொழுதுபோக்காக மட்டும் இருக்காது. அன்றாட வாழ்வில் நிகழும் அசாதாரண நிகழ்ச்சிகளை வைத்து, கதாபாத்திரங் களை அதனூடே நடமாட விட்டு, வாசகர்களின் மனத்தினை ஈர்த்து வெற்றி காணும் தன்மை - நயம், திருமதி ரமணிசந்திரனுக்கே உரியது.

படிப்பவர்கள் பாங்கான வாழ்க்கை வாழ, நல்வாழ்வு பெற இந்த நாவல்கள் பெரிதும் உதவுகின்றன என்பது வாசகர்கள் தீர்ப்பு. படியுங்கள்.

**- அருணோதயம் அருணன்**

# ஒரு மலர்

## 1



அதுவரை கேட்டுக் கொண்டிருந்த டைப்ரைட் டர்களின் ஒலி திடுமென நின்றதும் அலுவலகத்தில் பரபரப்பு எழுந்ததும் மணி ஐந்து என்பதை ரமிக்கு உணர்த்தின.

கையில் இருந்த கடைசிக் குறிப்பையும் தட்டெழுத்து களில் வடித்து முடித்தவள் அயர்வுடன் விரல்களை நொடித்தாள்.

டைப் அடித்து முடித்திருந்த காகிதங்களைப் பகுதி வாரியாகப் பிரித்து அடுக்கி ட்ரேயில் வைத்தாள்.

பல மாதங்களாகப் படித்துவிட்ட ஓர் இயந்திரத் தன்மையுடன் மேசையை ஒதுக்கி ஒழுங்கு படுத்தினாள்.

டைப்ரைட்டரை மூடி வைத்தாள்.

இது போன்ற சிறு வேலைகள் முடிந்த பின் மேசையின் இழுப்பறையைத் திறந்து, உள்ளிருந்த டிபன் பாத் திரத்தை எடுத்தாள்.

மதியம் சரியாக உண்ணாததால் பாத்திரம் சற்றும் கனம் குறையாதிருந்தது.

சன்னமான பெருமூச்சுடன் கைப்பையினுள் பாத் திரத்தை வைக்கப் போனவளின் கண்ணில், ஓர் எதிர் பார்ப்புடன் ஓரமாக நின்றிருந்த ஆயா - அந்த அலுவல கத்தைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்கிறவள் - தென்பட்டாள்.

'நம்மிலும் கேடு நாட்டிலே கோடியோ?'

ஆயாவை அழைத்து மீந்திருந்த புளிசாதத்தை அவளது பாத்திரத்தில் எடுத்து வைத்தாள் ரமி.

கணிசமான அளவு உணவைக் கண்டதும் ஆயாவின் முகம் மலர்ந்தது.

ஆனாலும், ''இன்னம்மா இது? அப்படியே மிச்சம் வச்சுக்கிறே! நீயானா வெளியே எதுனாச்சியும் வாங்கித் துன்றவளும் இல்லை. இப்பிடிப் பட்னி கெடந்தாக்க ஒடம்பு என்னம்மா ஆவும்?'' என்று கரிசனத்துடன் அங்கலாய்த்தாள்.

'அப்படி என்ன ஆகிவிடும்? அப்படி ஏதேனும் ஆகி விட்டால் கூடப் பரவாயில்லையே' என்று வேதனை யுடன் நினைத்தாள் ரமி.

ஆனால் நினைத்ததைச் சொல்ல முடியாமல் ''காலை யில் அதிகமாகச் சாப்பிட்டு விட்டேன் ஆயா'' என்றாள் போலியான ஒரு புன்னகையுடன்.

ஆயா திருப்தியுடன் செல்லவும் கையைத் திருப்பி மணி பார்த்தாள்.



மணியை மறந்து அந்த 'மிக்கி மவுஸ்' வாட்சைச் சிறு வயதில் தந்தை பரிசளித்த நாளை மனதுள் கண்டபடி சில கணங்கள் அசைவற்று நின்றாள்.

இந்தக் கைக்கடிகாரத்தின் முன்னும் பின்னுமாக எத்தனை எத்தனை பரிசுகள்!

எண்ண முடியாத அளவுக்கு எத்தனை!

ஆனால் ஏன் அப்பா!

எதற்காக!

இந்த ஏன்... எதற்காக என்ற கேள்விக்கு முடிவோ பதிலோ கிடையாது என்பதனை உணர்ந்து தலையைக் குலுக்கி நிகழ்காலத்துக்கு வந்தாள்.

மணி ஐந்து இருபது.

அத்தானைச் சந்திப்பதற்கு அந்தப் பஸ் நிலையத் திற்கு ஆறு மணிக்குத்தான் போய்ச் சேர வேண்டும்.

ஆனால் இங்கே சும்மா இருந்து நெஞ்சைக் கசக்கிக் கொள்வதற்கு மெல்ல நடந்தால் என்ன?

அந்த மெதுவான நடைகூட முடியாத காரியம்போல! இது என்ன சோர்வு?

மனதின் சோர்வே உடம்பையும் பாதிப்பதை உணர்ந்து அந்தச் சோர்வைப் பின்னே தள்ளிவிட்டு ரமி மேலே நடக்கலானாள்...

ஒருவேளை அத்தான் சற்று முன்னதாக வந்திருக்கக் கூடுமோ என்ற நினைவு சிறிது விரைவாக அவளை நடக்க வைத்தது.

ஆனால், அது கொஞ்சமும் சாத்தியம் அல்ல... வேண்டும் என்றே வெகுநேரம் காத்திருக்க வைத்து

விட்டு கடைசி ஆளாகத்தானே அவனைப் பார்ப்பாராம். அந்தக் கவுதமன்.

கவுதமன்!

அமைதியும் அன்பும் உருவான ஒரு மகானின் பெயர். கோபம், வஞ்சினம், வெறி எதையுமே அறியாத தெய்வப் பிறவியின் பெயர்.

ஆனால், இந்தக் கவுதமனோ?

* * *

அந்தப் பத்திரத்தை மீண்டும் கையில் எடுத்துப் பார்த்தான் கவுதம்.

இப்போது ஆத்திரத்தில் முகம் சிவந்தது.

எவ்வளவு பெரிய புரட்டு வேலை!

அதுவும் இந்தக் கவுதமிடம்.

திருட்டு நாய்கள்! இருக்கட்டும் ஓர் ஏழு ஆண்டு கேப்பைக் களி உண்ணட்டும்.

களி வயிற்றில் கல்லாய் இறங்க இறங்கத்தான் இனி இந்த மாதிரி எத்து வேலைகளில் இறங்க மனம் துணியாது.

பத்திரத்தை எடுத்துப் பீரோவில் வைத்துப் பூட்டி விட்டுக் கிளம்பினான் கவுதம்.

இருபது ஆயிரம்!

அவன் அளவில் பெரிய தொகை இல்லைதான் என்றாலும் காசு பணம் தானாக வந்துவிடுவது இல்லையே.

ஏதோ தர்மம் என்று வந்து கேட்டிருந்தால்கூடப் பரவாயில்லையே.

ஏமாற்றுகிறானாம், ரா...ஸ்கல்...



'இண்டர்கா'மில் மானேஜரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினான் இவன்.

விலை உயர்ந்த அந்தப் 'பென்ஸ்' காரை எடுத்து ஓட்டத் தொடங்குகையில்கூட வழக்கமாக மனதில் உண்டாகும் திருப்தி தோன்ற மறுத்தது.

உள்ளூர அதே எரிச்சல்.

யார் என்று நினைத்தான் ராஸ்கல்...

புகைந்தபடியே வேகம் எடுக்கத் தொடங்கியவன் கண்களில் புகைச்சலுக்குக் காரணமானவனே எதிர்ப்பட மண்டியிருந்த புகை விலகி, சின்ன தீயாய் எரியலாயிற்று.

'பாடம் கற்பிக்கிறேன் பார் திருட்டு ராஸ்கல், கூட யார்...'

காரைச் சற்று தூரத்தில் வட்டமடித்துத் திருப்பி வந்து சிறிது எட்ட நிறுத்திவிட்டு மீண்டும் பார்வையை அவனிடம் செலுத்தினான் கவுதம்.

அந்தத் திருட்டுப்பயல் சுந்தரின் அருகில் நெருக்கமாய் மிக நெருக்கமாய் நின்று முகத்தில் மிகுந்த கவலையுடன் (கவலை இராதா என்ன? காதல் மன்னன்தான் களி தின்னப் போகிறானே) ஏதோ கேட்டுக் கொண்டு நின்றிருந்தாள். அந்தப் பெண். அவள்... அந்தப் பெண்!

அவளை இதற்கு முன்னதாகப் பார்த்த நிகழ்ச்சி கொஞ்சமும் சிரமப்படாமலே அவன் மனத்திரையில் ஓடியது.

அப்போது அவள் இதுபோலச் சேலை அணிந்திருக்கவில்லை.

கிரே கலரில் ஒரு ஸ்பன் சில்க் துணியில் கரை ஓரமாகப் பெரிய இளம் சிவப்பு நிறப் பூக்களுடன் கூடிய 'கிராஸ்கட்' பாவாடை...

கொஞ்சம் சின்னதாகப் பூக்களிட்ட சட்டை தொடை வரை வழிந்தது.

அந்த மலர்களோடு ஒரு மலராக அவள் முகம் கிளுகிளுத்தது.

ஒரு ஆப்பிளைக் கடித்தபடி மாடி வராண்டாவில் தொங்கிய ஊஞ்சலில் சாய்ந்தபடி லேசாக ஒற்றைக் காலை உந்தி ஆடியபடி 'எனிட் பிளைட்டன்' படித்துக் கொண்டு இருந்தாள் அன்று.

காதுகளில் தொங்கிய ஒற்றை வைர 'டிராப்' ஆடும் போதெல்லாம் அந்த ரோஜாக் கன்னங்களில் ஒளியை வாரி இறைத்தது.

மிகவும் அழகிய மலர் ஒன்றின் நினைவு வந்தது அவனுக்கு.

அந்த அழகான பதுமையிடம் இருந்து பார்வையைப் பிரித்து எடுக்க மாட்டாதவன் போல அசையாது நின் றான் கவுதமன்.

அவன் தோளைத் தழுவியபடியே, ''என்ன என் ராஜாவின் பார்வை எங்கே ஊர் மேய்கிறது?'' என்று கொஞ்சலாகக் கேட்டு எட்டிப் பார்த்தாள் ஹைமா.

ஹைமா சற்று ஒரு மாதிரியான பெண்.

கொஞ்சம் படியேறி விட்டவர்களில் பணத் திமிரில் அலைபவர்களுக்கு 'கம்பெனி' கொடுப்பவள்.

பேச்சில் புத்திசாலித்தனம் இருக்கும் என்பதால் கவுதமன் அவ்வப்போது அவளை நாடி வருவது உண்டு. அப்போதும் அப்படித்தான் வந்திருந்தான்.



அவள் இடையில் கைகொடுத்து அணைத்து, ''யார் அந்த மலர்?'' என்று வினவினான்.

''உனக்கு எட்டாது ராஜா, உயரம் ரொம்ப அதிகம்!'' என்று சிரித்தாள் அவள்.

''எப்படியும் ஏதோ ஓர் அளவு உயரம்தானே?'' என்று அலட்சியமாகக் கேட்டபடியே சிகரெட்டைப் பற்ற வைத்தான் அவன்.

''இவளது உயரம் ஒழுக்கத்தில் ஆயிற்றே ராஜா?'' என்று புருவங்களை வளைத்தாள். ஹைமா 'ஒழுக்கத் தோடு மிகவும் வசதி உள்ள குடும்பம். இவள் ஒரே பெண். இமைக்குள் விழி. அதிலும் கண்ணின் கருமணி தான். உன்போல கெட்...ட்ட பையன்களோடு கொஞ்ச மும் பழக விட மாட்டார்கள்'' என்று கேலியாக நகைத் தாள்.

''உன் போலக் கெட்..ட்ட பெண்களுடனும் தானே'' என்று கிண்டல் சிரிப்புடனேயே திரும்பினான் கவுதமன்.

''நிச்சயமாய்!'' என்று சிறிதும் தயக்கமின்றி ஒரு கிளுகிளு சிரிப்புடன் பதில் வந்தது.

''ம்! அவ்வளவு உயரம் என்றால் அந்தப் பெண் அங்கேயே இருக்கட்டும். நாம் நம் உயரத்தில் மட்டும் பறப்போம்'' என்று ஹைமாவின் இடையை வளைத் தவன் அந்த அடுத்த வீட்டுப் பெண்ணை அத்தோடு மறந்து போனான்.

ஆனாலும் அன்று பார்த்தது இவ்வளவு தெளிவாக இப்போது நடப்பது போலக் கண் முன்னே வந்தது ஆச்சரியம்தான்!

ஆனால் அந்த எட்டாத உயரம் இன்று இவ்வளவுக்கு இறங்கி வந்து இந்தத் தரங்கெட்ட ஏமாற்றுக்காரனோடு உரசிக் கொண்டு நிற்பதைப் பார்த்தால்...

இந்த ராஸ்கல்கூட ஏதோ சொன்னானே... கல்யாணம் ஆகப் போகிறது. அவளது குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு வேறு இருக்கிறது; அப்படி இப்படி என்று புலம்பினானே?

வருங்கால மனைவி இந்தப் பெண்தானா?

'ஒழுக்கத்தில் மிக உயரம்' என்று ஹைமா சொன்ன பெண்!

பிச்சைக்காரனைப் போலக் கையேந்தி வரும்போதே அலுவலகப் பெண்களை அடிக்கண்ணால் நோட்டமிடும் இந்த அயோக்கியனின் வருங்கால மனைவி!

அவளை அவன் எந்த அளவில் விட்டு வைத்திருப்பான்?

கவுதமனின் பார்வை ரமியை அங்குலம் அங்குலமாக அளவெடுத்தது.

சட்டெனை விழிகள் பளிச்சிடக் காரை மீண்டும் ஓட்டத் தொடங்கினான்.

சுந்தரைப் பழிவாங்கச் சரியான ஆயுதம் கிடைத்து விட்டது.

## 2



''இரவு முழுவதும் ஒரு பொட்டு கண் மூடவில்லை'' என்று பேச்சுக்குச் சொல்வதுண்டு.



அது மெய்யேபோல் சுமார் ஒரு வார காலமாக ரமிக்கு இரவில் சரியான தூக்கமில்லை.

அன்றும் தூங்கிவிட முயன்று முயன்று தோற்றாள்.

கடைசியில் தூங்கும் முயற்சியையே கைவிட்டுவிட்டு இரவில் இருளை வெறித்தபடி அசைவற்றுக் கிடந்தாள்.

ரஜனியும் ஏனோ புரண்டு புரண்டு படுத்தாள்.

கடைசியில் 'ஸ்ச்ச்' என்று எழுந்து அமர்ந்தாள்.

சில வினாடிகள் பேசாது கவனித்து விட்டு, ''தண்ணீர் வேண்டுமா, அம்மா?'' என்று விசாரித்தாள் மகள்.

''ஊம்... ஐஸ் வாட்டர் இருந்தால் நன்றாயிருக்கும். ரமீ, ரமீ ஏ.சி. இல்லாமல் என்னாலே தூங்கவே முடியலையேடி'' என்று கண்ணீர்க் குரலில் புலம்பினாள் ரஜனி.

மெல்லிய குரலில் ஓர் அழுத்தத்துடன், 'வீட்டுக்கார ஆன்ட்டி போட்டுக் கொடுத்திருக்கும் இந்த மின் விசிறிகூட நம் நிலைமைக்கு அதிகம் அம்மா'' என்று பதிலளித்தாள் ரமி.

விசிப்புடன் பாயில் விழுந்தாள் ரஜனி.

இந்த விசிறிகூட இல்லாமல் தரையில்... எப்படி முடியும்?

ஓவென்று கதறி அழ வேண்டும் போல் இருந்தது ரமிக்கு. ஆனால் உள்ளுக்குள்ளேயே விழுங்கிவிட்ட பழக்கம் அதற்கு இடம் தரவில்லை.

'தன் அறியாமையால் இவ்வளவு பெரிய துன்பத்தை தேடிக் கொண்டாளே தாயார்' என்று வேதனையில் நெஞ்சைக் கசக்கிக் கொள்ள மட்டுமே அவளால் முடிந்தது.

மறுநாள் காலையில் எழுந்ததில் இருந்தே வலக்கண் ஓயாது துடித்தது ரமிக்கு.

'வலக் கண் துடித்தால் கெடுதல் என்பார்களே. இன்னமும் துன்பம் வரப் போகிறதோ?' என்று மனம் கலங்கியது.

ஆனால் உடனேயே 'சில நாட்களாக இரவில் சரியான தூக்கம் இல்லாததால் கண் துடிக்கிறது. இதில் நல்ல தென்ன கெட்டதென்ன?' என்று அறிவு விளக்கம் கொடுத்தது.

அதை ஏற்று, இன்றேனும் நன்றாகத் தூங்கவேண்டும் என்று மனது எண்ணும்போதே நெடுமூச்சும் உடன் வந்தது.

இந்தக் கவலையெல்லாம் ஓய்ந்தால் அல்லவா தூக்கம் வரும்?

அலை ஓயும் காலம் என்று ஒன்று வந்தாலும் கூட அவளது கவலைகள் ஓயக்கூடுமா?

அலைமேல் அலையாக வந்த துயரங்கள் எல்லாம் ஒரு வழியாக அடங்கி விட்டன என்று கொஞ்சம் நிம்மதி யோடு இருந்தாளே? இப்போது அடங்கியிருந்த காலத் திற்கும் சேர்த்து ஆளையே சுருட்டி மடக்கி உள்ளிழுத்து விழுங்கி விடுவது போல வந்திருக்கும் இந்தப் பேரலை யில் இருந்து மீள்வது எப்படி?

பயம் ரமியின் நெஞ்சைக் கசக்கி வயிற்றைக் கலக் கியது.

அத்தான் சுந்தரை நன்றாய் வாய் ஓயும்வரை திட்டித் தீர்த்துவிட வேண்டும் போல ரமிக்கு ஆத்திரம் பொங் கியது.



ஆனால் அந்த ஆத்திரத்தின் ஆயுள் சில காலங்களே.

அடிபட்டு அடிபட்டு உடம்புத் தோல் மரத்துப் போவது போல அடுக்கடுக்காய் வந்த துன்பங்கள் அவளது சிரிப்பு விளையாட்டோடு அழுகை ஆத்திரம், சினம் போன்ற உணர்வுகளையும் கூட மழுங்கடித்து விட்டிருந்தன.

எனவே அவ்வப்போது தோன்றும் ஆத்திரமும் நிலைக்க வில்லை.

இந்தப் புதிய பயங்கரத்தில் இருந்து மீள்வது எப்படி என்று அயர்வுடன் மீண்டும் சிந்திக்கலானாள்.

எப்படி எப்படி யோசித்தாலும் கருங்கல் பாறையில் முட்டிக் கொண்டு திரும்புவது போல ஆயிற்று.

வழிபடும் வழி என்று அவளது அறிவுக்கு எட்டிய வரை எதுவும் தெரியவில்லை.

அத்தான் மட்டுமாக இதில் மாட்டியிருந்தால்கூட ரமி இப்படிக் கலங்கியிருக்க மாட்டாள்.

'டெரிகாட் பாண்ட்டும் கார்ட்ராய் ஜீன்சுமாக எத்தனை நாள் போடுவாய் அத்தான், கொஞ்ச நாள் கட்டம் போட்ட காட்டன் துணிகளையும்தான் போட்டுப் பார்த்து விட்டு வாயேன்' என்று கூட இருந்து விடலாம்.

அந்த அளவுக்கு அவனைப் பற்றி விட்டேற்றியாக அவளால் எண்ண முடிந்தது.

ஆனால் அம்மா?

இங்கே அவளுடைய அன்னையையும் அல்லவா அந்த பாவி மாட்டி வைத்து விட்டான்!

இப்போதெல்லாம் தன் நெஞ்சு மரக்கட்டை போல மரத்துப் போய் விட்டதோ என்று சில நேரங்களில் ரமி ஐயுறுவது உண்டு.

'அதெல்லாம் இல்லையடி பெண்ணே' என்பது போலத் தாயை நினைத்த மாத்திரத்தில் தாள மாட்டாமல் வலித்தது அவள் மனம்.

இப்போது அப்பா மட்டும் இருந்தால்...

அம்மா... அப்பா!

தாயாரைத் தன் தந்தை எப்படியெல்லாம் சிறப்பாக வைத்திருந்தார் என்பதெல்லாம் ரமிக்கு நினைவு வந்தது.

கபடு சூது அறியாத குழந்தை மனம் ரமியின் அன்னை ரஜனியுடையது.

ரமியுடைய தந்தை ராஜனும் தன் மனைவியை ஒரு குழந்தையைப் போலத்தான் போற்றினார்... அதுவும் தவமிருந்து பெற்ற பிள்ளைக் கனியைப் போல.

ரஜனி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான்; எழுத்து பிசகாமல் அத்தனையையும் அப்படியே நடந்துவிடும்.

அதுவும் எப்படியெல்லாம்?

''லேடீஸ் கிளப்பில் எல்லோரையும் கூட்டிக் கொண்டு சஃபையருக்குப் போகப் போகிறேன் டார்லிங். அடுத்த வாரப் புதுப் படத்துக்கு ஐம்பது டிக்கெட் வேண்டுமே...''

ஐம்பது ஐந்து ரூபாய் டிக்கெட்டுகள் அன்று மாலையே வீடு வந்து சேர்ந்துவிடும்.

அது மட்டுமா?

அங்கே முந்திரி வறுவல், ஐஸ்கிரீம்...

எத்தனை தரம் இந்த மாதிரி நடந்திருக்கும்.

''ஒரு சின்ன லாக்கெட் எனக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் விற்கிறார்கள் டியர், முழுக்க வைரமும், ரூபியும் நம் ரமிக்குட்டிக்கு நன்றாக இருக்கும்...''



''பாருங்கள் டார்லிங். கிளப்பில் என் கூடவே இருப் பாள் என்பேனே... அவள்தான் வைதேகி என்று ஒருத்தி... ரொம்ப நல்லவள். அவள் மகளுக்குத் திருமணம் பேசு கிறார்கள். வரதட்சணை பத்தாயிரம் ரூபாய் தந்தால்தான் திருமணம் என்கிறார்கள். இவளானால் பிழியப் பிழிய அழுகிறாள். வரதட்சணை அது இது என்றால் எனக்குப் பிடிக்கவில்லை தான்; ஆனால் வைதேகிக்காக ஒரு பத்தாயிரம் ரூபாய் கொடுக்கலாமா? அவளைப் பார்த் தால் எனக்குப் பாவமாய் இருக்கிறதே...''

ரஜனியிடம் பத்தாயிரம் ரூபாய் வாங்கி மகளின் திரு மணத்தைச் சுலபமாக முடித்துக் கொண்ட அதே வைதேகி தான் மூன்று நாட்கள் முன்னதாக ரமியைப் பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள்.

அது மட்டுமா?

அருகில் இருந்தவளிடம், 'விரலுக்குத் தக்க வீக்கம் வேணுமடியம்மா. இல்லாவிட்டால் அந்த ரஜனிராஜன் கதைதான்'' என்று ரமியின் காதில் விழும்படியாகச் சொல் லவும் செய்தாளே.

தகுதியற்ற பாத்திரத்தில் பிச்சையிடுவது கூட பாடம் தானோ?

இந்தச் செலவுகளில் தன் பங்கும் உண்டு என்பது ரமி அடிக்கடி மிகுந்த அவமானத்துடன் நினைக்கும் ஒரு விஷயம்!

''அப்பா, அப்பா ஆந்திரா புயல் நிவாரணத்துக்கு அந்த லைலாவோட அப்பா இரண்டாயிரம் ரூபாய் போட் டிருக்கிறார். அப்பா. நீங்கள் நாலாயிரமாவது போடுங் கப்பா... ப்ளீஸ்பா.''

''சரிடாம்மா...''

''அப்பா, காலேஜிலே ஆடிட்டோரியம் பெரிசாகக் கட்டுகிறார்கள் அப்பா. அதிகப்படியா ஒரு ஷூ கம்பெனி பொண்ணோட அப்பா ஒன்பது ஆயிரம் நன்கொடை கொடுத்து இருக்கிறார். அப்பா நாமும் நிறையக் கொடுக்கணும் அப்பா'' என்றாள் ஒரு தரம் கொஞ்சலாக.

''சரி கண்ணம்மா'' என்று பத்தாயிரம் ரூபாய் எழுதினார் தந்தை முகம் எல்லாம் புன்னகையாக.

கல்லூரியிலேயே அதிக நன்கொடை தந்தவள் என்று தந்த சர்டிபிகேட்டைத் தந்தையிடம் பெருமையுடன் காட்டியதும் ரமிக்கு நன்றாக நினைவு இருந்தது.

அந்த சர்டிபிகேட்டின் பெறுமானம் அடுப்புப் பற்ற வைக்கும் அளவுதான் என்று அப்போது அவள் அறிந்திருக்கவில்லையே.

அவள்தான் சிறு பெண்; தெரிந்து கொள்ளவில்லை.

நாலும் அறிந்தவர்;

வெளி உலகமும் தெரிந்தவர்;

நூறு பேருக்குச் சம்பளம் கொடுத்துத் தொழில் நடத்தியவர், அவளுடைய தந்தை.

அவருக்கு ஏன் தெரியவில்லை?

வேண்டாத பல பெரிய பெரிய செலவுகளால் வீட்டின் நிதிநிலை சிதிலமடைந்து கொண்டே வந்தது அவருக்குப் புரியாமலா இருந்திருக்கும்?

புரிந்திருந்தால், இந்தச் செலவுகளை அவர் ஏன் தடுக்கவில்லை?



அவர் ஒரு வார்த்தை சொல்லித் தடுத்திருந்தால் மீறிப் பிடிவாதம் செய்யும் அளவுக்கு மூர்க்கம் படைத்தவர்கள் அல்லவே. அவருடைய மனைவியும், மகளும்...

பின் ஏன் அவர் ஒரு வார்த்தையைச் சொல்லித் தடுக்கவில்லை.

ஏனப்பா? என்று கேட்க வேண்டும் போல, அதற்கு முன்னதாக ஆயிரக்கணக்கான தடவை தவித்தது போலவே ரமியின் மனம் அன்றும் தவித்தது; துடியாய்த் துடித்தது.

ஆனால், அது சாத்தியம் இல்லாதுபோன காரணத்தால் தாளமாட்டாமல் மனம் துக்கித்தது.

ஆனால், ஆசைத் தந்தையிடம் அப்படிக் கேள்வி கேட்கும் எண்ணம் கூடத் தவறு போல ரமிக்குத் தோன்றியது.

ரமியின் தந்தை ராஜன் ஓர் இலகுவழிச் செல்லும் தன்மை படைத்தவர்தான் என்றாலும், பொறுப்பற்றவர் அல்ல.

பின்னே 'அக்கில்லஸ் ஹீல்' மாதிரி, அவரது பலவீனம் அன்புதானோ?

அந்த அளவு மீறிய அன்பினால் மறுத்துச் சொல்லும் சக்தியை இழந்துவிட்டாரோ?

அல்லது எப்படியும் சமாளித்து விடலாம் என்று எண்ணினாரோ?

செலவுக்குச் சரியான வருமானத்தைப் பெருக்கத்தான் தொழிற்சாலையை விரிவுபடுத்த முயன்றாரோ?

ஆனால் அதற்காக வாங்கிய அந்தப் பாங்கிக் கடன் பணம் என்ன ஆயிற்று?

எங்கேனும் ஏமாந்தாரோ?

யாரேனும் திருடினார்களோ?

அதுவேதான் 'ஸ்ட்ரோக்' ஆக மாறி அவரது உயிரைக் காவு கொண்டதோ? ஒரு கேள்விக்குக் கூடப் பதில் கிடைக்கவில்லையே.

சின்னஞ் சிறுமியாய் இருந்த ரமி திடுமென வளர்ந்த, வளர்ந்தாக வேண்டிய நிலைக்கு ஆளான அந்தப் பயங்கரமான நாள் ரமிக்கு நினைவு வந்தது.

நிகழப் போகும் துக்கத்துக்குக் கொஞ்சமும் அறி குறியே இல்லாமல் அழகாகவே விடிந்தது.

வழக்கம் போலவே அன்றும் காலையில் விழித்ததும் கீழ்த்திசை சன்னல் ஓரமாய் நின்று வானம் சிவந்து ஆரஞ்சு வண்ணமாகத் தங்க நிறமாகிப் பொழுது விடிவதைக் கண்டு ரசித்தாள் ரமி.

அந்த மகிழ்ச்சி சற்றும் குன்றாமலே தந்தையுடன், காரில் கல்லூரிக்குக் கிளம்பினாள்.

அன்று தந்தை சற்றே பரபரப்புற்று இருந்தாரோ?

யோசித்துப் பார்த்ததும் வித்தியாசம் தெரியவில்லை ரமிக்கு.

கல்லூரியிலும் அன்றும் ஒரே உற்சாகம்தான்.

கணக்கில் ஒரு திடீர்ப் பரீட்சையில் நூறு சதவீதம் மார்க் வாங்கினாள் அவள்.

விடுமுறை நாளில் ஐரோப்பிய சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்வது பற்றிப் பேராசிரியையோடு அரட்டை அடித்தார்கள்.



''எல்லாம் சரிதான் மிஸ். ஆனால் இந்த ரமிப் பாப்பா, அவளுடைய அம்மா, அப்பாவை விட்டு ஒரு மாதம் இருக்காதே'' என்று மலர் கேலியாகக் கூறிய போது வெட்கமாக இருந்தபோதும், பெருமையாகவே முகம் சிவந்தாள்.

அந்த குதூகலச் சூழ்நிலையைக் கலைத்தபடி கல்லூரி முதல்வரே வகுப்பறையுள் வரவும் எல்லோரும் சிரிப்பை நிறுத்தி எழுந்தனர்.

'உன் தந்தைக்கு உடம்பு சரியில்லையாம், வா நானே அழைத்துப் போகிறேன்'' என்று கூட்டிச் சென்றபோது கூட அந்த மாதிரிப் பயங்கரத்தை அவ்வளவு சீக்கிரத்தில் ரமி எதிர்பார்க்கவில்லை.

ஆனால், சாம்பலாய் வெளுத்த முகத்துடன் ஒரு மூக்குக் தவித்தபடி ஏக்கமும் வேதனையும் நிராசையு மாக அவளைப் பார்த்து, ''இனி அம்மாவை... நீ... நீ... தான்.. பார்...த்'' என்றதற்கு மேல் சொல்லிக்கூட முடிக் காமல் தந்தை இறந்தபோது அவளுடைய அன்னைக்குப் போலவே அவளுக்கும் உலகமே இருண்டு போயிற்று.

## 3



அன்று சூழ்ந்த இருள் இன்றுவரை ரமியை விட்டு விலகவில்லை.

அவளுக்கு உதயம் வரும் அறிகுறியே தெரியவில்லை.

ஆனால், இருள் மூட்டமேனும் மட்டுப்படும் என்று நினைத்தபோது இப்படி ஒரு பயங்கர மையிருட்டு வந்து

வளைத்துக் கொண்டதே; எங்கு திரும்பினாலும் ஒன்றுமே புலப்படவில்லையே என்று ரமி திகைத்தாள்.

மகளைப் பார்த்துக் கொள் என்று தாயாரிடம் தந்தை சொல்லிப் போவதுதானே இயல்பு! அதற்கு மாறாக 'அம்மாவைப் பார்த்துக் கொள்' என்று தந்தை தன்னிடம் சொன்னதன் பொருள் விரைவிலேயே அவளுக்கு விளங்கிப் போயிற்று.

ரஜனி இந்த முப்பத்தைந்து வயதிலும் குழந்தையாகவே இருந்தாள்.

பதினைந்து வயது சிறுமியாக ரஜனியைக் கண்டு ஆசை கொண்டு மணந்து அழைத்து வந்தபோது ராஜனுக்கு வயது இருபத்தி ஐந்து.

மனைவியின் கபடமற்ற குழந்தைத் தனத்திலேயே தன்னை இழந்த அவர் அவளை முதிரவிடவே இல்லை.

அவளுக்கும் அந்த அளவு கூர்மை இருக்கவில்லை.

பின்னிருந்து தாங்கும் மகாசக்தி இருந்தபோது விழாக்களையும் உதவிகளையும் சரமாரியாக முன்னின்று செய்த அவள் அந்தச் சக்தி போன பின் தனித்து நின்று செயலாற்றும் திறனே இல்லாமல் மலங்க விழித்தாள்.

வேளைக்குத் தாயின் வயிற்றுக்குள் எதையாவது கொட்டுவதே ரமிக்குப் பெரிய வேலையாகப் போயிற்று.

தன் போக்கில் திடீர் திடீர் என்று அழுவதும் அப்பா அப்படி, அப்பா இப்படி என்று புலம்புவதும், சாயங்காலம் அப்பா வருகிற நேரம் என்னால் தாங்க முடியவில்லையே என்று கதறுவதுமாக இருந்த தாயாரைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் ரமி இருந்தாள்.



இதில் தன் இழப்பை எண்ணி உரக்க அழக்கூட முடியாமல் உள்ளேயே விழுங்கிக் கொண்டு கல்லாகி விட வேண்டியிருந்தது ரமிக்கு.

தாங்க மாட்டாத துயரத்தை உள்ளே தேக்கிக் கொண்டு தாயாரையும் சமாளித்தபடி வளைய வந்த ரமியைச் சாவு வீட்டிலேயே கூடிவிட்ட கடன்காரர்களின் கூட்டம் திணறடித்து விட்டது.

'ஆயிரக் கணக்கில் அள்ளி இறைக்கும் அப்பாவுக்கு கடனா; அதுவும் இல்லையா!' என்ற அதிர்ச்சி ஒருபுறம்.

ஓயாது ஒழியாது வீட்டில் விருந்துக்கு வரும் உறவினர்களும் நண்பர்களும் தந்தையின் உடல் சென்ற வினாடியிலேயே கண் காணாது ஒழிந்து போய்விட்ட மலைப்பு ஒருபுறம்.

ரமி திகைத்தாள்.

அப்பாவுக்குப் பிறகு யார் முகம் பார்ப்பது?

வருங்கால மாப்பிள்ளை என்று வளர்த்த சுந்தரோ கடன்காரர்களை உட்கார வைத்துவிட்டு வந்து சொல்லும் ஆபீஸ் பாயாகத்தான் ஆகிப் போனான்.

அசல், வட்டி, ஒத்தி, ஈடு, ஜாமீன் பாண்டு இது எல்லாம் ஒன்றும் புரியாமல் அவள் மலைத்தபோது உலகம் அறியாத பெண்ணாயிற்றே என்று கற்றுத் தரும் அளவுக்குக் கூட யாருக்கும் கருணை இருக்கவில்லை.

திரும்பிய இடமெல்லாம் எதிர்ப்பட்டு, வாய் கிழிய இச்சகம் பேசிய, காதுவரை இளித்த உறவினரும் நண்பரும் கல் விழுந்த காக்கைக் கூட்டமாய்ப் பறந்துவிட ரமி தனியே நின்றாள்.

யாராவது இந்தக் கடன் வரவு செலவுகளை எல்லாம் சற்று ஒழுங்குபடுத்தித் தரமாட்டார்களா என்று தேடிய போதுதான் ரமிக்கு உலகம் ஒருவாறு புரிந்தது.

ராஜனின் வீட்டு வைபவங்கள் அனைத்திலும் பங் கேற்றுக் கூடவே வேலை செய்து கொண்டாடியவர் களில் மூன்று குடும்பத்தினர் முக்கியமானவர்கள்.

ராஜனுடைய ஒன்றுவிட்ட தம்பி நாதன்.

ஒன்றுவிட்ட தங்கை சரளா.

உயிர் நண்பன் வில்லியம்ஸ்.

யார் விலகிப் போனாலும் இந்த மூவரும் துணை யிருப்பார்கள் என்று ரமி நிச்சயமாக நம்பினாள்.

''இன்று வான்கோழி பிரியாணி செய்யுங்கள் அண்ணி. குடும்ப சகிதம் வரப் போகிறேன்'' என்று உரிமையுடன் உண்பவர் நாதன்.

''லாப்ஸ்டரை நெய்யில் பொரித்தால்தான் ரமிக்குட் டிக்குப் பிடிக்கும் என்று செய்யச் சொன்னேன்'' என்று பக்கத்தில் நின்று பரிமாறுகிறவர் அவர்.

சவ அடக்கத்துக்குப் பின் நாதனைக் கண்ணிலேயே காணோமே. ஒருவேளை அவருக்கு உடம்பு சரியில் லையோ என்று பார்த்து வரப் போனாள் ரமி.

வாயிலிலேயே நின்றிருந்த நாதன் அவளை உள்ளே வா என்று அழைக்கவில்லை; உட்காரச் சொல்லவில்லை.

''எனக்கு வேலை நிறைய இருக்கிறது. மூச்சுவிட நேரமில்லாமல் முழி பிதுங்குகிறது. நீ பிறகு எப்போ தேனும் போன் பண்ணிக் கேட்டுக் கொண்டு வாயேன்'' என்று விட்டேற்றியாகப் பேசினார்.



அவரது கையில் இருந்த சினிமா பத்திரிகை அவரது முழி பிதுங்கும் வேலையில் அளவை விளக்கிடவே, ரமி பிரமித்துப் போனாள்.

இரக்கம் காரணமாகவோ அல்லது பழகிய தோஷத் தாலோ அவருடைய மனைவி ஒரு தம்ளரில் ஏதோ ஜூஸ் எடுத்து வந்தாள்.

''அம்மா எப்படி'' என்று விசாரிக்கத் தொடங்கிய சித்தியை நாதனின் கடுமையான பார்வை நிறுத்தியது.

''அந்த ஜூசை இப்படிக் கொடு... காலையில் இருந்து தொண்டை ஒரே வறட்சி'' என்று தம்ளரை வாங்கிப் பருகினார்.

''என்னடி நிற்கிறாய்? மதியம் மருதூர்ப்பாண்டி வரு கிறார் என்றேன் இல்லையா? போய் வேலையைப்பார். அவர் பையனுக்கு லாப்ஸ்டரை நெய்யில் பொரித்தால் தான் பிரியம். நீயே செய். போ'' என்று விரட்டினார்.

அதே மூச்சில் திரும்பி, ''வேறு சமயம் கிடைத்தால் தானே போன் பண்ணுகிறேன். இப்போது போகிறாயா...'' என்று அவர் கேட்டு முடியும் வரையில் ரமி காத்திருக்க வில்லை.

டிரைவர் முன்னே அழ வெட்கி அவள் அடக்கி வைத்த கண்ணீர் தனியறையில் ஆறாகப் பெருகியது.

மனித சுபாவம் பற்றி அவள் கற்ற முதல் பாடம் அது.

பிறகு ஆயிரக்கணக்கில்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

ஆனால் ஒருவரை வைத்து ஊரையே வெறுப்பதா என்று ரமி சரளா அத்தை வீட்டையும் நாடிப் போனாள்.

''இவளை மருமகளாக்கிக் கொள்ள எனக்கு ஒரு வளர்ந்த மகன் இல்லையே!'' என்று காணும்போதெல் லாம் உச்சி முகர்கிறவள் சரளா.

அவள் மகள் மணி வேறு ரமியின் தோழி.

அங்கே ரமியை உட்காரச் சொன்னாள் சரளா.

காபி கூட வந்தது.

காபி கொஞ்சம் தண்ணீராக இருக்கிறதோ என்ற நினைக்கத் தொடங்கிய மனதை வக்கிரம் கொள்ளாதே என்று அடக்கினாள் ரமி.

அப்பாவைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டாள் சரளா அத்தை.

''இப்படிப் பண்ணுவாரா மனிதர்? பெண்டாட்டியோ உதவாக்கரைன்னு தெரியும், சின்னப் பிள்ளை நீ. பாவம் உன் தலையில் பொறுப்பை எல்லாம் சுமத்திவிட்டு அறிவு கெட்டத் தனமாய் உயிரை விட்டு விட்டாரே. உங்க அப்பா பொறுப்பில்லாத மனிதன்னு எனக்கு அப்பவே தெரியும்...'' என்று தொடங்கினாள்.

''ஒரு காரியம்னா அதை ஒழுங்கா அண்ணன்தான் செய்து தருவார்'' என்று இளித்து எத்தனையோ காரியங் களைச் சாதித்துக் கொண்ட அத்தை, ரமியின் மனக் கண்ணில் தோன்றினாள்.

''அண்ணி இருப்பதால் எனக்கு ஆயிரம் துணை போல'' என்று எதற்கும் அன்னையை இழுத்துச் செல் லும் அத்தை, ரமியின் நெஞ்சில் நிறம் மாறலானாள்.

இவளும் இவ்வளவுதானா?

''அப்பாவுக்குச் சாகப் போகிறோம் என்று தெரியாதே அத்தை'' என்றாள், வேண்டுமென்றே உணர்ச்சியைத் துடைத்த குரலில்.



''நான் உனக்காகத்தான் பார்க்கிறேன் கண்ணு'' என்று வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

''ஏகப்பட்ட கடனாமே, வைரம், நீலம், பச்சைன்னு அண்ணி அப்பப்போ செய்த நகைகள் இருக்குமே. கொண்டு வந்தாயானால் கல்லு விலை தள்ளி அப்படியே தங்க விலைக்கு எடுத்துக் கொள்கிறேன். என்னமோ, பாசம் விடுகிறதா பார். உன் அம்மாவுடைய தாலிக் கொடி கூட இருபத்தைந்து பவுன் ஆயிற்றே. யாரும் வாங்கவும் மாட்டார்கள். ஐந்து பத்து குறைத்து நான் வேணுமானால்...''

ரமியின் வெறுத்த பார்வையில் அந்த அம்மாவின் வாய் தானாக மூடிற்று.

உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு எழுந்து வாயிலை நோக்கி நடந்தாள் ரமி.

வாயில் வரை சென்றவளை, ''ஒரு வார்த்தை கேட்டு விட்டு போ ரமி'' என்று நிறுத்தினாள் அத்தை.

பழக்கத்தின் காரணமாக மீறிச் செல்ல முடியாமல் திரும்பினாள் ரமி.

''பாரும்மா... நாலு மணிக்கு மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள். எல்லாம் பெரிய பெரிய இடம். மாப் பிள்ளை வீட்டார் வருகிற நேரத்தில் நீயும் வந்து போய் இருந்தால்... கடன்காரன் மகள் சிநேகிதியா என்று நானில்லை... அந்த மாப்பிள்ளை வீட்டார் பேசிவிட் டால் என் மனசு தாங்கவே தாங்காது. பிரியம் வைத்த மனசு பாரு. அதனாலே கொஞ்ச நாள் இங்கே வராதே கண்ணு'' என்றாள் கொஞ்சுதலாகவே.

சிரமத்துடன் உதடுகளைப் பிரித்து, ''பயப்படாதீர்கள் அத்தை, இனி இங்கே வரமாட்டேன்'' என்று கூறி காரில் ஏறிக் கொண்டாள் ரமி.

அப்போதும் சரளா விடுவதாக இல்லை. ''சின்ன வண்டியிலேயா கண்ணு வந்தே, அதுவும் சரிதான். பெட்ரோல் செலவு குறையுமே. பெரிய வண்டியை வந்த விலைக்கு விற்று விடுவதுகூட நல்லதுதான். ஏதோ முன்னே பின்னே விலையை வைத்து நானே வாங்கிக் கொள்கிறேனே, எனக்கென்றால் அண்ணி காசே வாங்காது'' என்றாள் ஆசையில் கண்கள் மின்ன.

''ஆமாம் உதவாக்கரை அல்லவா?'' என்றாள் ரமி வெடுக்கென.

தலையைத் திருப்பிக் கொண்டு ''டிரைவர் போப்பா!'' என்று உத்தரவிட்டாள்.

சீச்சீ... மனிதர்கள் இப்படிக்கூட இருப்பார்களா?

இந்த மனிதர்கள் வீட்டிலும் நான் உண்டிருக்கிறேனே என்ன அவமானம்.

அருவெறுப்புடன் உடல் சிலிர்த்தாள் ரமி.

## 4



உறவினரின் சுவை ஒட்டுமொத்தமாய்ப் புரிந்துவிட அடியோடு வெறுத்துப் போய் விட்டது ரமிக்கு.

ஆனால், கல்லூரிக்குச் செல்லும் வழியில் மணி தன் தாய் அறியாது வந்து, ''ரமி... உன் அம்மாவிடம் பேசி



ஏமாற்றி, அரை விலை, கால் விலைக்கு உங்கள் நகைகளை எல்லாம் வாங்கிவிட வேண்டும் என்று அம்மா திட்டம் போட்டு இருக்கிறார்கள்! அம்மா வரும்போது அத்தையிடம் தனித்துப் பேசவிடாதே. ரொம்பவும் ஸாரி ரமி. என் அம்மா இவ்வளவு மோசம் என்று நான் நினைத்ததே இல்லை. ஆனால், அவர்களை மீறி, நான் இனி இங்கே வரப்போக முடியாது. நீ எப்படியாவது பழைய மாதிரி நன்றாக ஆகிவிட வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். ரமி, நான் கிளம்பட்டுமா? அம்மா வந்தால் ஜாக்கிரதையாக இரு. ஆனால் அம்மா எப்படியிருந்தாலும் நான் உனக்கு நல்லதையே விரும்பும் தோழி என்பதை மறவாதே'' என்று கண்ணீருடன் விடை பெற்றபோது, உறவிடம் பற்று விட்ட போதும் நட்பிடம் நம்பிக்கை வந்தது.

அந்த நம்பிக்கையுடன் ராஜனுடைய உயிர் நண்பராக இருந்த வில்லியம்சைப் போய்ப் பார்த்தாள்.

''நானே வரவேண்டும் என்று இருந்தேன். நல்ல வேளையாக நீயே வந்துவிட்டாய் உட்கார்'' என்று அவர் தொடங்கவும் ரமிக்கு உற்சாகம் பிறந்தது.

வரவேற்கக்கூட ஆள் இருக்கிறதே என்று உள்ளூர ஒரு மகிழ்ச்சி.

நட்பு என்றால் சும்மாவா?

வள்ளுவர்கூடச் சொல்லவில்லையா. ''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'' என்று.

வில்லியம்ஸ் அங்கிள் எல்லாம் பார்த்து சீர் செய்வார், அப்பாடி!

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், ''அங்கிள் அப்பாவின் கணக்கு வழக்கெல்லாம் எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. தலையும் புரியவில்லை. காலும் புரியவில்லை. நிறையக்கடன் வேற இருக்கும் போலத் தெரிகிறது'' என்று தொடங்கினாள்.

வில்லியம்ஸ் அவளை இடைமறித்து, ''நானும் அது விஷயமாகத்தான் வரவேண்டும் என்று இருந்தேன்'' என்று கூறித் தொண்டையைச் செறுமிவிட்டுக் கொண்ட போது கூட அவள் தவறாக ஏதும் எண்ணிடவில்லை.

நம்பிக்கையோடு அவரைப் பார்த்து ''சொல்லுங்கள் அங்கிள்'' என்றாள்.

''பாரம்மா மற்றவர்களுக்கு என் ரேட் ஐந்து சதவீதம் தான், இவனுக்கு நாலு என்று கொடுத்தேன். சரி அவன் தான் உயிரையே விட்டு விட்டான். உன் அம்மா எப் போதுமே யூஸ்லெஸ் உமன். நீயும் சிறுபெண். அதனால் மூன்று சதவீதத்துக்கு வட்டியைக் குறைக்கலாம் என்று இருக்கிறேன்.''

விலுக்கென்று நிமிர்ந்தாள் ரமி.

அம்மா எப்போதும் யூஸ்லெஸ்சாமே!

''ராஜ். உன் மனைவி மாதிரி கபடு இல்லாத மனம் உள்ள பெண் உலகில் யாருக்குக் கிடைப்பாள்? நீ மிகவும் லக்கி ஃபெல்லோ'' என்று வீட்டுக்கு வரும்போதெல்லாம் தந்தையிடம் பாராட்டியது இதே வில்லியம்ஸ் தானா என்று ஆச்சரியமாக இருந்தது.

''கபடு இல்லாத பெண்'' அப்பா இறந்ததும் யூஸ் லெஸ் உமன்'' ஆகிவிடுவாளா?

பிறகே அவர் சொன்ன ''மூன்று சதவீதம்'' மனதில் உறைத்தது.



''அது என்ன மூன்று சதவீதம்'' அங்கிள் என்று விசாரித்தாள் உணர்ச்சியற்ற குரலில்.

அவர் உள்ளே போய் ஒரு பத்திரத்துடன் திரும்பி வந்தார்.

''இதோ பார்... உன் அப்பா எழுதிக் கொடுத்த புரோ நோட்டு, நாற்பதாயிரம் ரூபாய். மாதத்துக்கு நாலு சதவீத வட்டிக்கு என்று வாங்கி இருக்கிறார். ஆறு மாதம் ஆகிறது. பைசா திரும்பவில்லை. வட்டி மட்டும் ஒன்பதினாயிரத்து அறுநூறு ஆகிறது. உனக்காக ஒரு சதவீதம் குறைப்பதால் இரண்டாயிரத்து நானூறு ரூபாய் எனக்கு நஷ்டமாகும். ஆனால் என்ன செய்வது? எனக்கோ இரக்க சுபாவம்'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

மாதம் ஆயிரத்து இருநூறு ரூபாய் என்றால் என்ன ஆகும்?

மூன்று ஆண்டுகளுக்கு முதலுக்கு மேலே பெருகி விடுமே!

இவர் ஐந்து சதவீதம். அதுவும் மாதத்திற்கு வாங்குவாராமே!

இரக்க சுபாவமே!

''சரியாகச் சொன்னீர்கள் அங்கிள். ஐந்தே வட்டி தானே வாங்குகிறீர்கள்!'' என்றாள் இனிய குரலில்.

கிண்டலை உணர்ந்து சரேல் என்று அவர் நிமிர்கையிலேயே அவளுள் வெறுத்துப் போயிற்று.

இந்தக் குத்தல் பேச்சினால் பயன் என்ன?

''மனிதனுக்குக் கஷ்டமும் நஷ்டமும் கட்டாயம் வரவேண்டும். அப்படி நிலை தாழ்ந்து நிற்கும்போது

தான் சுற்றிச் சூழ்ந்து உள்ளவர்களில் மனிதன் யார்? கழுதை யார்? என்று தெரிந்து கொள்ள முடியும்'' என்று கல்லூரித் தமிழ் ஆசிரியை ஒருதரம் வகுப்பில் சொன்னது நினைவு வந்தது.

அப்போது அவரது குரலில் நிறைந்திருந்த வெறுப்பும் இப்போது ரமிக்குப் புரிந்தது.

'பாவம் அந்த வெறுப்பின் பின்னணியாக எவ்வளவு துன்பம் அனுபவித்தார்களோ' என்று உள்ளூர இரங்கினாள்.

இப்போது, தான் அனுபவிக்கும் அளவு இருக்குமா? எப்படிப்பட்ட மனிதர்கள்!

மனிதர்களா? அப்பாவைச் சூழ்ந்து நின்று சிரித்து மகிழ்ந்தவர்களில் மனிதர் என்று அழைக்கப்படும் தகுதி வாய்ந்தவர் ஒருவர் கூட இல்லை; அது உறவில் என்றாலும் ஒட்டுமொத்தமாய் ஒன்றும் இல்லைதான்.

நெஞ்சில் நிறைந்த கசப்பை விழுங்கிக் கொண்டு, ''எப்படியாவது உங்கள் கடனைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று எழுந்தாள் ரமி.

அவர் நிம்மதியோடு மூச்சு விட்டபடி, ''ஒரு காபி குடித்து விட்டுப் போயேன் ரமி'' என்று இவ்வளவு நேரம் கழித்து உபசரிக்கத் தொடங்கினார்.

''வயிறு சரியில்லை, வேண்டாம்'' என்று மறுத்து விட்டு ரமி கிளம்பினாள்.

வீட்டுப்படி இறங்கும்போதே மீண்டும் மனதில் மலைப்புத் தோன்றத் தொடங்கி விட்டது.

எவ்வளவு கடன்?



இந்தக் கடனையெல்லாம் எப்படி அடைப்பது?

தோட்டத்தைத் தாண்டி வரும்போது பக்கவாட்டில் இருந்து சங்கேதமாக விசில் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

வில்லியம்சின் மகன் ஜேம்ஸ்.

''வில்லியம்ஸ், அவர் மனைவி, மகள்கள் எல்லாம் சரிதான். ஆனால் அந்த ஜேம்சிடம் மட்டும் நீ அதிகம் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளக்கூடாது. அவன் சரியில்லையாம்'' என்று முன்பே அவளுடைய தாயார் எச்சரித்து வைத்திருந்தாள்.

இப்போது அவன் ஏன் அழைக்கிறான்!

''என்ன ஜேம்ஸ் அண்ணா?'' என்று விசாரித்தாள்.

''வெறும் ஜேம்சோடு நிறுத்து ரமி, நான் அப்பாவிடம் சொல்லி வட்டியெல்லாம் தள்ளுபடி செய்யச் சொல்லட்டுமா?'' என்று குழைவாகக் கேட்டான் ஜேம்ஸ்.

''முடியுமா?'' என்று சந்தேகப்பட்டாள் அவள்.

''நான் நினைத்தால் முடியாதா? ஆனால் நீயும் எனக்கு இரக்கம் காட்ட வேண்டும்'' என்று பேரம் பேசினான் அவன்.

''அப்படி என்றால்?''

புரியாமல் விழித்தவளிடம் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தான் அவன்.

வளர்ந்த விதத்தில் அவனது குறிப்பின் பொருள் முழுமையாக அவளுக்கு விளங்காத போதும் ஏதோ தப்புக் காரியம் என்ற அளவில் புரிந்து கொண்டாள் ரமி.

''சீச்சீ'' என்ற சிவந்த முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே நடந்தாள்.

மனிதர்கள் என்றால் இப்படித்தானா?

எல்லோருமே பிணந்தின்னிக் கழுகுகள் தானா?

எப்பொழுது சாவு விழும் என்று காத்திருப்பார்களா?

அந்தத் தருணத்திற்காகவே நகங்களையும் அலகையும் தீட்டித் தயாராக வைத்துக் கொண்டு இருப்பார்களா?

சமயம் நேர்ந்ததும் குத்திக் குதறிக் கொத்திப் பிடுங்க ஓடி வருவார்களா?

நெஞ்செல்லாம் இரத்தக் களரியாகப் போன ரமிக்கு ஓயாமல் கிளர்ந்த கேள்விகள் இவை.

''இல்லையம்மா'' என்று சொல்லாமல் சொல்வது போலவும் சிலர் இருக்கத்தான் செய்தார்கள்... மிக மிக அபூர்வமாய்.

கீழே விழுந்தவர்களுக்குக் குழி தோண்டாமல் கை தூக்கி விடவும் மனிதர்கள் உண்டு. அவர்கள் இரக்கம் காட்ட முனைந்தபோது ரமிக்கு இன்னமும் இரு மடங்காக நெஞ்சில் வலித்தது.

''அய்யாகிட்டக்க ரெண்டு முளு நூறு ரூவா மூணாம் மாசம் வாங்கினேம்மா, இப்பத் தேவைப்படுமேன்னு கொணாந்தேம்மா... அய்யோம்மா இப்படி ஆயிட்டுதேம்மா'' என்று பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டு முகத்தை மூடிக் கொண்டு விம்மினான் ஆபீஸ் பியூன் ரங்கன்.

உடன் வந்த அவன் மனைவியின் வெற்றுக் காதுகளிலும் மூக்கிலும் வெளுப்பாகத் தெரிந்த இடங்கள் திடுமென அவன் பணம் புரட்டிய விதத்தைப் பறைசாற்றின.



மற்றவர்களிடம் ரோஷத்துடன் நிமிர்ந்திருந்த ரமிக்கு இப்போது கண்ணீரை அடக்குவது சாத்தியப்படாது போயிற்று.

பணம் வேண்டாம் என்று சொன்னால் அவள் மனம் நோகுமோ என்று தோன்றவும் கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

தன் நகைகளில் சாதாரணமான ஒரு ஜோடித் தோடுகளையும், ஒரு சேலையையும் எடுத்து வந்து கொடுத்து அவர்களை அனுப்பினாள்.

இதுபோலத் தொழிற்சாலையிலும், அலுவலகத்திலும் வேலை செய்த பலருக்கும். கணக்கில் இல்லாமல் தன் கையிலிருந்து ராஜன் நிறையப் பணம் கொடுத்து உதவியது ரமிக்கு ஓரளவுக்குத் தெரியும்தான்.

ஆனால் அவர்களில் ரங்கனைப் போலத் திருப்பித் தருபவர் யார்?

திருப்பித் தர வேண்டியவர் கண்ணில் படாமல் மறைந்து விட்டாலும் திரும்பிப் பெற வேண்டியவர்கள் நேர்மாறாக இருந்தனர்.

வீட்டின் மேல் கடன்...

தொழிற்சாலை மேல் கடன்...

புரோ நோட்டுகள்...

அட்வான்ஸ் செக்குகள்...

அப்படி இப்படி என்று புற்றீசல் போல வந்து கடன்காரர்களின் நடுவே ரமி தன்னந்தனியாக நின்றாள்.

கடனை விடவும் மனிதர்களின் சின்னப் புத்தியினால் ஏற்பட்ட இந்தத் தனிமை அவளது இளம் மனதை மிகவும் பாதித்தது.

கூட்டுப் புழுப்போல உள்ளுக்குள்ளேயே ஒடுங்க வைத்தது.

# 5



ரங்கனைப் போன்று அபூர்வமான மனிதர் இன்னொருவர் இருந்தார்.

அவரது பெயரும் ரங்கநாதன்தான்.

காரில் வந்து இறங்கிய அவர் உள்ளே வந்தபோது, 'இன்னொரு கடன்காரர்' என்ற அலுப்புடன் தான் ரமி வரவேற்றாள்.

ஆனால் அவர் வேறு சொன்னார். ''பாரம்மா மிஸ்டர் ராஜன் எனக்கு நிறைய நல்லது செய்திருக்கிறார். நான் தொழில் தொடங்கியபோது ஐம்பதினாயிரம் ரூபாயை முதலாக வைத்துக் கொள்ளுமாறு கொடுத்தார். அந்தப் பணத்தை நான் திருப்பிக் கொடுத்து விட்டேன். ஆனால் நான் அன்று பட்ட நன்றிக் கடன் நெஞ்சில் நிறைய இருக்கிறது.

''இன்றைய விவகாரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன், ஏதாவது உதவி செய்ய ஆசை. எனக்குத் தொழிலில் இப்போதுதான் ஒரு நிலைக்கு வந்து கொண்டு இருக்கும் எனக்கு பெரிதாகப் பணம் எடுத்துத் தர வசதிப் படாது. ஓரளவு தந்தாலும் அதனால் அதிகப் பயன் இராது.''

''அதனால் நான் வேறு ஒரு வழி சொல்கிறேன், இந்தக் கடன் கிடன் எல்லாவற்றையும் ஒரு வழியாக



ஒழித்து விட்டு வா. பிறகு என்னுடைய தொழிலகத்தில் ஒரு வேலை போட்டுத் தருகிறேன்.

''முதலில் கூட்டல் கழித்தலில் இருமாதம். ஐநூறு தருகிறேன். வேலையில் இருந்தபடியே டைப்பிங் படித்துக்கொள். வேலை உயரும். சம்பளமும் கூடுதலாகும்.

''பாரம்மா, இன்றைய நிலைமையில் என்னுடைய யோசனை அவ்வளவாக உவப்பாக இராதுதான். ஆனால் என்றேனும் அது நலமென்று தோன்றினால் இந்த விலாசத்துக்கு வந்து என்னைப் பார்'' என்று ஒரு விசிட்டிங் கார்டை அவளிடம் கொடுத்தார்.

''வருகிறேன்'' என்று கிளம்பியவர் சற்று நின்று, ''வேலையில் சேர்ந்த பிறகு என்னிடம் எந்த விதமான சலுகையும் எதிர்பாராதே'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அவர் சொன்னது போலவே அன்றைய நிலையில் அவரது வார்த்தைகள் அவளுக்கு உவப்பாக இல்லை தான்.

ரமி, ராஜனின் செல்லப் புதல்வி!

அவள் உடல் வலிக்கச் செய்த ஒரே காரியம் நாட்டியம் ஆடுவதுதான். அதிலும் ஒரு பிடிப்பு இருந்தால் தான்.

அவள் அடுத்தவரிடம் கூலிக்கு உழைப்பதா?

ஆனாலும் கடன் தர வேண்டும் என்று கூறாமல், நன்றிக் கடன்பட்டிருப்பதாகக் கூறுகிறாரே. அந்த ஒரு வார்த்தைக்காக அவர் தந்த விசிட்டிங் கார்டை உள்ளே எடுத்து வைத்தாள்.

ரங்கநாதனுடைய விசிட்டிங் கார்டை உள்ளே வைத்து விட்டு அவள் வரவும், அன்றைய தபாலை எடுத்து வந்து கொடுத்தாள் சின்னி.

சில ''வருந்துகிறோம்'' கடிதங்கள்.

எத்தனை பேர் மெய்யாக வருந்தியிருப்பார்கள் என்று வெறுப்புடன் எண்ணியபடி அடுத்த கடிதத்தைப் பிரித்த ரமி சட்டென நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அது வக்கீல் நோட்டீஸ்.

கடனை ஒரு மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்கா விட்டால் கோர்ட் நடவடிக்கை எடுப்பதாக அறிவித் திருந்தது அதில்.

கோர்ட் நடவடிக்கை என்றால்... பிறகு வீடு, சாமான் எல்லாம் ஏலத்திற்கு வரும்.

சினிமாக்களில் பார்க்கவில்லையா? அதுபோல அம் மாவும் அவளும் தெருவில் நிற்க, சாமான்களை ஏலம் போடுவார்கள்...

கடனை வழங்கி விட்டுத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டான். பெண்டாட் டியும் பிள்ளையும் தெருவில் நிற்கிறார்கள். 'ச்சுச்சு' என்று எல்லோரும் பேசுவார்கள்.

அவமானம் தாங்காமல் அம்மா உயிரையே விட்டு விடுவார்கள்.

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு சற்றுநேரம் அமர்ந்திருந்தாள் ரமி.

பிறகு ஓர் அவசரத்துடன் மற்ற தபால்களை எடுத்துப் பார்த்தாள்.

அன்று மட்டும் மூன்று வக்கீல் நோட்டீசுகள் வந் திருந்தன.



இன்னும் எத்தனை வருமோ?

உள்ளூர மூண்ட பயத்தில் எழுந்து தாயை நாடிச் சென்றாள்.

அங்கே கணவனின் கோட்டில் கன்னத்தைச் சாய்த்து விண்ணை வெறித்துக் கொண்டிருந்த தாயைக் கண்டு நெஞ்சு வலிக்க மீண்டும் திரும்பி வந்தாள்.

இந்தப் பிரளய பயங்கரத்தில் மீளும் முயற்சியாக யாரா வது ஏதேனும் செய்வது என்றால், அது, தான்... தான் மட்டுமே தான் செய்தாக வேண்டும் என்பது அப்போது ரமிக்கு நன்றாகப் புரிந்தது.

மனிதர்களின் சின்னப் புத்தியினால் ஏற்பட்ட இந்த தனிமை முதலில் வேதனையைத் தந்தபோதும் பிறகு அந்தப் பாராமுகமே நிமிர்ந்து நின்று தாங்கும் திடத் தையும் தந்தது.

''நான் என்ன சின்னப் பாப்பாவா?'' எனக்கும் பதினெட்டு முடிந்து விடவில்லையா?'' என்று எண்ண வைத்தது.

ராஜனுடைய வக்கீலையும் ஆடிட்டரையும் வர வழைத்துப் பேசினாள்.

ஒருவர் கையை விரித்தார்.

அடுத்தவர் தோளைக் குலுக்கினார்.

இருவருமே ''நாங்கள் அப்போதே சொன்னோம்'' என்ற பல்லவியைத்தான் பாடினார்கள்.

''அது போகட்டும் விடுங்கள். இனி என்ன செய்வது, அதை மட்டும் சொல்லுங்கள்'' என்றாள் ரமி.

''உன் அம்மாவை ஐ.பி. கொடுக்கச் சொல், நீ இப் போது தான் மேஜர் ஆகியிருக்கிறாய். 'என் சம்மதத்தின்

பேரில் வாங்காத கடன்களுக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. தாயைப் பிரிந்து வெளியேறி விட்டேன்' என்று ஓர் அறிவிப்புக் கொடு. உன் பெயரில் இருக்கும் சொத்துக்கள், நகைகள் மிஞ்சும்'' என்று ஆலோசனை கூறினார் வக்கீல்.

ரமி குழப்பத்துடன் அவரைப் பார்த்தாள். ''பி.. பிறகு என்ன ஆகும்?''

''என்ன ஆகும்? பிரமாதமாக ஒன்றும் இல்லை. உன் அப்பா, அம்மா பெயரில் உள்ள சொத்துக்கள் ஏலத்தில் வரும். ஏலத்தில் கிடைத்த பணத்தைக் கடன்காரர்கள் விகிதப்படி பிரித்துக் கொள்வார்கள் வெளியே தெரியாமல் உன் அம்மாவைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம்'' என்றார் வக்கீல் விட்டேற்றியாக.

''அப்படியானால் வாங்கிய கடனை முழுமையாகத் திருப்பித் தராமல் அப்பா ஏமாற்றியதுபோல் ஆகுமே. அப்படித் தானே எல்லோரும் சொல்வார்கள்?'' என்று கவலையுடன் கேட்டாள் ரமி.

அவர் தோளைக் குலுக்கினார். ''மற்றவர்கள் பேச்சைப் பார்த்தால் பணம் மிஞ்சாது. உன் பணம் நிலைப்பதற்குரிய வழியைத்தான் சொன்னேன்!'' என்றார்.

பணத்துக்காகப் பெற்ற தாயை விலகுவதா? பேணி வளர்த்த தந்தையைப் பிறர் ஏசக் கேட்பதா? பெரிய பணம்.

சட்டென நிமிர்ந்து, ''என் பணம் என்று நான் ஒரு பைசாகூடச் சம்பாதித்தது கிடையாது வக்கீல் சார்... எல்லாம் என் அப்பா ஈட்டியதுதான்'' என்றாள் ஆத்திரத்துடன்.



அவர் சலனமற்று, தன் கை நகங்களை வெகு கவனத்துடன் பரிசீலித்தார்.

வெறுப்பையும் சினத்தையும் விழுங்கியபடி ''எல்லாவற்றையும் விற்றேனும் கடனை எல்லாம் கொடுத்துவிட வேண்டும். மற்றபடி நீங்கள் சொன்னது நடக்க முடியாத காரியம்'' என்றாள் அழுத்தமாக.

''அவசரத்தில் விற்றால் அரை விலைதான் போகும்'' என்று எரிச்சலாக மொழிந்தார் ஆடிட்டர்.

''பரவாயில்லை சார். எப்படியேனும் எல்லாக் கடனும் ஓயவேண்டும். ஒருவருக்குக் கூட இல்லை என்று சொல்லி விடக்கூடாது. என் அப்பா மானஸ்தர், நேர்மை தவறாதவர் அந்தப் பெயருக்கு இழுக்கு நேர நான் விடமாட்டேன்'' என்று உறுதியுடன் பகர்ந்தாள்.

''நீயும் உன் தாயாரோடு நடுத் தெருவில் நிற்பதானால் அது உன் இஷ்டம். அத்தோடு இந்த மாத பீஸ் எனக்கு இன்னமும் வரவில்லை. அதை முதலில் அனுப்பி வை'' என்று கூறிவிட்டுக் கிளம்பினார் வக்கீல்.

* * *

அன்றிரவு முழுவதும் ரமி தூங்கவில்லை.

ஏன், படுக்கையில் அமரக்கூட இல்லை.

குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டவாறே தீவிரமாகச் சிந்தித்தாள்.

தாயின் அறைக்குச் சென்று அவளைச் சற்று நேரம் வெறித்துப் பார்த்தாள்.

இன்னமும் துயிலில் பச்சைக் குழந்தைபோல இருந்த தாயின் முகம் அவளைச் சற்றே சலனப்படுத்தியபோதும் எடுத்த முடிவில் இருந்து அவள் பிறழவில்லை.

தொழிற்சாலை, வீடு, அங்கங்கே கிடந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்க ஏற்பாடு செய்தாள்.

''வீட்டை விட்டுப் போவதா? அய்யய்யோ, உன் அப்பா வின் அறையை விட்டு நான் எப்படி வருவேன்?'' என்று அழுத தாயிடம் பொறுமையாக ஒரு குழந்தைக்குச் சொல்லுவது போல விவரம் கூறி விளக்கினாள்.

வீடு, நிலம், கார், டி.வி. ஃபிரிஜ் எதையும் விட வில்லை. வைரமும் பச்சையும் அடிமாட்டு விலைக்குப் போயின.

அப்போது ரமி தயங்கவில்லை.

பொருளாகவோ, பொருளை விற்றுப் பணமாகவோ வந்த கடன்காரர்கள் அத்தனை பேருக்கும் இல்லை எனக் கூறாமல் கொடுத்துத் தீர்த்தாள்.

ஜரிகைச் சேலைகளையும், தினுசு தினுசாகத் தைத்த உடைகளையும் கூட விடவில்லை.

கடனை எல்லாம் கொடுத்துத் தீர்த்துவிட்டு அந்த ரங்கநாதனிடம் சென்றாள்.

அவர் சொன்னதுபோல மாறாமல் வேலை கொடுத்தார்.

ஐஸ் வாட்டர், டி.வி. புரோகிராம் என்று தாய் ரஜனி புலம்பினால், ரமி தட்டிக் கொடுப்பாள்; தன் ஏக்கத்தை மறைத்துக் கொண்டு தாயைச் சமாதானப்படுத்துவாள்.

## 6



எப்படியோ ஒரு வழியாக மீண்டு விட்டோம் என்று அவள் நினைத்தபோது அந்த நினைப்பைத் தவிடு



பொடியாக்கும்படி இவ்வளவு காலம் கழித்து இப்படி ஓர் இடியா?

மின்னாமல் முழங்காமல் திடுமெனத் தலையில் வந்து வீழ்ந்த இந்தப் புதிய இடியில் ரமி வெகுவாகத்தான் கலங்கிப் போனாள்.

பிறந்ததிலிருந்து அனுபவித்து வந்த அத்தனை சுகங்களையும் எந்த ஒரு லட்சியத்துக்காக இழக்க முடிவு செய்து ஆயிரம் அவமானங்களுக்கும் வேதனைகளுக் கும் இடையே அந்த முடிவை நிறைவேற்றியும் வைத் தாளோ அந்த லட்சியம் இடிந்து தூளாவதை அவளால் தாங்க முடியவில்லை.

நயா பைசாகூட அப்பா ஏமாற்றிவிட்டுப் போய்விட வில்லை என்று ஒன்றை நிலைநாட்டுவதற்காக இழந்த பொருட்களும் அடைந்த மனவேதனையும் கொஞ் சமா....?

எல்லாவற்றையும் விற்றுக் கடனை அடைப்பது என்று முடிவெடுப்பது சுலபம்தான். ஆனால் நிறைவேற்றுமுன் படும் வேதனை கொஞ்சமா?

கார்களை விட்டு விட்டு பஸ்சுக்காகக் காத்து நின்று ஏறிக் கூட்டத்தில் நசுங்கும்போது, அரையடி அமுங்கும் மெத்தையை விட்டுவிட்டு வெறும் பாயில் படுக்க நேர்ந்தபோது...

பெரிய தோட்டத்தையும், ஏசி அறைகளையும் விடுத்து ஒற்றை அறையில் குளித்தபோது...

உள்ளம் துள்ளிக்கொண்டா இருக்கும்?

அவளை விடவும் வேதனையோடு மணி வந்து, ''உன் பச்சைக்கல் செட்டை அம்மாவிடம் அநியாய விலைக்குக்

கொடுத்து விட்டாயே ரமி!'' என்று அங்கலாய்த்த போதுகூட ரமி அதிகம் கலங்கி விடவில்லை.

அந்த நகைகளைத் தந்தையும் தாயுமாகப் பரிசளித்த நிகழ்ச்சி மனதில் உறுத்தியபோதும் ''எல்லாக் கடன் களையும் உண்ட கடனைக்கூடத் தீர்த்து விடவே விரும்புகின்றேன் மணி'' என்று அமைதியாகவே பதில் சொன்னாள்.

''நான் மட்டும் உன் வீட்டில் உண்ணவில்லையா?'' என்று தொடங்கிய மணிமேகலையின் முகம் சட்டெனக் கன்றியது. ''புரிகிறது ரமி. அத்தைபோல என் அம்மா வஞ்சகமற்று உணவு தரவில்லை அதுதானே... ஆனால் ஆனால்... என்னை அம்மாவோடு சேர்த்துவிடாதேடி'' என்று அவள் அழுதபோது ரமிக்கும் கண்ணீர் வரத்தான் செய்தது.

ஆயினும் கலங்கிவிடவில்லை.

ஆனால் பிற்பாடு முளைத்த சில்லரைக் கடன்களுக் காக வேளை ஒருவிதமாக அணிந்த உடைகளைக் கூட விற்க நேர்ந்தபோது அவமானமாக உணர்ந்தாள்.

அதிலும் அப்படி விற்ற உடையை ஒரு மாதிரி நடத்தை உடைய பெண்ணின் உடலில் பார்க்க நேர்ந்த போது... அவளுடன் வந்தவனின் கை அந்த உடை மீது விளையாடியதைக் கண்டு விட்டபோது வெகுவாகக் கூசிப் போனாள்.

இதுபோல மனது கலங்கும் சமயங்களில் இதெல்லாம் ஒன்றுமே இல்லை. நிஜமாக ஒன்றுமே இல்லை. அப்பா கடன்காரராகச் சாகவில்லை. அவர் ஏமாற்றுக்காரர் அல்ல என்பது மட்டும்தான் முக்கியம்... என்று ஒரு மந்திரம் போல தனக்குத்தானே சொல்லித் தேறினாள்.



இல்லாவிட்டால் ஏசி அறையில் தனக்கென ஒரு மினி பிரிட்ஜ் வைத்துக் கொண்டு வாழ்ந்தவர்களுக்குச் சமையல் கட்டும் ஓர் அறையுமான சின்னப் போர்ஷனில் வசிப்பது முடியக்கூடிய காரியமா?

லட்சியத்தை நிறைவேற்றி விட்டோம் என்ற ஒரே திருப்தியுடன், மற்றவரின் கேலி, கிண்டல், ஏளனம், இரக்கம் எதுவுமே இதயத்தைத் தொட முடியாதபடி கடினமான உறையெழுப்பி அதன் பின்னே கூட்டுப் புழுப்போல ஒடுங்கி வாழப் பயின்று விட்டிருந்தாள்.

அவ்வப்போது தாயாருக்குத் தெரியாமல் வந்து போகும் மணி, ''உன் பக்கத்திலேயே நின்றால் கூட நீ எங்கேயோ தொலை தூரத்தில் இருப்பது போலத் தெரி கிறதே. ரமி முன்னெல்லாம் தனியாக இருந்து நினைத் தால் கூட நீ கூடவே இருந்து சிரிப்பது போல இருக் குமே, அதுபோல எல்லோரையும் சேர்த்து இழுத்துச் சிரிக்க வைக்கும் உன் சிரிப்பை இனிமேல் பார்க்கவே முடியாதா?'' என்று புலம்புவது உண்டு.

சொத்து சுகங்களைப் போலவே சிரிப்பு, கலகலப்பு போன்ற இயற்கை வரங்களைக்கூட விட்டிருந்தாள்.

தந்தை ஏமாற்றுக்காரர் என்று பெயர் வந்துவிடக் கூடாது என்று அத்தனை நலங்களின் இழப்பையும் சகித்தாள்.

கடைசியில் தாயார் ஏமாற்றுக்காரி என்று சிறைக்குச் செல்லவா இத்தனை பாடும் பட்டாள்!

நினைத்த நேரம் விழித்து, ஒரு கவலை, வேலையில் லாமல் சிட்டுக் குருவிபோலச் சிறகடித்த காலம் எல்லாம் ரமிக்கு இன்று நினைவு வந்தன.

இப்போதைய வழக்கமும் கூடத்தான்.

காலையில் எழுந்ததும் அவசரமாகச் சமையலை முடித்து தாய்க்கு உதவி செய்தபடியே குளித்துக் கிளம்பி அலுவலகம் செல்வதும், மாலையில், 'டிபன் செய்கிறேன்' என்று அம்மா எதைக் காலி செய்திருப்பார்களோ என்று அஞ்சிக் கொண்டே வருவதுமாகக் கழியும் இன்றைய நாட்கள்!

இப்போது அந்த அச்சம்கூட அதிகம் பாதிப்பது இல்லை அச்சப்பட்டு ஆவது என்ன? மிச்சம் மீதி... இருப்பதைக் கொண்டு மாதத்தை ஓட்டியாக வேண்டும். அவ்வளவுதானே? என்ற அலுப்பு உடலிலும் உள்ளத்திலும் ஊறி விட்டது.

தலைக்கு மேல் போய்விட்ட வெள்ளம், இதில் சாண் என்றும் முழம் என்றும் அளவென்ன?

ஆனால் ஒன்று, சாண் என்றால் அவ்வப்போது எம்பிக் குதித்தேனும் மூச்சு எடுத்துக் கொள்ளலாம். முழம் என்றால் மூழ்குவதுதான் விதி.

இப்போது அதற்கும் மேலே மீட்டர் கணக்கில் என்கிறானே அத்தான்.

''பாவி, இப்படிச் செய்து விட்டானே?''

ஆனால் அவனை நினைத்தாலும் ரமிக்குப் பாவமாகத் தான் இருந்தது.

ரமியின் தந்தை இருந்தபோது... அவன் ராஜா வீட்டுக் கன்றுக்குட்டிதான்.

சகோதரிக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக அவனை உரிய காலத்தில் தன் மாப்பிள்ளை ஆக்கிக் கொள்ளவே ராஜன் எண்ணியிருந்தார்.



ஆனால் உரிய காலம் வரும்முன் அவர் காலமே முடிந்துவிடும் என்று யாருக்குத் தெரியும்?

இப்போது இந்த ஒரே அறை வீட்டில் அவனுக்கு இருக்க இடம் ஏது?

எங்கோ ஓர் ஒட்டலில் அறை எடுத்து இருக்கிறானாம்.

அவ்வப்போது ஏதாவது வாங்கிக் கொண்டு வருவான்... ஆப்பிள்... பால்கோவா என்று.

தாயார் ரசித்து உண்பதைக் காணுகையில் ரமிக்கு நெஞ்சமெல்லாம் வலிக்கும்.

இப்போது அந்த அம்மாவையும் சேர்த்து மாட்டி வைத்து விட்டானே!

அவனைக் குற்றம் சொல்வதற்கும் இல்லைதான்.

புற்றீசலாகக் கிளம்பிய கடன்காரர்களில் சிலர் அவனையும் மொய்த்தார்களாம்.

விற்பதற்கு ஒன்றும் இல்லையா என்று திணறிய போது ஆவடிக்கும் தூரமாய். அப்பா மொத்தமாய் வாங்கிப் போட்ட பத்து மனை நிலம் நினைவுக்கு வந்ததாம்.

ராஜன் தன் பெயரிலும் தன் வருங்கால மருமகனின் பெயரிலுமாக வாங்கியிருந்த நிலம் அது.

பத்திரத்தைத் தேடிப் பார்த்திருக்கிறான். கிடைக்க வில்லை.

ஏதோ அவன் தேடிய நினைவு ரமிக்குக் கொஞ்சம் உண்டுதான்.

காணாமல் போகவே புதிதாக சர்ட்டிஃபைட் காப்பி எடுத்து அந்தப் பத்திரத்தைக் காட்டி நிலத்தை விற்று இருக்கிறான்.

விற்பனைப் பத்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அத்தானுடைய கையெழுத்தோடு அம்மாவின் கையெழுத்தும் கூட.

இப்போது பழைய மூலப் பத்திரத்துடன் ஒருவர் வந்து நிற்கிறாராம்.

வேறு யாருமல்ல கவுதமன்தான்.

ராஜன் கவுதமனிடம் அந்த நிலத்தை ஒத்தி வைத்து இருபது ஆயிரம் ரூபாய் பெற்றிருந்தாராம்.

பாவி மனிதர். அப்போதே வந்திருக்கக் கூடாதா? ஏதோ ஒரு வழியில் அவர் கடனையும் தீர்த்திருக்கலாம்.

இவ்வளவு மாதங்கள் கழித்துப் பணம் பண்ண எந்த வழியும் இல்லாதபோது...

ஒருவேளைச் சாப்பாட்டை வேண்டுமானாலும் விடுத்து மாதம் நூற்றைம்பதாகக் கொடுத்துத் திருப்புவதாக அவரிடம் சுந்தரைக் கேட்கச் சொல்லியிருந்தாள் ரமி.

அவன் அசையவே இல்லை என்று வந்து விட்டான் சுந்தர், வட்டிகூடக் கட்டாதாம். வழக்குப் போட்டு இருவரையும் உள்ளே தள்ளியே தீருவேன் என்றாராம்.

கணவனோடு வீட்டையும், சுகபோகங்களையும் இழந்ததையே தாங்க மாட்டாமல் அவ்வப்போது குழந்தை போல விழிக்கும் அம்மா... சிறையில் எப்படி? கடவுளே, கடவுளே, கடவுளே!

ரமியின் உடம்பு முழுமையும் பனிக்கட்டியாகக் குளிர்ந்து போயிற்று.

வேதனைப்பட்டபடியே வீடு வந்து சேர்ந்த மகளை வாய் நிறையச் சிரிப்புடன் எதிர்கொண்டாள் தாயார்.



''என் ரமிக் குட்டிக்கு நாளை மறுநாள் என்ன விசேஷம் என்று நினைவிருக்கிறதோ?''

தலை நிமிராமல் ''இல்லை'' என்பது போலத் தலை அசைத்துவிட்டு ரமி உள்ளே சென்றாள்.

சிறையில் இப்படிச் சிரிக்க முடியுமா?

''என்னடா நீ? உன் பிறந்த நாளைக்கூட மறப்பாயாக்கும்? முன்பெல்லாம் ஒரு மாதத்துக்கு லூட்டி அடிப்பாய்...''

முன்பெல்லாம்... அது இந்தப் பிறவியில் தானா?... தொலைகிறது...

''அப்பாவும் நானும் உனக்குத் தெரியாமல் ஆயிரம் திட்டம் போட்டுப் பரிசு வாங்குவோம்...''

தாயார் கண்களைத் துடைப்பதைக் கண்டு ஒரு கணம் தயங்கியவள் மேலே நடந்து முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

சிறு கவலையுடன் அடுப்படியை எட்டிப் பார்த்தவளுக்கு அங்கே புதிதாக ஒன்றும் இல்லாததைக் கண்டு நிம்மதி உண்டாயிற்று.

வழக்கம்போல பாட்டிலில் இருந்த வேர்க்கடலையில் கொஞ்சத்தை ஒரு சிறு தட்டில் எடுத்து வைத்தாள்.

ஒரு கப் காபியைக் கலந்து காபியோடு கடலையையும் எடுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்தாள்.

கடலையைக் கொறித்தவாறே காபியை அருந்தலானாள்.

''உம்... இன்றைக்கு வேர்க்கடலைதான் டிபன், நாளை மறுநாள் பாதாம் அல்வா'' என்றாள் ரஜனி குதூகலமாக.

''வேண்டாம்மா வீண் செலவு'' என்று இயந்திரமாய் ரமியின் வாய் முணுமுணுத்தது.

'அவன் என்றைக்குப் போலீசிடம் போவான்? ஒரு வாரம் தவணை என்றானாமே. வாரம் என்ன வருடமே தந்தாலும் வழி இல்லையே...' என்று மனம் உழன்றது.

''என்னடி வீண் செலவு? தினமுமா செய்கிறோம். அல்லது கொஞ்சம் முந்திரியும் கோலாவுமா அரைத்துச் செய்யலாமா? அதையும் வேண்டாம் என்று சொல்லிடாதேம்மா, ப்ளீஸ்... கண்ணு...'' என்று கொஞ்சலாகக் கேட்டார் தாயார்.

''நாளைக்குப் பார்ப்போம்'' என்று நகர்ந்து விட்டாள் ரமி.

அந்த அளவில் ஆறுதல் அடைந்த ரஜனியின் பேச்சு தொடர்ந்தது. ''ரமி, இன்றைக்கு காய்கறி வாங்கப் போன போது நம் குணாளன் அம்மாவைப் பார்த்தேன். காரில் அழைத்துப் போய் இறக்கி விடுகிறேன்'' என்றாள். இந்தச் சின்ன வீட்டை அவள் பார்த்தால் நம் கவுரவம் என்னாவது? இன்னமும் நிறையச் சாமான் வாங்க வேண்டும் என்று டபாய்த்து விட்டேன்'' என்றாள் பெருமையாக.

'சின்ன வீடே கவுரவக் குறைச்சல் என்றால் சிறை? அம்மா, இதை நீங்கள் எப்படித் தாங்குவீர்கள்?' வேதனையில் கண் அகல அன்னையை வெறித்தாள் மகள்.

''என்னடி என்னவோ போலப் பார்க்கிறாயே!'' என்றாள் தாயார் பயந்து போய்.

விழிகளைத் தாழ்த்தி, ''ஒன்றும் இல்லை அம்மா லேசாகத் தலைவலி'' என்று சமாளித்தாள் ரமி.



''அய்யய்யோ! தலைவலியா படுக்கையில் படுத்துக் கொள் கண்ணு. டாக்டர் பாண்டியனை வந்து பார்க்கச் சொல்லட்டுமா?'' என்று பதறினாள் தாயார்.

டாக்டர் பாண்டியன், ஒரு தடவை வந்து போக நூறு ரூபாய் வாங்கும் பெரிய டாக்டர்.

இந்த அம்மா எப்போது விழிக்கப் போகிறாள்? எப்போது நிகழ்காலத்துக்கு வரப் போகிறாள்?

ரமிக்கு மெய்யாகவே தலையை வலித்தது. ''இப்போது லேசான தலைவலிதான் அம்மா. மாத்திரை போட்டுக் கொண்டால் சரியாகிவிடும்'' என்று தாயாரை சமாதானப் படுத்தியவளாய் ஒரு மாத்திரை விழுங்கி விட்டுப் படுக்கையில் விழுந்தாள் ரமி.

உள்ளும் புறமாய் முழுமையாகக் களைத்திருந்த உடல் உறக்கத்தில் ஆழ்ந்தது.

என்ன உறங்கினாலும் பொழுது விடிகையில் விழிக்கத் தானே வேண்டியிருக்கிறது.

கண்களில் தூக்கம் கலைகையிலேயே வேதனை நெஞ்சை அரிக்கத் தொடங்கியது.

பழக்க தோஷத்தில் அவளது உடல் தன் போக்கில் வேலையைச் செய்து கொண்டு இருந்தபோது சுந்தர் வந்தான்.

''அத்தை இந்தாருங்கள் உங்களுக்குப் பிடித்த ஸோனே அல்வா'' என்று ரஜனியிடம் பார்சலைக் கொடுத்தான்.

அவன் குரல் உரத்து ஒலிக்கவும் ரமி ஆச்சரியத்துடன் தன் அத்தான் முகத்தைப் பார்த்தாள்.

அந்த முகத்தில் இன்று வரையில் கப்பியிருந்த கவலை கலைந்து வழக்கமான அலட்சிய நோக்கும் சிரிப்பும் குடி புகுந்திருந்தன.

அப்படியானால்!?

மீள வழி கிடைத்து விட்டதா?

# 7



சுந்தரின் முகத்தில் ஒரு வார காலமாகக் காணப்பட்ட பயமும் கவலையும் மறைந்து விட்டிருந்ததைக் கண்டதும் ரமியின் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த சுமையும் சட்டெனக் கரைந்து ஒரு கண் இதயம் இலேசாகிப் போயிற்று.

ஆனால்,

கண் இமைக்கும் நேரத்திற்குள் பல காத தூரம் கடுகிச் சென்று திரும்பும் வல்லமை கொண்ட குரங்கு ஆயிற்றே மனம். அந்த வினாடி நேரத்திற்குள் விடுதலைக்கு உரிய ஒவ்வொரு வழியையும் அலசிப் பார்த்து ஓய்ந்து தொய்ந்து விடவும் மறுபடி பாரம் பழைய இடத்தில் ஏறி விட்டது.

அசையாமல் நின்ற ரமியிடம் வந்தான் சுந்தர்.

''ரமி உன்னிடம் சற்றுத் தனியே பேச வேண்டும். அடுத்த தெரு பூங்கா வரை வருகிறாயா?'' என்று வினயத்துடன் வினவினான்.



பழைய புலம்பலை இன்னொரு தரம் கேட்க வேண்டுமா? அம்மாவின் முன்னிலையில் என்றால் அதிகம் புலம்ப மாட்டான்.

''என்ன அத்தான். இங்கேயே பேசேன்'' என்றாள் ரமி சிரத்தையற்று.

ஒரு சிறு தட்டில் கொஞ்சம் ஸோனே அல்வாவை விண்டு வைத்துக் கொணர்ந்தாள் தாயார்.

சின்னவர்களின் பேச்சைக் கேட்டவளுக்குச் சிரிப்பு வந்தது. ''உனக்குப் பிறந்த நாள் பரிசு கொடுக்கக் கூப்பிட்டிருப்பான். என் எதிரில் எப்படிப் பேசுவானாம். அதை எல்லாம்'' என்று சிரித்தாள்.

''சாப்பிடப்பா'' என்று உபசரித்தாள்.

உடனே, ''தனியே அங்கே இங்கே சுற்றுவது எல்லாம் இப்போ வேண்டாம்பா அதெல்லாம் உங்கள் கல்யாணத்துக்குப் பிறகுதான் கவனம்'' என்று கண்டிப்புடன் முடித்தாள்.

திருமணமா?

ரமியின் உதடுகள் லேசாக நெளிந்தன.

இப்படி நீட்டின இடத்தில் எல்லாம் கையெழுத்தைப் போட்டு விட்டுக் கல்யாணம் வேறா?

முன்தினம்தான் மனம் தாங்காமல், ''ஏனம்மா அத்தான் சொன்ன இடத்தில் கையெழுத்துப் போட்டீர்கள்?'' என்று ரமி தாயிடம் கேட்டது உண்டு.

''நான் என்னடி செய்யட்டும்? நீயும் தான் நிறையக் கையெழுத்துப் போடச் சொன்னாய் போடவில்லையா? அவனும் உன்போல நம் வீட்டுப் பிள்ளைதானே. அவனுக்கு மட்டும் போடக் கூடாதா?'' என்று ரஜனி

திருப்பிக் கேட்கவும் இந்தப் பச்சைப் பிள்ளையிடம் இனி பேசிப் பயன் இல்லை, என்று வாயை மூடிக் கொண்டாள்.

அப்போதைக்கு சுந்தரும் அதற்கு மேல் ரமியிடம் ஏதும் பேசவில்லை.

தன் மாமன் மனைவியிடம் சிறிது நேரம் 'ஜோக்' அடித்து விட்டுக் கிளம்பிப் போய் விட்டான்.

ஆனால், சற்றுப் பொறுத்து ரமி அலுவலகத்துக்குக் கிளம்பிச் சென்றபோது காத்து நின்றவன் போல வந்து வழி மறித்தான்.

''கொஞ்சம் சீக்கிரமாகக் கிளம்பி வரக்கூடாதா. நான் பேச வேண்டும் என்றேனே'' என்று சிடுசிடுத்தான்.

''எனக்கு அலுவலகத்துக்கு நேரமாகிறது'' என்றாள் ரமி சுருக்கமாக.

உடனே நிறம் மாறி ''ஓர் ஐந்து நிமிடம்தான். ரமி ப்ளீஸ்...'' என்று குழைந்தான் சுந்தர்.

பேசாமல் உடன் சென்றாள் ரமி.

பூங்காவில் ஆள் நடமாட்டம் இல்லாததோர் இடத்தை அடைந்ததும், ''ரமி, அத்தையும் நானும் தப்பிப்பது இப்போது உன் கையில்தான் இருக்கிறது'' என்றான் அவசரமாக.

''என் கையிலா? நான் என்ன செய்ய முடியும்? நூறு இருநூறு என்று திருப்புவதற்கு ஒப்புக் கொள்ளவில்லை என்றாயே ஒருவேளை ஏதேனும் நோட்டு மாதிரி எழுதி தரச்...''

''ச்சு அதெல்லாம் வேண்டாம்'' என்று பொறுமையற்றுக் கைகளை உதறினான் அவன்.



உடனே குரலில் குழைவுடன் ''கவனமாகக் கேள் ரமி. இப்போது நம்மிடம் பணம் இல்லை. விற்கவும் பெருமதியான பொருள் எதுவும் இல்லை. உன் வீட்டு வாடகைக்கும் உங்கள் இரண்டு பேர் சாப்பாட்டுக்குமே உன் சம்பளம் கட்டி வருவதில்லை. என் கதை அதைவிட கேவலம். அதனால் பணத்தைக் கொடுத்து விடுவது எந்த வகையிலும் முடியாத காரியம்'' என்று பெரிய பீடிகையுடன் தொடங்கினான்.

''அரைத்த மாவையே அரைக்கத்தான் அழைத்தாயா?'' என்று உட்கார்ந்திருந்த பலகையில் இருந்து அலுப்புடன் எழப் போனாள் ரமி.

''சற்றுப் பொறுமையாகத்தான் கேளேன் ரமி. இது ஒரு ''பெமிஸ்வ் ஏஜ்'' பழைய காலத்தில் பார்த்தாலே குற்றம் என்று இருந்தது. இப்போது அப்படி இல்லை... ஏன் அப்போதும்கூடக் குந்தியையும் திரௌபதியையும் யாரும் குற்றங் கூறியது இல்லை. இப்போதோ எப்படி எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கும் காலம். எத்தனை பேருடன் போனாலும் மன்னித்து ஏற்றுக் கொள்கிற காலம். ஆசைக்காக, வசதிகளுக்காக என்றெல்லாம் தவறினால் கூடத் தப்பாக எடுப்பது இல்லை.''

பொருள் விளங்காமல் வெறித்த ரமியின் நேர் பார்வையில் சற்றுத் தயங்கி நிறுத்தினான் சுந்தர்.

கையைத் திருப்பி மணியைப் பார்த்துவிட்டு ''சீக்கிரமாகச் சொல்லி முடி'' என்றாள் ரமி.

''நான்... நான் சொல்வது என்னவென்றால் அற்பக் காரணங்களுக்காகச் செய்வதையே தவறாக எண்ணாத இந்தக் காலத்தில் இது ஒரு வகை தியாகம் என்று ரமி

உன்னை மணந்து கொள்ளப் போகிற நானே அனுமதி கொடுக்கும் போது...''

''கல்யாணமா? முக்கால் சாப்பாடு சாப்பிடுவது கூடப் பிடிக்கவில்லையா?'' என்றாள் ரமி வறட்சியாக.

''காலம் இப்படியே இருந்து விடாது ரமி. மாமாவின் விருப்பம் தெரியும் அல்லவா? என்றைக்கானாலும் எனக்கு நீ, உனக்கு நான். இப்படிப்பட்ட நானே சரி என்று அனுமதிக்கும்போது... இதில் தப்பே இல்லை ரமி.''

வேகமாக ஒரு பெருமூச்சு விட்டாள் ரமி. ''இப்படி எல்லாம் பூடகமாகப் பேசினால் எனக்கு ஒன்றும் புரிய வில்லை. என்ன விஷயம்? எது தப்பு? ஏன் அனுமதி? எல்லாம் விவரமாகச் சொல், ஆனால் விரைவாகச் சொல்லு. தாமதமாகப் போனால் அரை நாள் சம்பளம் வெட்டி விடுவார்கள்'' என்றாள் மூளத் தொடங்கிவிட்ட எரிச்சலுடன்.

கண்களில் கோபம் மின்ன ஒரு கணம் உதடுகளை அழுந்த மூடினான் சுந்தர்.

பிறகு, ''இன்று காலையில் மிஸ்டர் கவுதமன் என்னை கூப்பிட்டு அனுப்பினார்'' என்றான் மொட்டையாக.

யோசனையுடன் நிமிர்ந்தாள் ரமி. அந்த... அந்த...

''ஆமாம், அந்த கவுதமனேதான்... மூலப்பத்திரத்தை வைத்திருப்பவர்.''

மேலே என்ன என்பதைப் போல அவன் முகத்தைப் பார்த்தாள் ரமி.

கொஞ்ச நாளாக ஏற்பட்டு விட்ட வழக்கத்தை ஒட்டி அந்தக் கணத்திலும் அவள் மனது தனியே சென்று நின்று அவளை ஆராய்ந்தது.



பழைய ரமியானால் இப்போது எத்தனை கேள்வி களைக் கொட்டி இருப்பாள்!

''எதற்காக அழைத்தார்?''

''ஏன் அழைத்தார்?''

''என்ன சொன்னார்?''

''சொல்லு சொல்லு. அய்யோ சீக்கிரம் சொல்லேன்... உடனே சொல்லா விட்டால் என் நெஞ்சு பட்டென்று வெடித்து விடுமோ'' என்றெல்லாம் குதித்திருப்பாள்.

இவளுக்கு மூச்சில்கூட வேகம் வரவில்லையே.

இந்த மந்தம், மரப்பு எல்லாம் என்றேனும் போகுமா? போகவே போகாதா?

''கவனிக்கிறாயா, ரமி!'' என்ற சுந்தரின் எரிச்சல் உற்ற குரல் கடுப்புடன் கேட்கவும் திடுக்கிட்டு மீண்டும் நிமிர்ந்தாள்.

''ம்... சொல்லு...''

''நேற்று பஸ் ஸ்டாப்பில் நீ என்னுடன் பேசியதை அவர் பார்த்தாராம்.''

''எவர்... ஓ... சரி சரி.. அப்புறம்!''

''.........''

''சொல்லேன், அத்தான். எனக்கு நேரம் ஆகிறது என்றேனே...''

சட்டென அவன் கொட்டி விட்டான். ''இன்றிரவு நீ அவர் வீட்டில் தங்கினால் எல்லாவற்றையும் தந்துவிடு கிறாராம்.''

'என்ன தைரியம்? யார் என்று நினைத்தான் ராஸ்கல். பட்டென்று பல்லெல்லாம் கழன்று விழும்படி வாயில்

ஒன்று போடுவதற்கு என்ன' இதெல்லாம் பழைய ரமியுடையவை.

இந்த ரமிக்கு சுத்தமாக எதுவும் தோன்றாமல், மூளையிருந்த இடம் வெறுமையாகி விட்டாற் போல இருந்தது.

கண்களில் இன்னமும் கனம் ஏற அவன் முகத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ரமி, இதற்கு மட்டும் சம்மதித்தால் எல்லாம்... எல்லாமே சரியாகிவிடும். பாரேன், இருபது ஆயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். அதற்கு வட்டியும் கொடுக்கத் தேவையில்லை. எந்த நேரம் போலீஸ் வருமோ, மோசடிக்காகக் கைது செய்யுமோ என்ற பயம் வேண்டாம், நானோ அத்தையோ சிறைக்குச் செல்ல வேண்டியிராது.''

அவன் பேச்சில் அந்தக் கடைசி வாக்கியம் ரமியின் கடினமான மண்டை ஓட்டைத் தாண்டி மூளைக்குப் போய்ச் சேர்ந்தது.

'அம்மா சிறைக்குச் செல்லாமல் மீள முடியும்.'

சின்ன வீட்டை எண்ணிச் சிணுங்கும் தாயாரை சிறையில் மனம் உடைந்து போகாமல் மீட்க முடியும்.

ஆனால்... அவன்...

ரமி யோசிப்பதைக் கண்டதும் சுந்தர் ஓர் ஆர்வத்துடன் அவள் கையைப் பற்றி சொல்லிக் கொண்டே போனான். ''ரமி, வேறு யாரேனும் என்றால் பிற்காலம் கெட்டுப் போகுமோ என்று பயப்பட வேண்டியிருக்கும்தான். ஆனால் உன்னை மணக்கப் போகிறவனும் நான்தானே. நான் ஒரு நாளும் உன்னை இதற்காகப் பழிக்கப் போவது,



இல்லை. பார்க்கப் போனால் கோவில் கட்டிக் கும்பிட வேண்டும். பெரிய பெரிய பெரிய பத்தினிகள் எல்லாம் கணவனுக்காக உயிரையும் பொருளையும்தான் கொடுத்தார்கள். நீயோ வருங்காலக் கணவனுக்காக...''

அவன் தன்னிலேயே நின்றான்.

''அதை விடு அத்தான்'' என்றாள் ரமி அசட்டையாக, கையை உருவிக் கொண்டு, ''அம்மாவுக்கு அதற்கு மேல் ஆபத்து இராதே'' என்று கேட்டாள்.

''சத்தியமாக இராது'' என்றான் அவன் வேகமாக. ''நிச்சயமாய் ரமி. அவர் உன்னிடமே அந்தப் பத்திரம் நோட்டு எல்லாவற்றையும் ரத்து செய்து கையெழுத்து போட்டுத் தந்துவிடுவதாகச் சொல்லுகிறார். அவர் வாக்குத் தவறுகிறவர் அல்ல. நிச்சயம் தருவார். ஒவ்வொருவர் வேலைக்காக நகைக்காக என்று 'கம்பெனி' கொடுக்கப் போகிறார்கள். நீயோ அத்தானைக் காப்பாற்ற ஒரு தியாகமாக...'' தலை தப்பப் போகிறது என மகிழ்ச்சியில் அவன் அடுக்கலானான்.

''ச்சு'' என்று எழுந்தாள் ரமி. ''எனக்கு ஆபீசுக்கு நேரமாகிறது.''

''ரமி ரமி, முடிவாக... முடிவு சொல்லவில்லையே?'' என்றான் அவன் மீண்டும் பற்றிய பயத்துடன்.

அருகே இருந்த பூ ஒன்றை அதன் அழகை உணராமலே வெறித்தாள் ரமி.

பார்வையைத் திருப்பாமலே, ''அம்மாவை மீட்க வேறு வழி இல்லை அல்லவா?'' என்று கேட்டாள்.

''ஒன்றுகூட இல்லை ரமி. உனக்குத் தெரியாதா? ஒரு வழியும்...''

''பின்னே சரி'' என்று கூறிவிட்டுத் திரும்பி நடக்க லானாள் ரமி.

# 8



''பின்னே சரி.''

சுந்தருக்குச் சில விநாடிகள் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

ரமி இவ்வளவு எளிதாக சம்மதித்து விடக்கூடும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

அவளிடம் ஆயிரம் ஆயிரம் விதமாய் வாதாடி, கெஞ்சி, மிரட்டி அதன் பிறகுதான் வழிக்குக் கொண்டு வர முடியும் என்று எண்ணியிருந்தான்.

ஆனால் என்ன ஆச்சரியம்!

அத்தையின் வளர்ப்பு முறை சுந்தர் அறிந்ததே.

எல்லாவற்றிலும் மெழுகாய் இளகும் அத்தை ரஜனி இதில் மட்டும் கருங்கல்.

வருங்காலக் கணவன் மனைவி என்று முத்திரை குத்தியிருந்த போதிலும் ரமியை அவனோடு ஒரு சினிமாவுக்குச் செல்லக்கூட அவள் அனுமதித்தது இல்லை.

ஏன், தனியே இரண்டு வார்த்தை பேசக்கூட அனுமதித்தது இல்லை.

இருவரது அறைகள்கூட எதிர்க்கோடிகளில்தான்.

ஒருவேளை இருவருமாக முயன்றிருந்தால் பேசிக் கொள்ளவே முடிந்திருக்கும்.



ஆனால் ரமி காதல் கலையின் அரிச்சுவடி கூட அறிந்தவள் இல்லை.

ஒரு சின்ன கண் ஜாடையைக் கூடக் கண்டு கொண்டவள் இல்லை.

கிணற்று வெள்ளம்தானே, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றே சுந்தரும் நினைத்து வேறு இடங்களில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான் - பிறர் அறியாமல்தான்.

இப்போது ரமி இவ்வளவு இலகுவாகச் சம்மதம் கூறவும் 'ஏமாந்து விட்டோமே' என்று தோன்றியது.

இந்த ஓர் ஆண்டில் இவ்வளவு மாற்றமா?

அலுவலகம் சென்று வருகிற பெண் யாரிடம் எப்படி நடந்தாளோ என்று சில கணங்கள் கலங்கினான்.

ரமி மாறியிருப்பதே இன்றைய இக்கட்டுக்கு நன்மை என்பதை உணர்ந்தான்.

பழைய ரமியை இந்த ஏற்பாட்டிற்கு இணங்க வைப்பது சூரியனை மேற்கே உதிக்க வைக்கும் கதைதான்.

நல்ல காலம்தான் என்று மூச்சு விட்டுக் கொண்ட சுந்தர் காரியத்தைச் சூட்டோடு சூடாக முடிக்க எண்ணினான்.

அவளோடு இணைந்து நடந்தபடி மேலே பேசினான்.

''இரவு ஒன்பது மணிக்கு அவர் வீட்டில் இருக்க வேண்டும் ரமி. நீ சிரமப்படாதே. மாலையில் நானே வந்து உன்னை அழைத்துப் போகிறேன். ச்சோ! அத்தை என்னோடு தனியே உன்னைவிட மாட்டார்களே... ஆனால் ஒரு கதை கட்டலாம். அத்தையிடம்... ஆங் உன்

தோழி பாலிகா என்று ஒருத்தி உண்டே, அவளுக்கு உடம்பு சீரியஸ் என்றும், உன்னையே தேடுகிறாள் என்றும் சொல்லி விடலாம். காலையில்தான் திரும்பி விடலாமே. அத்தையைச் சமாளிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டு விடு ரமி, நீ கவலையே பட வேண்டாம். எல்... லாம் நான் பார்த்துக் கொள்வேன்'' என்றான் பிரமாதமாக.

வெற்று வேட்டு முழங்கியது.

ஆனால் ரமிக்கு எதுவும் மனதில் பதியவில்லை. எல்லாம் ஏதோ பொய்யாக வெறுமையாகத் தோன்றியது.

''சரி, சரி'' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்து பஸ் நிறுத்தத்தை அடைந்தாள்.

வேலை நேரம் முழுமையும் அவள் மண்டையுள் புழுப்போல ஒன்று குடைந்து கொண்டே இருந்தது.

எல்லாவற்றையும் இழந்த போதும் இழக்காத ஒன்றை... உயிரைக் கொடுத்தேனும் பாதுகாக்க வேண்டிய ஒன்றை இழக்கப் போகிறோம் என்ற நினைவுதான் குடைந்ததோ?

ஆனால் இழப்பு ஒன்றும் புதிது இல்லையே.

உயிருக்கு உயிரான தந்தை, உண்டு உறங்கி இருந்த வீடு, ஓடி விளையாடிய தோட்டம்... உடுத்தி மகிழ்ந்த ஆடை அணிகள்...

இப்போது கடைசியாக மீந்திருக்கும் அம்மாவையும் இழந்து விடாமல் இருப்பதற்காக இதை இழக்க வேண்டியிருக்கிறது.

அவ்வளவுதான்.

மேலும் கழுதையும் குட்டிச் சுவரும் போல என்றேனும் ஒரு நாள் சுந்தரரோடுதான் அவளது வாழ்வு இணையப் போகிறது.



அவனே... பாதுகாக்கவும் போற்றவும் வேண்டிய அவனே... இழப்பை சிபாரிசு செய்கையில் அவள் மட்டும் மறுகுவானேன்?

இப்போது மறுத்து விடுவதால் ''கற்புக்கரசி'' என்று கொண்டாடிவிடப் போகிறார்களா அல்லது கனகாபிஷேகம்தான் செய்துவிடப் போகிறார்ளா?

குறைந்த பட்சம் அம்மாவைத்தான் விட்டு விடப் போகிறார்களா?

தொலையட்டும்.

பத்தோடு பதினொன்றாக இதுவும் தொலையட்டும்.

தப்புத் தப்பாக டைப் அடித்திருந்த காகிதத்தை வெறுப்புடன் கசக்கிக் குப்பைக் கூடையில் போட்டு விட்டு மீண்டும் முதலிலிருந்து தொடங்கினாள் ரமி.

கவனம் முழுமையாக வேலையில் ஈடுபட மறுத்ததால் வேலை நேரம் முடிந்த பிறகும் வேலை முடிய மறுத்தது.

ஆனால் வேலையில் பாக்கி வைக்கும் பழக்கம் இல்லாதவள், ஆகையால் கையிலிருந்த வேலையை முடித்து விட்டு அவள் கிளம்பியபோது மணி ஆறாகி விட்டது.

அப்போதும் வீடு செல்ல மனம் இன்றி ஒரு பஸ்ஸை வேண்டுமென்றே தவற விட்டுவிட்டு அடுத்ததில் சென்றாள்.

வீட்டில், அடுப்படியில் இருந்த பால்கோவா வில்லைகளைக் கண்டதும் கொஞ்சம் திடுக்கிட்டாள்.

அதற்குள் அன்னையின் விளக்கம் வந்தது.

''சுந்தர் வாங்கி வந்தான் ரமிம்மா. நாளைக்கு உன் பிறந்த நாள் அல்லவா? அன்றைக்கு இனிப்பு உண்டால் ஆண்டு முழுவதும் இனிமையாக இருக்குமாம். அதுதான் வாங்கி வந்திருக்கிறான். இன்றைக்குக் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுகிறாயா?''

ரமிக்கு வாய் கசந்தது.

''வேண்டாம்'' என்று தலையசைத்து விட்டு தனக்குக் காபியைக் கலந்து எடுத்தாள்.

காபியோடு முன்னறைக்குச் சென்ற மகளோடு கூடவே சென்றாள் ரஜனி.

சிரமப்பட்டு முகத்தில் கடுமையை வரவழைத்தபடி ''மணி என்ன ஆயிற்று தெரியுமா? ஐந்து மணிக்கு முடிகிற ஆபீசில் இருந்து வீடு வந்து சேர இரண்டு மணி நேரமா? வயதுப் பெண் என்கிற நினைவு இருக்கிறதா இல்லையா?'' என்று அதட்டினாள்.

ரமி தாயை வெறித்துப் பார்த்தாள்.

எதற்கும் குழையும் தாயார் இதில் மகா உறுதி.

தாவணி போட்ட புதிதில் டிரைவரிடம் சற்று நேரம் தனிமையில் பேசியதற்காக முதன் முறையாக மகளை அடித்திருக்கிறாள்.

ஒழுக்கத்தைப் பற்றி மறைமுகமாகவும் நேராகவும் ஆயிரம் வகையில் வற்புறுத்தி வளர்த்தவள் அவள்.

அப்படி வளர்ந்த மகள் இன்று செய்யப் போகும் காரியம்?

''என்னடி, நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன் நீ பாட்டில் சும்மா விழித்துக் கொண்டு நிற்கிறாயே?'' என்று விரட்டினாள் தாய்.



''பஸ்செல்லாம் ஒரே கூட்டம். இடமே கிடைக்க வில்லை அம்மா?'' என்று மெல்ல முணுமுணுத்து விட்டுக் காபியை அருந்தத் தொடங்கினாள் மகள்.

''அதுதானே பார்த்தேன்'' என்று அதற்குள் முகம் மலர்ந்தது ரஜனிக்கு.

உடனேயே... ''அட'' என்று கையை உதறினாள்.

''வீட்டுக்காரம்மா நீ வந்ததுமே மேலே வரச் சொன் னார்கள். நான் மறந்தே போனேன் பார். பாவம் ஏதாவது மூட்டு வலி வந்திருக்கும். போய்ப் பார்த்து ஏதாவது உதவி செய்து விட்டு வாம்மா'' என்றாள் தொடர்ந்து.

தாயின் பேதமை நிறைந்த முகத்தைப் பார்த்துக் கொண்டு ரமியாலும் அங்கே இருக்க முடியவில்லை.

மீதி காபியை வேகமாக விழுங்கித் தம்ளரைக் கழுவி வைத்துவிட்டு மாடிக்குப் போனாள்.

அங்கே வீட்டுக்காரத் தெரஸா அம்மாள் முழங்காலைப் பிடித்துக் கொண்டு நீள சோபாவில் சாய்ந்திருந்தாள்.

பழக்கத்தினால் நேரே அலமாரியில் இருந்த தைலத்தை எடுத்து வந்து அந்த அம்மாளின் கால்களில் இதமாகத் தேய்த்து விட்டாள் ரமி.

''தட்டிக் கொட்டி எல்லா வேலைகளையும் பார்த்தீர் களா ஆன்ட்டி? வேலைக்காரி வரவில்லையா? நான் வரும் வரை பொறுத்திருக்கக் கூடாதா?'' என்று மெல்லக் கடிந்தவள் அந்த அம்மாள் செய்து முடிக்காமல் விட் டிருந்த சில்லரை வேலைகளைச் செய்து கொடுத்தாள்.

''எங்கள் யேசு உனக்கு அருள் செய்வாரம்மா'' என்று ரமியின் கைகளைப் பற்றி கண்களில் ஒத்திக் கொண்டார் அந்த அம்மாள்.

'எங்கள் முருகன் என்றாலும் சரி, உங்கள் யேசு என்றாலும் சரி. யாரால்தான் எனக்கு என்ன அருள் செய்துவிட முடியும்?' என்று கசப்புடன் எண்ணினாள் ரமி.

ஒருவேளை ஏதேனும் விபத்து நிகழ்ந்து உயிர்கியிர் போய்விடுமா? சேச்சே, உயிர் போனால் என்ன பயன்? அதனால் அம்மாவைக் காப்பாற்றிவிட முடியுமா என்ன? அல்லது... ஒருவேளை இந்த ஒரு வழிகூட ஆண்டவனின் அருள் தானோ!

சிலகணம் மூச்சு விடுவதும் அவளுக்கு சிரமமாகிப் போயிற்று.

அதற்கு மேல் அவளால் அங்கேயும் நிற்க முடியவில்லை.

முயன்று லேசாக முறுவலித்தபடி ''வரட்டுமா ஆன்ட்டி?'' என்று எழுந்து கீழே சென்றாள்.

* * *

சுந்தருக்கு வெகு அவசரம் போலும்.

அல்லது ரமியின் மனம் மாறிவிடக் கூடாது என்று எண்ணினானோ?

ரமி படியிறங்கிக் கீழே தங்கள் பகுதியுள் சென்றபோது அவன் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

ரமியைக் கண்டதும், ''அய்யோ பாரேன் ரமி. உன் சிநேகிதி அந்த பாலிகா இல்லை. அவளுக்கு ஆக்சிடென்டாமே. அவள் அந்த வடகத்திப் பெண்தானே. ஒரே வெள்ளையாய், கண் பிரவுன் கலராய் நன்றாகச் சிரிப்பாளே, சின்னப்பிள்ளை கை காலுக்கு ஒன்றும் இல்லையேப்பா... கடவுளே, முருகா...'' என்று புலம்பியபடி கண்ணீர் வடித்தாள் ரஜனி.



''கை காலுக்கு ஒன்றும் இல்லை அத்தை. நெஞ்சில் அடியாம். லேசாக நினைவு வந்தால் 'ரமி ரமி' என்று புலம்புகிறாளாம். அவள் அண்ணன் சொன்னான். ரமியைப் பார்த்தால்தான் பிழைப்பாள் என்று டாக்டர் சொல்லி விட்டாராம். நானே ரமியை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லி சமாதானப்படுத்தி அனுப்பினேன். கிளம்புகிறாயா ரமி?''

அவன் சரமாரியாகப் புளுகுவதையும் தன் அப்பாவி அன்னை அதைக் கொஞ்சமும் சந்தேகியாமல் அப்படியே நம்புவதையும் பார்த்துக் கொண்டு ரமி அசையாமல் நின்றாள்.

''இரவில்... தனியே... நானும் கூட வரட்டுமா சுந்தர்?'' என்று வினவினாள் ரஜனி.

சுந்தரின் முகம் கறுப்பதை ஒருவிதக் குரூர திருப்தியுடன் கண்டாள் ரமி.

அவன் உடனே சுதாரித்துக் கொண்டான். ''இல்லை அத்தை தீவிர கணகாணிப்பு அறைக்குள் வைத்து இருக்கிறார்கள். ரமியை மட்டும்தான் அறைக்குள் விடுவார்கள்... நானானால் கேட்டுக்கு வெளியே என்றாலும் நின்று காத்திருந்து ரமியை அழைத்து வந்து விடுவேன். நீங்கள் வந்தால் என்னோடு நிற்கலாம்தான். ஆனால் மாமாவுக்குத் தெரிந்தவர்கள் யாரும் பார்க்க நேர்ந்தால் இரவு நேரத்தில் நடுத்தெருவில் நீங்கள் நின்றதாகப் பேசுவார்களே...'' என்றெல்லாம் பேசி அந்த உத்தமியை நடுங்கச் செய்தான்.

''அய்யோ'' என்று முகம் வெளுத்தாள் ரமியின் அன்னை. ''நீ என்ன கண்ணா சொல்லுகிறாய்? தனியாகச் செல்ல உனக்கு பயமாக இருக்காதா?'' என்று மகளிடம் திரும்பினாள்.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு பேசாமடந்தையாக நின்றாள் மகள்.

''அவளுக்கு இந்தச் செய்தியே பெரிய அதிர்ச்சி. அவளிடம் போய்க் கேட்கிறீர்கள். அங்கே அந்தப் பெண் பிழைப்பது இவள் போனால்தான் சாத்தியம். அவள் இறந்தால் அவளுடைய தாயாரும் போய்விடுவாள் என்று அந்தப் பாலிகாவின் அண்ணன் சொன்னான். இரண்டு உயிர்களைக் காப்பாற்றுவது... இப்போது ரமியின் கையில்தான் இருக்கிறது. காப்பாற்றப் போகிறாயா? அன்றி இரண்டு பேரை அழிக்கப் போகிறாயா ரமி!'' என்று பொடி வைத்துப் பேசினான் சுந்தர்.

அப்போது ரமி பேசாமலே நின்றாள்.

ஆனால் அதற்குள்ளாகத் தன் பூஞ்சை மனம் உருக ''என்னப்பா சுந்தர், இப்படிப் பேசுகிறாய்? ஓர் உயிரைக் காப்பாற்றுவது என்றால் ரமி பின் வாங்குவாளா? தன்னால் ஆன அத்தனையும் செய்ய மாட்டாளா? ரத்தம் கித்தம் தேவைப்பட்டாலும் கொடுத்து அந்தப் பெண்ணை பிழைக்க வைக்கப்பார், ரமிம்மா'' என்று கூறி மகளின் கைப்பையை எடுத்து வந்து கொடுத்தாள் ரஜனி.

காப்பாற்றப்பட வேண்டிய பெண் நீங்கள்தான். அதற்காக கொடுக்கப்பட வேண்டியது வெறும் வெறும் இரத்தம் அல்ல. வேறு என்று உண்மையைச் சொன்னால் இந்த அன்னை எப்படிப் பேசுவாள்?



சே! தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டாள் ரமி. என்ன பயனற்ற எண்ணங்கள்!

* * *

சுமார் எட்டரை மணி அளவில் கவுதமனின் வீட்டு வரவேற்பறையில் ரமியை விட்டுவிட்டு வெளியேறினான் சுந்தர்.

அவனாக அங்கிருந்து சென்றிருப்பானோ என்னவோ, ''அந்த அம்மாவை மட்டும் உட்கார வைக்கும்படியாகத்தான் எனக்கு உத்தரவு'' என்று தலைமைப் பணியாள் போலத் தோன்றிய ஒருவன் அழுத்தமாகச் சொன்ன பிறகு அதற்கு மேலும் நிற்க இயலாமல்தான் சுந்தர் போனான்.

சுந்தர் சென்ற பிறகு நீண்ட கண்ணாடித் தம்ளரில் ஸ்டிராவோடு குளிர்பானம் ஒன்றைக் கொணர்ந்து வைத்து விட்டுப் போனான் அந்தப் பணியாள்.

அந்தப் பானத்தைத் தொட்டுப் பாராமல் நுரை ரப்பர் மெத்தையிட்ட சோபாவின் மென்மையில் பின்னே சாய்ந்து களைப்புடன் கண்களை இறுக மூடிக் கொண்டு அமர்ந்தாள் ரமி.

மிருதுவாக அணைக்கும் மென்மையான மெத்தை.

கிட்டத்தட்ட ஓர் ஆண்டுகாலமாக மிகவும் முயன்று கிட்டத்தட்ட மறந்தே விட்ட சுகங்களில் ஒன்று.

அந்தப் பழைய சுகத்துள் புதையுண்டு கிடக்கையில் தன் இதயத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த இறுக்கம் மெல்லத் தளர்வதை அவள் உணர்ந்தாள்.

இதே போன்று சோபாக்களில் அவற்றின் சுகத்தை உணராமல், ரசிக்காமல், போற்றாமல் விழுந்து எழுந்தது

எல்லாம் மூடியிருந்த இமைகளின் பின்னே படமாக ஓடியது.

வீட்டுக் கீரை.

உரிமை உள்ள பொருளின் அருமை இழந்த பிறகு தான் முழுமையாகப் புரிந்தது.

ஆனால் இன்று...

சட்டென்று நெஞ்சுக் குழிக்குள் குளிர் நடுங்கியது.

எழுந்து எட்டாத தூரத்துக்கு ஓடிவிட வேண்டும் போல உள்ளம் பதறியது.

தன்னை அறியாமலே கண்களை நிமிர்த்தி வாயிலைப் பார்த்தாள்.

அங்கே - அவன் நின்று கொண்டு இருந்தான்.

## 9



முன்பின் பார்த்து அறிந்திராத போதும் அங்கே நின்றவன்தான் கவுதமன் என்பதை ரமி உணர்ந்தாள்.

இவன் எவ்வளவு நேரமாக இங்கே நின்றிருக்கக் கூடும்.

அந்த சோபாவில் அவள் சுருண்டு கிடந்து கண்களை மூடி... இருபது நிமிடம் இருக்குமோ?

ரமி பார்ப்பதைக் கண்டதும் லேசாகக் கறுத்திருந்த உதடுகளில் முறுவலுடன் உள்ளே வந்தான் அவன்.

''நான் கவுதம்'' என்று வலக்கரத்தை நீட்டினான்.



அவனது முறுவலுக்குப் பதிலாகப் புன்னகை புரிய முயன்றும் முடியாமல் தோற்று மெல்ல எழுந்தாள் ரமி.

''நான்... என் பெயர் ரமி'' என்றாள் சின்னக் குரலில்.

''பொருத்தமான பெயர்...''

அவன் பார்வை விகாரமற்ற ரசனையுடன் அவள் மேனி மீது படர்ந்தது.

லேசாகச் சிவந்த கன்னங்கள் தவிர மற்றபடி ரமி அசையாமல் நின்றாள்.

இவனோடு கை குலுக்க வேறு வேண்டுமோ என்று மனம் சஞ்சலப்பட்டது.

ஆனால் அவன் அவளது தயக்கத்தைக் கவனியா தவன் போல அந்தச் சிறு முக்காலியின் கண்ணாடி மேற் பரப்பில் இருந்த தம்ளரைக் கையில் எடுத்து முகர்ந்து பார்த்தான்.

''அன்னாசி பிடிக்காதா? சொல்லியிருந்தால் வேறு கொணர்ந்திருப்பானே, சுகன்'' என்றான் சாதாரணமாக.

என்ன சொல்லுவது என்று புரியாமல் ரமி தயங்கி நிற்கையில் தம்ளரை மீண்டும் கீழே வைத்து விட்டு நிமிர்ந்து, ''எதிர்பாராதபடி சற்று தாமதம் ஆகிவிட்டது'' என்றான் லேசாக மன்னிப்பு கோருவது போல.

ரமி திகைத்தாள்.

கொலைவாளைக் கையில் வைத்திருப்பவன் போல இல்லையே இவன் பேச்சு.

ஆனால்... ஆனால் இவர்கள் இப்படித்தான் பேசுவார் களோ? இவர்கள் வழக்கம் எல்லாம் அவளுக்குத் தெரி யாதே.

மனம் கலங்கியது.

அவன் குரல் எங்கிருந்தோ கேட்டது. ''நான் இன்னமும் சாப்பிடவில்லை. இருவரும் சேர்ந்தே சாப்பிடலாமா?''

''என்ன? ஓ சரி சரி.''

சாப்பிடும்போது... அதாவது அவன் உண்ணும்போது இவள் உண்ண முயன்றபோது, அவன் என்னென்னவோ பேசினான்.

சிங்கப்பூர், சிலோன் என்று என்னவோ கேட்டது.

இடையே திடீரென்று 'சுவை உனக்குப் பிடிக்கவில்லையா?' என்று வினவினான்.

''சாப்பிடவேயில்லை.''

''ஓ'' என்று அவள் விழுங்க முயன்றபோது தொண்டையில் சிக்கியது.

உடம்பெல்லாம் பரவி இருந்த இறுக்கம் தொண்டையைச் சின்னதாக்கி விட்டதோ என்று நினைத்தபடி தண்ணீரை குடித்து விழுங்கி முடித்தாள்.

கீழ்க்கண்ணால் அவன் ஒரு பார்வை பார்த்ததை அவள் கவனிக்கவில்லை. கவனிக்கும் சக்தியும் அவளுக்கு இல்லை.

உணவின் பின்னர் இவன் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

ஒரு பெரிய அறையை ஒட்டியிருந்த பால்கனிக்குச் சென்றார்கள்.

ஒரு பணியாள் வந்து இரு ஐஸ் பக்கெட்டுகளையும் ஒரு கிண்ணத்தையும் அங்கே கிடந்த டீபாயின் மேல் வைத்தான்.



''இனி நீ வரவேண்டியது இல்லை'' என்று அவனை அனுப்பி விட்டு ரமியின் புறம் திரும்பினான் அவன்.

''உட்காரேன்.''

பொம்மை போல அவள் ஓர் ஒற்றை சோபாவில் அமரவும் அவனது ஒரு புருவம் லேசாகத் நெரிந்தது.

திரும்பி ஐஸ் பக்கெட்டுகளைத் திறந்தான்.

ஒன்றில் ஐஸ்கிரீமும் மற்றதில் அதோடு சேர்க்கும் பழத்துண்டுகளும் இருந்தன.

''உணவின் பிறகு இது ஒரு பழக்கம் எனக்கு'' என்று தன் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு உண்ணலானான்.

'இது ஒன்றுதானா?' என்று ரமியின் மனம் கேட்டது.

இல்லை என்பதுபோல, ''ஒரு நிமிடம்'' என்று உள்ளே சென்றான்.

உள்ளிருந்து இசை மென்மையாக ஒலிக்கவும் திரும்பி வந்தான்.

டீனா சார்லஸ்!

ரமிகூட இதே 'காஸெட்' வைத்திருந்தாள்.

''இனிமையான குரல், இல்லையா?''

''உம்.''

''உனக்கு 'ஒஸிபிசா' பிடிக்குமா?''

''சிலது மட்டும்.''

''எதெல்லாம்?'' என்று விடாமல் கேட்டான் அவன்.

புருவத்தைச் சுருக்கி யோசித்துவிட்டு, ''நினைவில்லை'' என்றாள் அவள்.

மீண்டும் தன் கிண்ணத்தைப் பழத் துண்டுகளால் நிரப்பியவன் கால்பாகம் கூடக் காலியாகாத அவளது கிண்ணத்தைக் காட்டி ''ஏன்?'' என்றான்.

அவள் பதில் கூறாமல் ஒரு திராட்சையைக் கரண்டியால் உருட்டினாள்.

அதற்கு மேல் பேச்சுக் கொடுக்க முயற்சி செய்யாமல் தன் கிண்ணத்தில் இருந்த பழங்களை நிதானமாகக் காலி செய்தான்.

வெற்றுக் கிண்ணத்தை டீபாய்மேல் வைத்துவிட்டு அவள் இருந்த சோபாவின் கைமீது அமர்ந்தான்.

சற்றுநேரம் அசைவற்றுப் போன ரமியின் கைக்கரண்டி மீண்டும் பழத்தை அளைந்தது.

பொறுமை இழந்தவன் போல அவள் கையில் இருந்த கிண்ணத்தையும் கரண்டியையும் வாங்கிக் கீழே வைத்தான்.

''என்ன நினைத்துக் கொண்டு இங்கே வந்தாய்?'' என்றான் சிறு சினத்துடன்.

பெரிய கண்களில் திகைப்புடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் ரமி.

சட்டென அவளை இழுத்து அணைத்து உதடுகளில் அழுந்த முத்தமிட்டான் கவுதமன்.

தன் கன்னிமைக்குத் திடீரென்று நேர்ந்த இந்த முதல் தாக்குதலில் ரமி முதலில் உணர்ந்தது பெரும் பிரமிப்பே.

அவன் தொட்டதும் தன்னை அறியாமல் உடல் கூசியவளுக்குப் பின்னர் ஒன்றும் புரியாமல் கண்ணை இருட்டியது.



எண்ணி வந்தது போலப் பல்லைக் கடித்து சகிக்கவோ உதறவோ, விலக்கவோ எதுவும் தோன்றாமல் அவள் மலைத்தபோது, சிறைப்பட்ட வேகத்திலேயே விடுதலையும் கிட்டி விட்டது.

கால் தடுமாறி விழப் போனவளை ஒரு கையால் பற்றி நிறுத்திவிட்டு அவன் மீண்டும் உள்ளே போனான்.

பிறகுதான் தன் கை கால்கள் நடுங்குவதும் நெஞ்சுக்குள் ரயில் தடதடப்பதும் மூச்சு வாங்குவதும் ரமிக்குப் புரிந்தது.

நிற்க முடியாமல் கால்கள் துவளவும் அருகில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

கடவுளே! அவளால் எப்படி முடியும்?

முடியாது என்று கூறி வெளியேறினால், பலவந்தமாகத் தடுக்கக் கூடியவன் போல அவனைப் பார்த்தால் தெரியவில்லை அல்லது தடுப்பானோ?

ஆனால் அப்படி வெளியே சென்று விட்டால், பிறகு அம்மா.

பழைய கதையேதானே?

தோற்றவளாய்த் தலையைக் கையில் தாங்கிச் சோர்ந்தாள் ரமி.

அடுத்த சில நிமிடங்களில் சிகரெட்டின் மணம் நாசியில் படவே, ரமி நிமிர்ந்தாள்.

சிகரெட்டுக்காகத்தான் போனானா?

அதற்காக மட்டும் இல்லை என்பதுபோல அவளிடம் ஒரு கப்பை நீட்டினான்.

''இதைக்குடி...''

''எ... என்னது...''

''சூடான பால் குடி'' என்றான் கொஞ்சம் அதட்டலாக.

மீறும் துணிவின்றிக் குடித்தாள்.

கப்பை வைக்கத் திரும்பியபோதுதான் அவன் தன்னையே பார்த்தபடி நிற்பது தெரிந்தது.

அவள் பார்வையில்... ஒரு வியப்பும் சிறு பரிதாபமும் போலத் தெரிகிறது என்று எண்ணும்போதே அவை மறைந்தும் போயின.

யோசனையோடு அவளைப் பார்த்து, ''உன் வருங் காலக் கணவன் சுந்தர்தானா?'' என்று விசாரித்தான்.

இந்தக் கூத்துக்கெல்லாம் பிறகு வேற கதி என்று வெறுப்புடன் நினைத்தாள் ரமி.

''அவனே தானா...?''

''நான் கேட்டால் எனக்குப் பதில் தந்தாக வேண்டும்'' என்றது அவன் குரல் சற்று அழுத்தத்துடன்.

''ஆமாம்'' என்றாள்.

அவள் கண்கள் கடினம் பட்டாற்போலத் தோன்றின.

மீண்டும் ஒரு தரம் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

''உனக்கு என்ன மாதிரி 'மியூசிக் பிடிக்கும்' என்றான் திடீரென்று. ''மெலோடியாகவா அல்லது...''

''சத்தம் குறைவாக.''

''நிறைய வைத்திருக்கிறேன். உனக்குப் பிடித்ததாக ஏதாவது வைக்கலாம் வா'' என்று உள்ளே அழைத்துச் சென்றான்.



பின்னணியில் இசை மென்மையாக ஒலிக்க அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

''உன் அப்பா என்ன செய்கிறார்?''

''இறந்து போனார்'' எனுமுன் அவளுக்குத் தொண்டை அடைத்தது. 'அவர் மட்டும் இருந்திருந்தால்...'

''ச்சுச்சு! சாரி டியர்'' என்று அவள் கையைப் பற்றித் தட்டிக் கொத்தான் அவன்.

அவன் தொட்டதில் கூசியபோதும் ஏதோ கொஞ்சம் ஆறுதல் போலவும் தோன்றியது அவளுக்கு.

''வேறே உறவினர்?'' அக்கறை உள்ளவன் போலவே அவன் விசாரித்தான்.

கையை விட்டு விட்டால் நன்றாயிருக்குமே என்று நினைத்தபடி ''அம்மாவும் சுந்தரும் மட்டும்தான்'' என்று மெல்ல உரைத்தாள்.

அம்மாவுக்காகத்தான் என்று மனம் கலங்கிற்று.

அவளது விரல்களைத் திருப்பிப் பார்த்துவிட்டு ''வேலை செய்கிறாயா? டைப்பிங்கா'' என்று மேலும் ஆராய்ந்தான் அவன்.

''ம...''

''பிரியம் இல்லாவிட்டால் பதில் சொல்ல வேண்டாம் உனது வேலையில் தேவைக்கு வருமானம் வருகிறதா?'' என்று கண்ணில் விழுந்து மறைந்த அவளது கூந்தல் சுருளைக் கனிவுடன் ஒதுக்கி விட்டான் கவுதம்.

''அநேகமாய்!''

''அப்படியென்றால்'' சற்றுத் திரும்பி அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான் அவன்.

''அம்மா ஏதாவது அதிகச் செலவு வைக்காவிட்டால் சரியாக இருக்கும்'' என்று முறுவலிக்க முயன்றாள் ரமி.

''பின்னே உன் அம்மா பெரும் செலவாளியா?''

''இல்லை இல்லை'' என்று அவசரமாக மறுத்தாள் அவள், ''அம்மா ஒரு குழந்தை போல, இத்தனை வயது வரை அப்படியே இருந்து விட்டார்கள். அதே குணத்தில் ஏதாவது செய்து விடுவார்கள்...''

''அடடா'' என்றான் அவன், அனுதாபத்துடன் அவள் முதுகை வருடின அவன் விரல்கள்.

அதே பரிவுடன் மேலும் ஏதேதோ கேட்டான்.

முதலில் கூசிச் சுருங்கியபோதும் மெல்ல அவனது விரல்களின் வருடலுக்குப் பழகி ஆறுதலும் கண்டது ரமியின் உடல்.

இந்த ஓர் ஆண்டு காலமாகத் தன் துயரங்களை ஒரு தரம் சொல்லி அழும் சுகம்கூட இல்லாமல் உள்ளே மேலும் மேலும் அடைத்துக் கொண்டு திக்குமுக்காடிய வளுக்கு இன்று ஒரு வடிகால் கிடைக்கவே மெல்ல மெல்ல நெகிழ்ந்து போனாள்.

இந்த நெகிழ்ச்சியில் அவனது கரங்கள் அவளை மெல்ல மெல்ல அவளது ஆளுகைக்குள் கொண்டு வந்த தையோ அவளுடைய உடலின் தாபங்களை அவள் அறியாமலே கிளறி விட்டதையோ ரமி சரியாக உணரக் கூட இல்லை.

கடைசியில் அவன் அணைப்பு இறுகி அதை உணர்த் தியபோதுதான் தன் உடலும் அவனுக்குத் தேவையான பதிலைத் தருவதை அவள் பெரும் அதிர்ச்சியுடன் உணர்ந்தாள்.



# 10



தலை பெரும் பளுவாகக் கனத்தது ரமிக்கு.

பாரத்தைத் தாங்க மாட்டாமல் சன்னலில் தலையைப் பதித்தவாறு வெளி இருளை வெறித்தபடி நின்றாள் அவள்.

சூழ்ந்திருந்த மயான அமைதியில் ஒரு மனிதனின் ஆழ்ந்த சுவாசம் மட்டிலும் கேட்டது.

அது எங்கிருந்தோ குயில் கூவும் ஒலி கேட்டது.

அது எங்கிருந்தோ அல்ல; அந்த வீட்டில் இருந்த கடிகாரத்திலிருந்த குயில்தான் கூவியது.

ஒவ்வொரு மணிக்கும் அது கூவுவதைத்தான் ரமி கேட்டுக் கொண்டே நின்றாளே.

ஒன்று... இரண்டு... மூன்று... நாலு...

நாலே கூவலுடன் கடிகாரக் குயில் தன் வாயை மூடிக் கொண்டது.

மணி நாலுதானா?

இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்து சுமார் ஏழு மணி நேரம்தான் ஆகிறதா?

ஏழு யுகங்கள்... கொந்தளிக்கும் ஏழு பிரளய கால யுகங்கள் ஏழு பிறவிகள்... முழுக்க துன்பத்தினாலேயே ஆன ஏழு பிறவிகள் முடிந்து போய்விடவில்லையா?

நெஞ்சுக் கூட்டுக்குள் ரணமாய் வலித்தது.

"ஓ" என்று உரக்க அழ முடிந்தால்...?

கவுதமன் விழித்து விடுவானோ என்ற பயத்தில் விம்மி அழவும் பயந்து துவண்டு நின்றாள் ரமி.

தந்தை இறந்தபோது, பேசாத தந்தையைக் கண்டு மலைப்பும் தவிப்பும் இருந்தது. தாங்க முடியாத துன்பம் என்றால் இதுதான் என்று அப்போது அவள் நினைத்தது உண்டு.

ஆனால் இன்று அனுபவிக்கும் வேதனையின் முன் அதையெல்லாம் தூசாக உணர்ந்தாள் ரமி.

இதை எவ்வளவு சாதாரணமாக எண்ணி விட்டாள்!

அருவருப்பு இருந்தது உண்மை.

வெறுப்பாக இருந்தது மெய்தான்.

அறியாத் தன்மையால் பயம் இருந்ததுகூட நிஜம் தான்.

ஆனால் 'டூ இன் ஒன்'க்காக ஒருநாள் கம்பெனி, கொடுத்ததாக வெகு இலகுவாகச் சொன்ன அனிதா, ஏன் ஒரு வெறும் ஷாமோஸாடின் சேலைக்காக இரானிய னோடு ஓட்டலுக்குப் போய் வந்து சிரித்த கற்பகா... எத்தனையோ பேர் வெகு அலட்சியமாகச் செய்வது தானே அம்மாவைக் காப்பதற்காகச் சகித்துத் தொலைக்க வேண்டியதுதான் என்று நினைத்து அல்லவா வந்தாள்.

இது சகிக்க முடியாத அவமானமாக, பொறுக்க முடி யாத வேதனையாக இருக்கக்கூடும் என்று அவள் சிறிதும் எண்ணவில்லையே.

சர்வநாசம் என்பது அவளுக்கு முன்பே தெரியாமல் போயிறறே.



அம்மா ஜெயிலுக்குப் போயிருந்தால் கூட - அந்த அவமானம் தாங்காமல் அம்மா இறந்திருந்தால்கூட, அதைத் தாங்க முடிந்திருக்கும்போல இருக்கிறதே;

உடம்பெல்லாம் காயப்பட்டால் தீப்பட்டால் வலியைத் தாங்கலாம்.

ஒருவேளை அவன் பலவந்தப் படுத்தியிருந்தால்கூட தீப்பட்டாற்போல - காயம் பட்டாற்போல - அடிபட்ட வேதனையோடு தீர்ந்திருக்குமோ?

ஆனால் இந்த மாதிரி நிர்ப்பந்தமான நிலைமையிலும் அவனோடு தன் உடல் உறவாடிய விதத்தால் நரகலுக்குள் விழுந்து விட்டது போன்று தோன்றிய அசிங்கமான உணர்வை அவளால் தாங்க முடிய வில்லை.

மீண்டும் நாக்கு தொண்டை, வயிறு எல்லாம் கசந்து வழிய அந்த அறையோடு ஒட்டியிருந்த குளியலறைக்கு ஓடிச் சென்று வாந்தி எடுத்தாள்.

கண்ணீர் ஆறாக ஓடியது.

'ஆனால் எத்தனை வாந்தியும் கண்ணீரும் வெளி யேறினாலும் சேறாக மாறிவிட்ட செந்நீர் சுத்தமாகுமா?'

தந்தை இறந்தபின் கடன்காரர்கள் மொய்த்தபோது ரமி அவமானத்தால் கூனிக் குறுகியது உண்டு.

இருந்ததை எல்லாம் விற்றுக் கடனை அடைத்து விட்டு அவள் நிமிர்ந்ததும் உண்டு.

இப்போதும் ஒரு விற்பனைதான்.

ஆனால் இனி நிமிர்வது மட்டும் வாழ்நாள் முடியும் வரையில் இல்லை என்பது நன்கு புரிந்தது.

கண்ணை விற்று வாங்கிய சித்திரமாக, காலம் கடந்து வந்த இந்த அறிவு பயனற்று அவள் நெஞ்சைக் கசக்கியது. குயிலின் கூவல் ஐந்து முறை கேட்டது.

இன்னமும் ஒரு மணி நேரம்!

பிறகு இந்த நரகத்தில் இருந்து வெளியேறலாம்.

ஆனால் தன் உடம்பே நரகமாகிப்போன பிறகு எதிலிருந்து எப்படி மீள்வது?

''அறிவிழந்து, ஆழநரகில் வீழ்ந்து...'' என்று எதிலோ படித்த நினைவு தொடர்பின்றி நினைவு வந்து, அவளது மெல்லிதழ்களை நடுங்க வைத்தது.

கீழ்வானில் வெளிச்சம் ரேகையிட்டது.

அவளுக்குள் முடிவில்லாத அந்தகாரம் நிரம்பி இருக்கையில் உலகத்துக்கு விடிவது எப்படிச் சாத்தியம் என்று எண்ணினாள் ரமி.

ஐந்தரை மணிக்கு அவனிடம் அசைவு தெரிந்தது.

ஓசையின்றி அந்தப் பால்கனிக்கே சென்று காத்திருந்தாள்.

சற்றுப் பாறுத்து அவன் அங்கே வந்தான். ''தூங்கினாயா ரமி?'' என்று விசாரித்தான்.

நிமிராமல், ''நான் போக வேண்டும்'' என்றாள் ரமி.

''என்ன?... ஓகே சரி, சரி'' என்று எங்கோ சென்றான் அவன்.

திரும்பி வந்து அவள் முன் டீபாயில் ஆவி பறக்க ஒரு கப் காபியை வைத்தான்.

குடிக்கச் சொல்லிவிட்டு மீண்டும் சென்றான்.



மீண்டும் அவன் வந்தபோது அவன் கையில் இரு கவர்கள் இருந்தன.

''இன்னமும் குடிக்கவில்லையா?'' என்று கேட்டபடி இரு கவர்களையும் ரமியிடம் கொடுத்தான்.

''பெரிய கவரில் பத்திரங்கள் இருக்கின்றன. கேன்சல் செய்ததும் இருக்கிறது. சின்னது உனக்கு...''

சகஜமான பாவத்தில் அவன் பேசியதை ரமியால் ஏற்க முடியவில்லை. கீழ் உதட்டைப் பற்களால் அழுத்தியபடி பெரிய கவரைப் பிரித்துப் பார்த்தாள்.

மூலப் பத்திரத்துடன் ராஜன் எழுதிக் கொடுத்ததும், பின் அதை ரத்து செய்து, பாக்கியின்றிப் பெற்றுக் கொண்டதாக கோர்ட்டு ஸ்டாம்பில் கையெழுத்திட்டு இருந்தான் கவுதமன்.

பெயருக்காக நன்றி சொல்லக்கூட அவளுக்கு வாய் வரவில்லை. பதிலாகத் தொண்டையை அடைத்துக் கொண்டு கண்ணைக் கரித்தது.

என்ன விலை கொடுத்து விட்டான்!

அடுத்த கவரைத் திறந்ததும் அவள் முகம் வெளுத்தது. கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக்கள்!

இப்படி எத்தனை பேருக்குக் கொடுத்திருப்பான்? இத்தனை பேரில் ஒருத்தியாக.

கீழ் உதட்டில் பற்கள் அழுத்திய இடத்தில் ரத்தம் கசிந்தது.

பெருமுயற்சியுடன் கவரை மூடி டீபாயில் வைத்தாள்.

பெரிய கவரைத் தன் கைப் பையுள் வைத்தாள்.

நிமிர்ந்தபோது வெகு அருகில் வந்து, ''மிகவும் இன்பமான அனுபவம். மீண்டும் வைத்துக் கொள்

வோமா?'' என்று மென்மையான குரலில் கேட்டான் அவன்.

அவள் உடல் ஒருதரம் அதிர்ந்தது.

முந்தானையை இழுத்துப் போர்த்தியபடி, ''நான் போகிறேன்'' என்று பதிலுக்குக் காத்திராமல் மடமட வென்று வெளியேறினாள்.

''இதோ பார், இந்தக் கவர்...'' என்ற அவன் குரலைக் கேட்க, அவள் அங்கே இல்லை

சிறு வியப்பில் மலர்ந்த விழிகளை வாயில் புறமாகத் திருப்பினான் கவுதமன்.

அவள் வெகு வேகமாக... எதற்கோ பயந்து ஓடுவது போல விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

பஸ் நிறுத்தத்தில் நிற்கும்போது மற்றவர்கள் பார்வையை குறுகுறுப்பாய் உணர்ந்தாள் ரமி.

அவள் இரவை, அவன் பங்களாவில் கழித்தது இவர்களுக்குத் தெரிந்திருக்குமோ?

'இது என்ன அசட்டுத்தனமான கேள்வி?' என்று நினைத்த போதும் அவள் உடல் கூசிக் குறுகிப் போயிற்று.

பஸ்ஸில் தற்செயலாக யார் கரமோ இடித்தபோது உடம்பெல்லாம் தகித்தது.

சுந்தர் சொல்லியிருந்த அடையாளங்களை வைத்து ஒருவாறு அவனது அறையைக் கண்டு பிடித்து அங்கே சென்றபின் தான் மூச்சுவிட முடிந்தது அவளுக்கு.

அவ்வளவு விரைவில் அவன் அவளை எதிர்பார்க்க வில்லை.



எப்படியும் விழித்து எழ ஏழு எட்டாகிவிடும். ஒன்பது மணிக்குத்தான் வருவாள் என்று நினைத்தவன், காலை ஆறரைக்கே ரமியைக் காணவும் வாயைப் பிளந்தான்.

மவுனமாகக் கவரை நீட்டினாள் அவள்.

லேசாகக் கைகள் நடுங்க அவசரமாக அதைப் பிரித்து பார்த்தான் சுந்தர்.

''ஸ்டாம்பில் கையெழுத்தா? வெரிகுட்... எப்படியோ தப்பித்தேன்'' என்றான் மகிழ்ச்சியுடன்.

''எப்படியோவா!''

மீண்டும் நடுங்கத் தொடங்கிய உதடுகளை அழுந்த மூடி நடுக்கத்தை நிறுத்தினாள் ரமி.

சற்றுச் சமமானதும், ''மேலே செய்ய வேண்டியதைப் பார்த்துச் செய்துவிடு'' என்றாள்.

''கட்டாயம்!'' என்று அந்தக் கவரைப் பத்திரப்படுத் தினான் சுந்தர். ''இப்போதுதான் எனக்கு மூச்சு வந்தது ரமி.''

'எனக்கு மூச்சடைக்கிறதே' என்று எதிரொலித்தது ரமியின் நொந்த மனம்.

''ஒரு வழியாகப் பிழைத்தேன் ரமி'' என்று அவன் ஆனந்தப்பட்டான்.

'நான் ஒரேயடியாக அழிந்து போனேனே!' என்று ஊமையாய் அழுதது ரமியின் உள்ளம்.

''எப்படியோ என்னைக் காப்பாற்றி விட்டாய் ரமி.''

'எப்படி? உலகத்திலேயே மகா அசிங்கமான வழியில், ஆனால் உன்னையல்ல, என் அம்மாவை, அந்த நெல்லுக் கிறைத்த நீரில் பிழைத்து விட்ட புல் நீ...' தறிகெட்டு

ஓடும் மனதை மாற்ற, எண்ணிச் சுற்றிலும் விழிகளை ஓட்டினாள் ரமி.

நல்ல பெரிய அறைதான். கூடவே ஒட்டியிருந்த குளியலறை வேறு. வாடகை அதிகமாகத்தான் இருக்கும்.

அங்கங்கே அவன் கழற்றி வீசியிருந்த புத்தம் புதிய விலை உயர்ந்த துணிகள்...

டேப் ரிக்கார்டர், ரிகார்டு ப்ளேயர்... ஸ்டீரியோ...

அத்தான் நன்றாகத்தான் வாழ்கிறான்!

அம்மாவைக் கையெழுத்திட வைத்துப் பெற்ற பணமா?

வேறு ஏது?

பாவி! உருப்படுவாயா?''

''ரமி...''

திடுமென அருகில் அவன் குரல் கேட்கவும் ரமி திடுக்கிட்டாள்.

''ரமி, அவன் உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள வில்லையே? மென்மையாகத்தானே...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' சுள்ளென வந்தது ரமியின் பதில்.

''ஆ... ஆமாம்... ம.. மடையன் போலக் கேட்கிறேனே'' என்று அசடு வழிந்தான் சுந்தர்.

''அதையெல்லாம் மறந்துவிடு ரமி. முழுக்க முழுக்க மறந்து விட வேண்டுமாக்கும் வந்து... ரமி, நான் அத்தை யிடம் சென்று நீ அந்தப் பாலிகாவோடு இன்னொரு நாள் தங்க நேரிட்டு விட்டது என்று சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். இன்று இங்கேயே தங்கி நன்றாக ஓய்வு



எடுத்துக் கொள். பாரேன், அந்தப் பயலிடம் பட்ட துன்பம் எல்லாம் உனக்கு அடியோடு மறக்கும்படி செய்து விடுகிறேன்...'' என்று இளித்தான்.

அவனது நோக்கம் ரமிக்குப் புரிந்து போயிற்று.

உடம்பு கூசச் சட்டென முந்தானையை இழுத்துத் தோளைப் போர்த்தியது ரமியின் கரம்.

பாவி! வஞ்சகன்! இவன் இவ்வளவு பொல்லாதவன் என்று இதுவரையில் எண்ணியது இல்லையே.

இவ்வளவு நாள் அம்மாவுக்கு பயந்து வாலைச் சுருட்டி வைத்திருந்தானா? அல்லது கிணற்று வெள்ளம் என்ற அலட்சியத்தில் இருந்தானா?

இனி அவள் இலகு என்று எண்ணி விட்டானா அல்லது தெருச் சரக்கு என்று நினைத்து விட்டானா?

''ரமி என் கண்ணே...'' என்று இன்னமும் நெருங்கி னான் சுந்தர்.

'சுளீர்' என்று சத்தம் கேட்ட பிறகுதான் அவனை அடித்திருக்கிறோம் என்று புரிந்தது ரமிக்கு.

பயந்து மிரண்டு ஒதுங்கிய அவனைப் புழுவாக ஒதுக்கி விட்டு ரமி அங்கிருந்து வெளியேறினாள்.

நெஞ்சும் கையும் போட்டி போட்டுக் கொண்டு எரிந்தன.

''தனனா தனனா தனனா...''

பாடியபடியே பூண்டு உரித்துக் கொண்டிருந்தாள் ரஜனி.

தாயைச் சிறிது நேரம் வெறித்துவிட்டு உள்ளே சென்றாள் மகள்.

மகளைக் கண்டதும், ''வா, ரமிம்மா அந்தப் பெண் பாலிகாவுக்கு எப்படி இருக்கிறது? ஏண்டா என்ன டாம்மா? என்ன ஆயிற்று?'' என்று மகளின் வெளுத்த முகம் தந்த கவலையுடன் விசாரித்தாள்.

''அவள்... அவள் செத்துப் போனாள்'' என்றாள் ரமி உதடு துடிக்க.

# 11



அதற்குமேல் அடக்க முடியாமல் ரமியின் கண்களில் இருந்து நீர் வடியலாயிற்று.

''அய்யோ பாவம்!'' என்று ரஜனியும் உருகிப் போனாள். ''கல்யாணம் கில்யாணம் ஆகலியேடா? நல்லவேளை, அது வேறே ஆகியிருந்தால் இன்னமும் பரிதாபம்... ஆனால் வேளை எப்போதானாலும் தான் வருகிறது. அழுதால் போகிறதா, தொழுதால் போகிறதா?'' என்று சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தாள்.

பிறகே மகளின் கண்ணீர் மனதை உறுத்த 'ஷ், ரமிம்மா இன்றைக்கு உன் பிறந்த நாள். நினைவில்லை? இன்றைக்குப் போய் அழுகிறாயே. அழாதே, கண்ணு. போய் முகத்தைக் கழுவி, பல்லை விளக்கிக் குளித்து விட்டு வா ஆஸ்பத்திரி நாற்றம் போக நன்றாகக் குளி... பார், அப்பாவைப் பிரிந்து கூட நாம் வாழலியா? போம்மா, குளிர்ந்த தண்ணீர் முகத்தில் பட்டால் கண்ணீர் நின்று விடும். போடாம்மா'' என்று மகளை அனுப்பினாள்.



''காலையில் இன்றைக்கு என்ன ஸ்பெஷல் தெரியுமா? செலவு அதிகம் இல்லாத உனக்குப் பிடித்த வெஜிடபிள் உப்புமா, சட்னிகூட நீ குளித்துவிட்டு வருவதற்குள் தயாராகிவிடும் தெரியுமா?'' என்று குழந்தையை உற்சாகப்படுத்துவது போன்ற குரலில் மேலும் அறிவித்தாள் தாயார்.

அன்னையின் சொற்படி குளித்துவிட்டு வந்தாள் ரமி.

வேகமாக வந்த அழுகை அடங்கிய போதும், 'இதோ ரெடி' என்பது போலக் கண் ஓரத்தில் நின்றது.

எவ்வளவு அற்பமாக எடை போட்டிருந்தால் மீண்டும் வைத்துக் கொள்வோமா என்று கேட்பான். அவள் மனம் அங்கேயே சண்டித்தனமாய் நின்று கசங்கி ரத்தம் சிந்தியது.

''சேலையால் இப்படித் தோளை மூடினால் கூட உனக்கு அழகாய்த்தான் இருக்கிறது'' என்று பாராட்டினாள் ரஜனி.

'உடம்பு கூசுவதால் மூடுகிறேன்' என்று சொல்ல மாட்டாமல் ஏக்கத்துடன் கண்களில் நீர் திரளப் பார்த்தாள் ரமி.

''என்னடாம்மா, ஏன் இப்படிப் பார்க்கிறாய்? ஏதோ அவள் விதி, போய் விட்டாள். அதற்காகப் பிறந்த நாளும் அதுவுமாய் அழலாமா? பிறகு ஆண்டு முழுவதும் அழ வேண்டி வருமே, அழாதே'' என்று தேற்றினாள்.

'ஆண்டு முழுவதும் மட்டும் அல்ல ஆயுள் முழுமையுமே' என்று வேதனையுடன் நினைத்தாள் ரமி.

உடனே மனது இன்னொன்று நினைத்தது.

சும்மாவே உடம்பும் மனதும் இப்படிக் கூசிப் போகிறதே; எங்கேனும் அந்தக் கவுதமனே எதிர்ப்பட நேர்ந்து விட்டால் என்ன ஆம்?

''ஏன் மீண்டும் வைத்துக் கொள்வோமா?'' என்று அவ்வளவு ஆவலாகக் கேட்டானே, அவன் அவளைத் தேடியே வந்து விட்டால்?

எப்படி வர முடியும் என்பதற்கு இல்லையே. ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினால் ஆயிரம் தரம் அவளைக் காட்டிக் கொடுக்க அத்தான் ஒருவன் இருக்கிறானே.

மாமா வேலை செய்யும் பாவி.

எப்படியோ கவுதமனை மீண்டும் பார்க்க நேர்ந்தால், ஒன்றுமே நிகழாதது போல ஒதுங்கிச் செல்வது அவளால் சாத்தியமா?

நிச்சயமாக முடியாது.

அதற்கெல்லாம் உடம்புத் தோல் நிரம்பவும் முரடாகிப் போயிருக்க வேண்டும்.

இனி அவளைப் பணிய வைக்கும் பிடிமானம் அவளிடம் இல்லைதான்.

ஆனால்... ஆனால்... இப்போது அவளுக்குத் தன்னிடமே பயமாக இருந்தது.

அவனுடைய உறவைத் தான் ஏற்ற விதம் அவளை மிகவும் அச்சுறுத்தி விட்டிருந்தது.

தன் உடம்பில் இவ்வளவு வெட்கம் கெட்ட தனம் இருக்க முடியும் என்று அவள் நினைத்தது இல்லை.

அது தெரிந்த பிறகோ தன்னிடம் நம்பிக்கை இழந்து வெகுவாகக் கலங்கிப் போனாள்.



இந்த மாதிரி உடம்பை வைத்துக் கொண்டு அவன் மீண்டும் தேடி வந்தால்... வரக் கூடியவன் போலத்தான் தோன்றியது... எத்தனை நாள் ஒதுங்கிப் போக முடியும்.

மனது தைரியமிழந்து போய்விட உடம்பு நடுங்கியது.

ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, ''அம்மா'' என்று மெல்ல அழைத்தாள்.

''என்னடா ராஜா?''

''நான்... நான் ஒன்று சொல்வேன்; ஏன், எதற்கு என்று கேளாமல் செய்ய வேண்டும் சரியா?''

''கேட்டுத்தான் என்ன பிரயோஜனம்?'' என்று உதட்டைப் பிதுக்கினாள் ரஜனி. ''என் மக்கு மண்டைக்கு எதுவும் புரியாது. நீயானால் கெட்டிக்காரி. நீ பார்த்து என்ன சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும் செய்யலாம்'' என்றாள் வெள்ளை மனத்தோடு.

''இந்த ஊரில் இனி இருக்க வேண்டாம்மா. எங்கேயாவது வேறே எங்கேயாவது போய்விடலாம்மா. தூரமாய்ப் போய் விடலாம், இன்றைக்கே போய் விடலாம்'' என்றாள் ரமி, தன் தவிப்பை வெளிக்காட்டாதிருக்க முயன்றபடி.

''என்னது!'' என்று வாயைப் பிளந்தார் தாயார்.

''ஆமாம்மா. இன்றைக்கே போய்விட வேண்டும். இனி இங்கே இருக்கவே கூடாதும்மா.''

மகளின் முகத்தில் தீவிரத்தையும் துக்கத்தையும் காணவும் மறு பேச்சின்றித் தாயார் தலையாட்டினாள்.

சாமான்களை எடுத்து வைக்கவும் தொடங்கினாள்.

திடுமென நிறுத்தி, ''ஆனால், எங்கேம்மா போகிறது'' என்று வினவினாள்.

''நாம் போகிற இடம் பிறகு சொல்கிறேன் அம்மா. நான் முதலில் வீட்டைக் காலி பண்ணுகிற விஷயத்தை ஆன்ட்டியிடம் சொல்லி விட்டு வருகிறேன்'' என்று மாடிக்குக் கிளம்பினாள்.

ஆனால் படியேறும்போது கால் தள்ளாடியது.

வீட்டுக்காரம்மாளிடம் என்ன காரணம் சொல்வது? தாயாரிடம் போலச் சமாளிக்க முடியாதே! ஏனெனில் அந்த அம்மாள் புத்திக் கூர்மை உடையவள் ஆயிற்றே.

''யாரு... ரமி குட்டியா? வா கண்ணு உள்ளே வந்து உட்காரு'' என்று வாய் நிறைய வரவேற்றார் அந்த அம்மாள்.

''இப்பத்தான் உன்னைப் பற்றி நினைச்சுக்கிட்டே இருந்தேன். உங்க அண்ணன் ஜேம்சு மும்பையிலிருந்து இந்தப் பால்கோவாப் பலகாரம் அனுப்பியிருக்கானா? உனக்கு இன்னிக்குப் பிறந்த நாளுன்னு உன் அம்மா சொன்னாங்கன்னு கேக் வேறே செய்தேனா? ரெண்டையும் கொண்டு வந்து தாணுமின்னு நினைச்சேன். இந்தக் காலு வலியிலே இறங்க விடுதா, ஏற விடுதா. கீழேயே இருக்கலாமின்னு பார்த்தால் அதுக்கும் மனசு வரலே. மொத மொதல்லே இந்த மாடியில குடித்தனம் போட்டு புள்ளையைப் பெத்து, பிறகு இந்த வீட்டையே வாங்கினோமா, இந்த இடத்தை விட்டு நகரவும் மனசு வரலே. இந்தாடா ராஜா, முதல்லே நீ சாப்பிடு, பிறகு உங்கம்மாளுக்கும் கொண்டு போகலாம். வந்து உக்காந்து சாப்பிடு தங்கம். ஏன் அங்கேயே நிற்கறே? வா'' என்று அன்புடன் உபசரித்தாள்.

ரமிக்கு இன்னமும் தொண்டையை அடைத்தது, விழுங்கிக் கொண்டு ''ஆன்..ட்டி'' என்று மெதுவாக அழைத்தாள்.



அவள் முகத்தை நன்றாகப் பார்த்துவிட்டு, ''என்னப்பா ஏன் ஒரு மாதிரி இருக்கே? சொல்லுப்பா'' என்று கேட்டார் அவர்.

இன்னமும் அவர் முகத்தை அவள் நேராகப் பாராமல் தலை குனிந்தபடியே ''அவசரமாக ஊரை விட்டுப் போக வேண்டியிருக்கிறது ஆன்ட்டி. அதனால் வீட்டை உடனேயே காலி பண்ண வேண்டியதாகி விட்டது...'' என்று மேலும் தயங்கினாள்.

''ஆங்!'' என்று அதிர்ச்சியுடன் கூவினார் தெரஸா.

''தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள் ஆன்ட்டி நான் என்ன சொல்லட்டும் ஆன்ட்டி? வேறு வழி யில்லை. இன்றைக்கே போகிறோம்; முதலில் சொன்ன படி ஒரு மாத நோட்டீஸ் தர முடியலை... ஆன்ட்டி, அட்வான்ஸ் பணத்தைக் கேட்க எங்களுக்கு உரிமையே இல்லை...?''

''ஆமா பின்னே?'' என்றார் தெரஸா கோபத்துடன் ''உங்க அங்கிள் வேற என்ன சொல்லப் போறாங்களோ! குறைந்த வாடகைக்கு விட்டு விட்டேன் என்று அப்பவே அவருக்குக் கோபம்'' என்றார் மனத் தாங்கலுடன்.

''அந்த நன்றி என் நெஞ்சு நிறைய இருக்கிறது ஆன்ட்டி. ஆனால்... ஆனால்...'' என்று மேலே பேச முடியாமல் திணறினாள் ரமி. தொண்டையில் பந்தாய் அடைத்த துயரத்தை விழுங்கிக் கொண்டு, ''இப்படி எல்லாம் நடக்கும் என்று நான் நினைக்கவே இல்லையே...'' என்றாள் வேதனையோடு

''அப்படி என்ன நடந்துட்டுது?'' என்று ஆத்திரத் துடன் கேட்டாள் வீட்டுக்கார அம்மாள்.

என்னவென்று சொல்வது? மரணக்காயம் பட்ட மானின் கண்களால் அம்மாவைப் பார்த்தாள் ரமி. இவள் மிகுந்த அன்புள்ள பெண்மணியே. ஆனால் ரமியின் அவலம் எந்த அன்புடனும் பகிர்ந்து கொள்ளக் கூடியது அல்லவே?

''ரொம்பக் கஷ்டமா கண்ணு?'' என்றார் அவர் சற்று உருகி.

''ஆமாம் ஆன்ட்டி. தாங்க முடியவில்லை'' என்றாள் ரமி மெல்லிய குரலில் சிரமத்துடன். ''பணத்துக்கு ரொம் பவும் அவசியம் இருக்கிறது. முடியுமானால்... முடியு மானால் அட்வான்சைத் திருப்பித் தாருங்கள். வசதி யில்லை என்றால் வேண்டாம் ஆன்ட்டி'' என்று திரும்பி னாள் ரமி.

''அய்யோ அய்யோ! நில்லு கண்ணு'' என்று பணத்தை எடுத்து வந்து கொடுத்தாள் அந்த அம்மாள்.

''கிட்டத்தட்ட ஒரு வருசமா தாயா பிள்ளையா உயி ராய்ப் பழகிட்டுப் பிரியறதுன்னா எனக்குத் தாங்கலியே'' என்று புலம்பியபடி சிரமத்துடன் கீழே இறங்கி வந்து தானும் கூடமாடச் சாமான்களை எடுத்து வைக்க உதவி னாள்.

பாவம் தன் மூட்டு வலியைக்கூட இலட்சியம் செய்ய வில்லை.

அவரது ''எந்த ஊருக்கு? எங்கே?'' என்ற கேள்வி களுக்கு ரமி சரியாகப் பதில் சொல்லவில்லை.

''போய் விலாசத்துடன் கடிதம் எழுதுகிறேன் ஆன்ட்டி'' என்று சமாளித்து வைத்தாள்.

நல்ல காலமாக அவளுடைய தாயாரும் ஏதும் பேச வில்லை.



குழப்பத்துடன் மகளைப் பார்த்து விட்டுப் பேசாமல் வேலையில் ஈடுபட்டாள்.

தபால்காரரின் வரவு, வேலையைச் சற்றுத் தயங்கச் செய்தது.

மணிதான் ஒரு 'பிறந்த நாள் வாழ்த்து' அனுப்பி இருந்தாள்.

மணி நன்றாகப் படம் வரைவாள்.

அவளது கைவண்ணம் வாழ்த்து மடலில் தெரிந்தது.

சற்று கலங்கிய இருளில் தனிக் கருப்பில் நின்ற பதினெட்டு எனும் எண்ணை விட்டு ஆரஞ்சும் மஞ்சளு மாக ஒளி வீசி நின்ற பத்தொன்பது எனும் எண்ணிடம் ஓடி வருகிறாள் ரமி, படத்தில்தான்.

''ரமி முகத்தை அழகாக வரைந்திருக்கிறாள் இல் லையா?'' என்ற ரஜனியும், ''என்னா அர்த்தத்தோட அருமையா வரைந்திருக்குது அந்தப் பொண்ணு'' என்று வீட்டுக்காரம்மாளும் பாராட்ட ரமி உள்ளே போய் ஊறும் கண்களைக் கழுவினாள்.

'ஒளியை நாடிப் போவேன் என்று நினைத்தாயா தோழி? எரியும் தீக்குழிக்குள்ளே அல்லவோ விழுந்து விட்டேன்.'

குளிர்ந்த நீரை முகத்தில் வாரியடித்துக் கண்ணீரை ஒருவாறு தேக்கிக் கொண்டு மீண்டும் வேலையைத் தொடர்ந்தாள்.

சாமான்களை எல்லாம்... அதிகச் சாமான்களே இல்லை என்றாலும் ஒரு சின்னக் குடும்பத்துக்கு அத்தியாவசிய மான பொருட்கள் மட்டுமே ஓரளவுக்குச் சேர்ந்து விடுகின்றனவே. மூட்டை கட்டி முடித்தபின் மாடிக்குக் கிளம்பினாள் தெரஸா.

''ரமி என்னை மாடியிலே கொண்டு விட்டுட்டுப் போகிறாயம்மா? இந்தாங்க ரஜனியம்மா, பொண்ணை இனிமேல் நல்லா கவனிச்சுக் கொள்ளுங்க, போயிட்டு வாங்க, ரமி. வர்றீயா கண்ணு?'' என்று ரமியின் மேல் சாய்ந்தபடி சிரமத்துடன் படியேறினார்.

வீட்டினுள் அவளை விட்டு விட்டுத் திரும்பிய ரமியை ''கொஞ்சம் நில்லும்மா'' என்று நிறுத்தி விட்டு உள்ளே சென்றாள்.

திரும்பி வந்து, ''ரமி நேத்து என்னம்மா நடந்தது'' என்று விசாரித்தாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றவளை ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு ''சொல்லப் பிடிக்கவில்லையா. சரி போகட்டும். ஆனாம்மா, எங்கே இருந்தாலும் நானும் உனக்கு ஓர் அம்மாதான்... போகிற இடத்தையும் சொல்ல உனக்குப் பிரியமில்லை போலிருக்கு. என்னைக்காவது மனசு மாறினா எனக்கு லெட்டர் எழுது. எதுக்கும் கைச்செலவுக்கு இதையும் வைத்துக்கொள்'' என்று ஒரு கவரை ரமியிடம் கொடுத்தாள்.

இரண்டாம் முறையாக பணக் கவர்.

கைகளை இறுக மூடிக் கொண்டு ''இது வேண்டாம் ஆன்ட்டி. அட்வான்சைத் திருப்பித் தந்தீர்களே, அதுவே போதும். ஆனால் ஆன்ட்டி, என்றைக்கும் உங்கள் உதவியையும் அன்பையும் நான் மறக்க மாட்டேன். வரட்டுமா...'' என்று விடைபெற்றுக் கொண்டு அழுகையை அடக்கியபடியே மேலே நில்லாமல் விரைந்தாள்.

நல்லவர்களையும் தாங்க முடியவில்லையே என்று வேதனையாக இருந்தது அவளுக்கு.



நல்லவேளை, ரஜனி எதையாவது கேட்டுத் தொண தொணக்காமல் பேசாமல் இருந்தாள்.

அந்தப் பேதை மனத்திற்கும் ஏதோ விபரீதம் என்று புரிந்ததோ?

இருவருமாக ரயிலில் ஏறி அமர்ந்தபோதும், பின்னர் பயணத்தின்போது கூட அதே மவுனம் தொடர்ந்தது.

## 12



அவள் போக்கில் விட்டிருந்தால் ரமி பட்டினியாகவே பொழுதைக் கழித்திருப்பாள்.

ஆனால், பிறந்த நாளும் அதுவுமாக மகளின் வயிறு காய்வது என்றால் தாய் மனம் பொறுக்கவில்லை.

வீட்டுக்கார அம்மாள் கொடுத்த கேக்கிலும், வீட்டில் தயாரான உப்புமாவிலும் சிறிதளவு எடுத்து வைத்து மகளை உண்ணச் செய்தாள் ரஜனி.

வருமானம் குறைவாக - வெகு குறைவாக இருந்தாலும், ஏதோ ஒரு வழியில் வாழ்க்கை நிலைப்பட்டு விட்டது என்ற நிம்மதி திடுமெனக் கலையவும் ரஜனிக்குப் பயம் உண்டாயிற்று.

ஆனால் கணவர் இறந்த நாள் முதலாக இன்று வரை குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தி வரும் மகள் சொல்வதும் செய்வதும் சரியாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கையும் மறுபுறம் இருந்தது.

இரண்டுமாக மனதைக் குழப்பினாலும் சுமக்க மாட்டாத பாரத்தைச் சுமந்து கொண்டு இருப்பவள்

போன்ற மகளின் தோற்றம் வாயைத் திறக்கவும் விட வில்லை.

இடையிடையே மகளின் முகத்தை ஆவலும் பயமு மாக எட்டிப் பார்த்தபடி வாளா இருந்தாள்.

தாயின் பார்வைகள் ரமிக்குப் புரியவே செய்தன.

ஆனால், வழக்கம் போலத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொல்லும் தெம்பும் திடமும் சிறிதும் இல்லாததால் கவனியாதது போல இருந்து விட்டாள்.

* * *

இரயில் நிலையத்தில் இரவு பத்து மணி எக்ஸ்பிரஸ் ஏதோ கேன்சலான டிக்கெட்டுகள் இரண்டு கிடைத்தன.

இடைப்பட்ட நேரம் முழுவதையும் வெயிட்டிங் ரூமில் கழித்தார்கள்.

வேலையை ராஜினாமா செய்வதாகவும், தொந்தர வுக்கு மன்னிக்கும்படியாகவும் எழுதினாள்.

நன்றி தெரிவித்து மணிக்குக்கூட ஒரு கடிதம் எழுதி னாள்.

சாம்பார் சோறும் தயிர்ச் சோறும் வாங்கி வந்து தாயா ரிடம் கொடுத்தாள்.

செய்வதற்கு ஒன்றும் இல்லாதபோது தன் கண்களை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

* * *

மறுநாள் காலையில் திருச்சியில் அவர்கள் இறங்கிய போது இளவெயில் இதமாகப் பட்டது.

திடீர் என்று வந்து நின்ற தோழியைக் கண்டு பானு வுக்கு ஒரே ஆச்சரியம்!



'எத்தனை தடவை அழைத்தும் வராதவள் இன்று திடுதிப்பென்று வந்து குதிக்கிறாளே! இது கனவா அல்லது நினைவுதானா?' என்று தன்னையே கிள்ளிக் கொண்டு வலிப்பது போலப் பாவனை செய்தாள்.

''அட, மெய்தான் வா வா வா'' என்று ஆர்வத்துடன் வரவேற்றாள்.

''நீங்கள் உட்காருங்கள் அம்மா, என்ன சாப்பிடு கிறீர்கள்?'' என்று ரஜனியையும் உபசரித்தாள்.

''நான் நன்றாகச் சாப்பிட்டேனம்மா, இந்தப் பெண் தான் இரண்டு நாளாகப் பட்டினி கிடக்கிறாள்'' என்று வருத்தமாக உரைத்தாள் ரஜனி.

''பசியெடுக்கவில்லையம்மா'' என்று மெல்ல முனகி னாள் ரமி.

''இங்கே ஆற்றங்கரை காற்றுக்கு நன்றாகப் பசி யெடுத்து விடும் பார்'' என்று அறிவித்தாள் பானு.

கூடவே உள்ளே சென்று இரு பெரிய தம்ளர்களில் எதையோ கொண்டு வந்து குடிக்கத் தந்தாள்.

''நன்றாயிருக்கிறது'' என்று இருவரும் அருந்தியதும் ''கேப்பைக் கூழ். நீர்க்க காய்ச்சிப் பனைவெல்லம் சேர்த்தது'' என்று விவரித்தாள்.

விடாமல் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்த வேத னைப் புழுவின் ஆதிக்கம் கொஞ்சம் குறையச் சற்றே உணர்ச்சி வந்தது போலச் சுற்றும் முற்றும் பார்த்தாள் ரமி.

பார்த்தவளின் கண்களில் வியப்பில் மலர்ந்தன.

''அக்கா... அக்கா, இது வெறும் வீடு போல இல் லையே. உங்கள் குழந்தைகளையும் காணவில்லையே'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

தரையைப் பார்த்தபடி சற்று நேரம் பேசாமல் இருந்தாள் பானுமதி. பிறகு, ''இல்லை ரமி, இது வெறும் வீடு இல்லை. ஆனால் என் குழந்தைகள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறார்கள்'' என்று உரைத்தாள்.

''எல்லோரும் என்றால்? அப்படி எத்தனை பேர் அக்கா?'

லேசாக முறுவலித்து, ''இன்றைய அளவில் இருபத் தைந்து'' என்றாள் பானுமதி.

''அதெப்படி?'' என்று ஆட்சேபித்தாள் ரஜனி, ''எப்படி யானாலும் மூன்று ஆண்டில் இருபத்தைந்து பிள்ளை எப்படி வரும்?''

லேசான துயரத்தின் சாயல் போல ஒன்று பானுமதி யின் முகத்தில் தோன்றி மறைந்தது.

அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''ஆசிரமமா அக்கா?'' என வினவினாள் ரமி.

''ஆமாம்.''

''அதானே?'' என்று சாய்ந்து அமர்ந்தாள் ரஜனி.

''ஓகோ! அதனால்தான் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள உதவிக்கு வா என்று எழுதினீர்களா? நானா னால் உனக்கு உதவி செய்வதற்காக உங்கள் ஒன்று இரண்டு பிள்ளைகளைப் பார்ப்பதற்காகப் பேர் பண்ணிப் பணம் தர அழைக்கிறீர்கள் என்று எண்ணிவிட்டேன். சாரிக்கா'' என்று வருத்தப்பட்டாள் ரமி.

''நானும்தான் விவரமாக எழுதவில்லை வா, ஆசிரமத்தில் மற்ற இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்; உன் அம்மா சற்று நேரம் ஓய்வெடுக்கட்டும்'' என்று ரஜனியைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றாள் பானுமதி.



''அவ்வளவாக வசதி இராது அம்மா. ஆனாலும் அந்தப் பலகை மேல் சற்றுப் படுத்து ஓய்வு எடுங்கள்'' என்று உபசரித்துவிட்டுப் போனாள்.

''வா'' என்று ரமியை அழைத்துக் கொண்டு வெளி யேறினாள்.

* * *

ஓலைக் கூரை வேய்ந்த அழகிய கட்டடங்கள்.

சுற்றிலும் தென்னை மரங்களும், அங்கங்கே சிறு மரங்களும் பசிய தரையும் கண்களைக் குளிர்வித்தன.

ஆனால், ரமிக்கு ஏதோ முரண்பாடு தெரிந்தது.

சுற்றிலும் வெகு தூரத்துக்கு அதிகமாகக் கட்டடங்கள் இல்லை.

யோசித்துப் பார்க்கையில் வாயிலில் இருந்த ''நல்லகம்'' என்ற பெயர் மட்டும் இருந்ததாகவே ரமிக்கு நினைவு வந்தது.

தலையைத் திருப்பிப் பானுமதியை விழிகள் விரியப் பார்த்தாள்.

அந்தப் பார்வையை உணர்ந்து, ''என்னடி பார்க்கிறாய்?'' என்று வினவினாள் பானு.

''ம்ம்... அக்கா, சென்னையில் உங்களுக்கும் எவ் வளவு பிராக்டீஸ் இருந்தது என்று எனக்குத் தெரியும்'' என்று தொடங்கினாள் ரமி.

''கட்டாயம்!'' என்று குறும்பாகச் சிரித்தாள் பானு.

குறிப்பை உணர்ந்தவளாக ''எனக்கும் மறக்க முடிய வில்லை அக்கா. முக்கியமான வேலைகளைக் கெடுத்து ஒரு சின்னத் தலைவலிக்காக இழுத்து வந்து விட்டீர்களே என்று கோபப்பட்டீர்களே...'' என்று இழுத்தாள் ரமி.

''அது மட்டும்தானா பேபி? நீ உன் பதிமூன்று வயது உருண்டைக் கன்னமும் பெரிய கண்ணுமாகச் சிவந்த முகத்துடன் உன் அம்மாவுக்காக மன்னிப்புக் கேட்டாயே சட்டென்று தோன்றிற்று - எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் அது உன்னைப் போல வளர வேண்டும் என்று...'' நிறுத்தி மவுனத்தில் ஆழ்ந்தாள் பானுமதி.

''எனக்கும் உங்களிடம் ஏதோ ஓர் ஈடுபாடு... ஓர் அன்பு...''

''ஆகக்கூடி ஒரு பதிமூன்று வயசுச் சிறுமியும் இருபத்தி ஆறு வயது டாக்டரும் தோழிகள் ஆகிப் போனார்கள்'' என்று முறுவல் செய்தாள் மூத்தவள்.

பதிலாகச் சிறு புன்னகை செய்துவிட்டு, ''தொடங்கியதை விட்டு விட்டேனே அக்கா. அவ்வளவு பிராக்டீசையும் வருமானத்தையும் விட்டு விட்டு இங்கே வந்து ஆசிரமம் நடத்துகிறீர்களே ஏன் அக்கா? எப்படி முடிகிறது?'' என்று விசாரித்தாள் ரமி.

''தலைவலி, காய்ச்சலுக்கு மருந்து தரவும் பேறுகாலம் பார்க்கவும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இது... வருமானம் குறைவான இந்தத் தொழிலுக்கு யார் வருவார்கள்? இப்போதுகூட இங்கே ஊழியர் ரொம்பக் குறைச்சல். பாரேன் கேட்கிறதா?'' என்று ஒரு கட்டடத்தினுள் ரமியையும் அழைத்துக் கொண்டு புகுந்தாள் பானுமதி.

இரண்டு வயதுக்கு உட்பட்ட நான்கு குழந்தைகள் அங்கே இருந்தன.

இரண்டு குழந்தைகள் அழ, மற்ற இரண்டும் கண்களில் நீர் திரள அழத் தயாராகிக் கொண்டு இருந்தன.



அழும் குழந்தைகளின் நடுவில் ஓர் இளம் பெண் - ரமியை விடச் சற்று சிறியவளே... தானும் அழுது விடுவாள் போல நின்றிருந்தாள் பாவம்.

இந்தச் சின்ன வயதில் இவர்களுக்கு யாரும் இல்லையா?

பதினேழு வயதான பிறகும் 'என் ரமிக்கண்ணுக்கு ஏன் முகம் சரியில்லை' என்று கரிசனம் காட்டிய தந்தையின் நினைவு வந்தது.

சட்டெனக் குனிந்து ஒரு குழந்தையைத் தூக்கி ''என் கண்ணுக்கு என்னம்மா அழுகை?'' என்று ஆறுதல் படுத்தினாள்.

பானுவும் ஒரு குழந்தையை ஏந்தவே சற்று நேரத்தில் அங்கே அமைதி நிலவியது.

அடுத்த பகுதியில் இருந்து வெளியே வந்த சில குழந்தைகள் கையோடு கொணர்ந்த தட்டுகளைக் கழுவுவதை ரமி கண்டாள்.

அவர்களில் பெரிய பெண்ணுக்கு எட்டு வயது இருக்கக் கூடும். கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசத்தில் ஏழெட்டுப் பேர் பானுவைப் பார்த்து சாந்தமாக முறுவலித்துவிட்டு தன் வேலையைச் செய்தார்கள்.

எட்டு வயதில் ரமி சாப்பிட்ட தட்டுகளை மேசையில் இருந்து எடுத்துச் செல்வது யார் என்றுகூடக் கவனித்தது இல்லை.

கழுவுவதில் அவர்களுக்கு உதவவதற்காக முன்னே நடந்த அவளைப் பானுமதி தடுத்தாள்.

''அவர்கள் பொறுப்புடன் பழக வேண்டும் ரமி வா'' என்று இன்னொரு பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே சில குழந்தைகள் நடுவே பானுவின் கணவர் சிவநாத் முகர்ஜி இருந்தார். ஏதோ கதை சொல்லிக் கொண்டு இருந்தார் போலும்.

அவரிடம் முகமன்கள் முடிந்ததும், ''நீங்கள் கொஞ்சம் பார்த்துக் கொள்கிறீர்களா? நான் ரமியோடு சிறிது உலாவி விட்டு வருகிறேன்'' என்றாள் பானு.

அவர் தலையசைத்துவிட்டுக் குழந்தைகளிடம் ஈடுபட்டார்.

பின்புறமாக ரமியை அழைத்துப் போனாள் பானு.

தூரத்தில் ஆற்றங்கரை தெரிந்தது.

ஒரு மரத்தடியில் அமர்ந்து, ''இப்போ சொல்லு'' என்றாள் பானு.

விக்கித்து விறைத்தாள் ரமி.

என்னவென்று எதைச் சொல்லுவது?

தோழியின் தோளில் கைவைத்து, ''என்ன ரமி? என்ன விஷயம்?'' என்று மிருதுவான குரலில் விசாரித்தாள் பானு.

உதட்டைக் கடித்துக் கண்ணீரை அடக்கினாள் ரமி.

''அக்கா எனக்கு இங்கே ஒரு வேலை தருகிறீர்களா? சம்பளம் ஒன்றும் வேண்டாம். எனக்கும் அம்மாவுக்கும் சாப்பாடு போட்டால் போதும். காலம் முழுமையும் இங்கே இருந்து விடுகிறேன்.''

ரமி மெல்லிய குரலில் கெஞ்சுவது போலக் கேட்டாள்.

## 13



சற்று நேரம் பானு ஆச்சரியத்துடன் ரமியைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.



நடுங்கும் உதடுகளையும் திரளும் கண்ணீரையும் ரமி கட்டுப்படுத்த முயல்வது அவளுக்குப் புரிந்தது.

கண்டுகொள்ளாதவள் போல. ''ஏன் ரமி, அங்கே உன் வேலை என்ன ஆயிற்று? அத்தானோடு உன் திரு மணம்...'' என்று தொடங்கியவள் ''அக்கா'' என்ற ரமியின் அலறலில் வியந்து நிறுத்தினாள்.

அவளது வியப்பைக் கவனியாமல் ரமி வேகமாகப் பேசலானாள். ''அந்த மாதிரி எல்லாம் இனி ஒன்றும் கிடையாது அக்கா. இனி இந்தப் பிறவியில் சென் னைக்குப் போவதாகவும் இல்லை. 'எப்போது வந்தாலும் உனக்கு இங்கே இடம் உண்டு' என்று நீங்கள் எழுதி னீர்களே... அக்கா, இங்கே இப்போது வசதியில்லை என்றால் பரவாயில்லை. ஆனால் வேறே எங்காவது ஒரு வேலை... அதுவும் நீங்கள் தான் பார்த்துத் தரவேண்டும்'' என்று கெஞ்சலாக முடித்தாள்.

அவள் சிரமப்பட்டு பேசுவதைக் கண்டு முதுகில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தாள் பானு.

''இங்கே வேலை செய்ய வருகிறவர்களுக்கு... அதுவும் அதிகச் சம்பளம் கேளாமல் வருகிறவர்களுக்கு மேள தாளத்தோடு வரவேற்பு நிச்சயம். ஆனால் சுந்தர் விஷ யம் நிச்சயம்தானா ரமி? வெறும் ஊடல் சமாச்சாரங்கள் எல்லாம் இந்தப் பருவத்தில் பிரமாண்டமாகத்தான் தெரியும். பிறகு ஊடல் மாறிக் கூடல் என வரும்போது... என்னம்மா?''

''ஒ... ஒன்றும் இல்லை அக்கா ஏதோ பூச்சி ஏறினாற் போல இருந்தது அக்கா. அத்தான் வழியும் என் வழியும் இனி என்றும் வேறு வேறுதான். இது உறுதி. இனி வாழ்க்கை முழுமையும் வேறு எங்கும் செல்லும்

எண்ணமும் இல்லை. அங்கே வேறே கடன், கடமை என்று ஏதும் இல்லை, எல்லாம் முடிந்து போயிற்று எல் லாமே தான் இனி... பானு அக்கா, நீங்களாக வெளி யேற்றாவிடில் இங்கேயே இருந்து விடுவேன். உயிர் இருக்கும் வரையும்'' என்றாள் ரமி.

''வேலை தருவது பற்றி ஒன்றும் இல்லை ரமி. ஆனால் வேலைப்பளுவும் இருக்கும். முன்னேறவும் வழி கிடையாது. ரமி, முன்னே வரச் சொல்லிவிட்டு இப்போது தயங்குகிறேன் என்று எண்ணுகிறாயா? அது சில மனமாறுதலுக்காக மட்டும்தான் எழுதினேன். அப்பாவோடு எல்லாவற்றையும் இழந்து நிற்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். இங்கே இந்தப் பிஞ்சுகளின் முகத்தைப் பார்த்தால் மனம் மாறும். ஆறும் என்று எழுதினேன். நீயானால் நிலையாக இங்கேயே இருக்கப் போகிறேன் என்கிறாய். இங்கெல்லாம் சம்பளம் மிகக் குறைவு. இதில் நீ எதை மீத்து எதைச் சேர்ப்பாய்?'' தன் காரணங்களை வெளிப்படையாக உரைத்தாள் பானுமதி.

''சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்பது இல்லையே...''

''உளறாதே, நாளையே கல்யாணம் என்றால்...''

''போதும்!'' சட்டென எழுந்து நின்றாள் ரமி. ''கல் யாணம் கருமாதி எல்லாம் கிடையாது அக்கா. உங் களுக்கு வேலை தர விருப்பம் இல்லாவிட்டால் விட்டு விடுங்கள், வீண் பேச்சு எதற்கு?'' என்றாள் கசப்புடன்.

''கோபமா, ரமி பைத்தியம்'' என்று அவள் கையைப் பற்றி இழுத்து உட்கார வைத்தாள் பானு.

''நான் உனக்காகச் சொன்னேன். மற்றபடி இல்லத் துக்கு ஒரு நலம் என்றால் இரு கைகளையும் விரித்து ஏற்றுக் கொள்வேனே'' என்று நகைத்தாள்.



அன்றிலிருந்தே வேலையைத் தொடங்கி விட்டாள் ரமி.

அன்றைக்கு விடுமுறை தினம் என்றதால் இல்லத்துக் குழந்தைகளிடம் அறிமுகத்திலும் சிறு பணிகளிலுமாகப் பொழுது கழிந்தது.

மறுநாள் ரமியின் வேலைகள் ஓரளவு வரையறுக்கப் பட்டன.

மூன்று, நாலு வயது ஆன சிறு குழந்தைகளின் பொறுப்பு அவளுக்குக் கிடைத்தது.

அந்தப் பிஞ்சுகளுக்கு 'ரைம்' கற்றுக் கொடுத்து, டயர் உருட்டச் சொல்லி, க்ரேயான் பென்சிலால் வரைய வைத்து, உணவைப் பார்த்து, உறங்கச் செய்ய வேண் டும்! பிஞ்சுகளின் 'தன் பென்சிலை எடுத்துக் கொண் டான்', 'என் சிலேட்டைத் தொட்டான்' என்ற முறை யீடுகள் கூட ரமிக்கு மிக ஆறுதலாகவே இருந்தன.

'மனம் மாற ஆற வரச் சொன்னேன்' என்ற பானுமதி யின் வார்த்தைகள் கொஞ்சம் புரிந்தன.

மறுநாள் வீட்டிற்கும் ஏற்பாடுகள் செய்து விட்டாள் பானு.

சுமார் பதினைந்து நிமிட நடையளவு தூரத்தில் ஒரு சின்ன ஓட்டு வீடு.

பெரும் சாலையை ஒட்டியே வீடு இருந்ததால் அவ்வப்போது போக்கு வரவுக்குக் குறைவு இல்லை.

எனவே, எந்தத் தயக்கமும் இல்லாமல் ரமி காலையி லேயே 'நல்லக'த்தை நாடிப் போய் விடுவாள்.

பகல் முழுமையும் பிள்ளைகளோடு கழிந்து விடும். 'மிஸ் மிஸ்' என்று அவள் முகம் நாடி வந்த குழந்தைகள் வேறு எந்த வேதனைகளுக்கும் இடம் விடவில்லை.

ஆனால், இரவு மட்டும் முழு வேதனையில் கழிந்தது.

கவுதமன் என்ன நினைத்திருப்பான்?

ஒரு முழு அன்னியனிடம் நெகிழ்கிறாளே, இவள் எவனிடமும் குழைவாள் என்று எண்ணியிருப்பானோ?

இந்த நிலையில்கூட இப்படி இளகுகிற பெண் இதி லேயே பழகியவளாகத்தான் இருப்பாள் என்று மட்டமாக எடை போட்டிருப்பானோ?

எதற்கும் துணிந்தவள் என்றுதானே கணித்திருப்பான் என்றெல்லாம் பலவாறு எண்ணித் தன்னையே வதைத்துக் கொள்வாள்.

இந்த எண்ணங்கள் எல்லாம் சரியே என்பதுபோல 'இன்பகரமான அனுபவம் மீண்டும் வைத்துக் கொள் வோமா' என்ற அவனது ஆழ்ந்த குரல் அவளைத் துடிக்க வைக்கும்.

எப்போது விடியும், எப்போது இல்லத்துக்குப் போக லாம் என்று தவித்தபடி விடியலுக்காகக் காத்திருப்பாள்.

அங்கு வந்த மூன்றாம் நாள் இரவு.

அன்னை உறங்கி விட்டாள் என்று எண்ணி மனம் போன போக்கில் துடித்து, துவண்டு, புரளுகையில் திடுமென மின்சார பல்பு உயிர் பெற்றது.

திகைத்துப் பின் முகம் மறைக்க கவிழ்ந்தாள் ரமி.

விளக்கை அணைத்துவிட்டு மகளிடம் வந்தாள் ரஜனி.

ரமியின் அருகில் அமர்ந்து அவள் தலையை வரு டியபடி ''என்னம்மா... உனக்கு என்ன மன வேதனை? எதை நினைத்து இப்படித் துடிக்கிறாய் கண்ணா?'' என்று மெல்ல வினவினாள்.



தன் தவிப்பைத் தாயார் கண்டு கொண்டாளோ? இருந்தாலும் அந்தக் கனிவான குரலில் ரமியின் கண்ணீர் மிகுதியாயிற்று.

ஆயினும் உண்மை கூற முடியாமல், ''அப்பா நினைவு வந்தது'' என்று சமாளிக்க முயன்றாள்.

மகளை வருடியபடியே ''ஏன் கண்ணம்மா பொய் சொல்கிறாய்? அப்போதெல்லாம் திணறலாய்த் திணறி னாலும்கூட அப்படி இப்படிச் சமாளித்தாயம்மா. இப் போது அடக்க மாட்டாமல் தவிக்கிறாயே ஏன். அம்மா அசடுதான்; என் அசட்டுத் தனத்தாலேயே உனக்கும் அப்பாவுக்கும் எவ்வளவோ கஷ்டத்தை உண்டாக்கியும் இருக்கிறேன். ஆனால் இந்த அம்மாவும் ஒரு நாள் உணர்ந்து தானே ஆகணும். இந்த நாலு நாட்களாக உன்னைக் கவனித்துக் கொண்டுதானே இருக்கிறேன். என் தங்கம், அப்படி மருகுகிறாயேம்மா. ஏன்? அன்று அந்தப் பாலிகா ரொம்பக் கஷ்டப்பட்டாளா? அல்லது அன்றைக்கு என்னதான் நடந்தது கண்ணு?'' என்று மகள் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு வினவி னாள்.

அதற்கு மேல் அடக்க மாட்டாமல் குமுறிக் குமுறி அழுதாள் மகள்.

பிறகு மெல்ல மெல்ல அந்த அடகு விற்பனை ஆபத்து கவுதமனுடைய நிபந்தனை, பிறகு நடந்தது எல்லாம் சொல்லி முடித்தாள்.

கடைசியாக, ''ஆனால் மனத்திற்கு இவ்வளவு அவ மானமாகவும் வேதனையாகவும் இருக்கும் என்று நினைக்க வில்லை அம்மா. எவ்வளவு அழுதாலும் கொலை செய்து விட்டு பச்சாதாபப்படுவது போல. இதையும்

நிவர்த்திக்க வழியே இல்லை என்கிறபோது தான் தாங்கவே முடியவில்லை அம்மா'' என்று மீண்டும் ஒரு மூச்சு விம்மி அழுதாள்.

மகளை வயிற்றோடு அணைத்தபடியே வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தாள் ரஜனி.

ஆனால் உலகில் உள்ள அனைத்து வார்த்தை களாலும் தர முடியாத தேறுதலை அந்த இறுகிய அணைப்பு தரவே மெல்ல மெல்லக் கண்ணீர் குறைந்து நின்று, பல நாட்களுக்குப் பிறகு ரமி அன்று தூங்கினாள்.

அன்றைய இரவுக்குப் பின் ரமிக்கு ஒரு வித்தியாச மான தாய் கிடைத்தாள்.

அசட்டுத்தனமான வெறும் அன்பை மட்டும் கொட் டாமல் ஆதரவையும் தரும் தாய் கிடைத்தாள்.

மறுநாள் ஒரே தரம் மட்டும் அதைப் பற்றிப் பேசி னாள் ரஜனி.

''இது பற்றி முன்பே தெரிந்திருந்தால் நான் ஜெயி லுக்குப் போனாலும் பரவாயில்லை என்று உன்னைத் தடுத்திருப்பேன். ஆனால், இனிமேல் அதையெல்லாம் நினைப்பது, நீ சொன்ன மாதிரி கொலை செய்துவிட்டு 'அய்யோ கொலை செய்து விட்டோமே' என்று மறுகு வது போலத்தான் சீர் பண்ண முடியாத தப்பு. நீ ஆசைப் பட்டுப் போகவில்லை. அதனாலே இதுலே தப்பு இல்லை. உன் மேல் மாசு மறு படியவில்லை என்று வாதாட நான் தயாராக இல்லை... இதை அடியோடு மறந்துவிடு என்று சொன்னாலும் அதுவும்... அப்படி மறக்கிறதும் சுலபத்தில் சாத்தியம் இல்லை. இருக்கட்டும். எப்படியோ ஒரு மூலையில் ஒதுக்க முயற்சி பண்ணு. முடிந்த அளவு நினைக்காமல் இருக்கப் பார்... சந்தோஷமாக இருக்க



முடியாவிட்டாலும் ரொம்பவும் துக்கப் படாமல் இருக்கிற வழியைத் தேடு.''

ரமியும் வெகுவாக முயற்சி செய்தாள்.

தாயின் சின்னச் சின்ன ஆதரவான செயல்கள் துணை செய்தன.

வீட்டில் வேலைகளை முன்போலச் சிறு சோம்ப லுடன் இழுத்து இழுத்துச் செய்யாமல் விரைந்து முடித்து விட்டு ரஜனியும் இல்லத்திற்கு வந்து சிறுசிறு பணி களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை ரமி கவனித் தாள்.

தனக்குச் சொன்ன புத்திமதியைத் தாயார் தானும் கடைப்பிடிக்கிறாள் என்று புரிந்து கொண்டாள்.

நல்லது என்று நினைத்தாள்.

தாயிக்கும் மகளுக்கும் இடையே இதுவரை இருந்தி ராத நெருக்கம் உருவாயிற்று. அந்த நெருக்கம் நலிந்த மனதிற்குத் திடத்தையும் தந்தது.

எல்லாக் கெடுதல்களிலும் ஒரு நன்மை இருக்கும் என்பது இதுதானோ என்று ரமி எண்ணினாள்.

அலை ஓய்ந்தாற்போல வீட்டில் மெல்ல மெல்ல அமைதி தோன்றியது.

மேலும் மூன்று தினங்கள் இந்த மேலோட்டமான அமைதியில் கழிந்தன.

மேலே அலையில்லாவிட்டால் அடித்தளத்தில் இருக்கும் சேறு அப்படியே படிந்து விடும். இந்த அமைதியிலேயே காலத்தை ஓட்டி விடலாம் என்று ரமி சிறு ஆறுதலுடன் நினைக்கத் தொடங்கினாள்.

ஆனால் காற்று இருக்கும் வரை அலைக்கு ஓய்வு ஏது?

காற்று நின்றால் உயிர்மூச்சு நின்றுவிடும். எனவே மூச்சு உள்ள வரையில் அலையும் அதில் அல்லாடலும் உண்டு என்பதை அவள் இன்னமும் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.

நல்லகத்தில் ரமியும் அவளுடைய அன்னையும் தஞ்சம் புகுந்து ஒரு வாரம் இருக்கும்.

ஒரு நாள் மாலையில் ரமிக்குப் பானு அழைப்பு விடுத்தாள்.

அழைப்புக்கிணங்கி ஆபீஸ் அறைக்குச் சென்ற ரமி உள்ளே கலகலவென்ற பேச்சுக்குரல் கேட்க சற்றுத் தயங்கி விட்டு உள்ளே சென்றாள்.

''நிவாஸ், மீட் அவர் நியூ டீச்சர், மிஸ் ரமி'' என்று அறிமுகம் செய்தாள் பானு.

வியந்த பார்வையுடன் உதட்டைக் குவித்து விசிலடித்தான் அந்தப் புதியவன்.

தோளைப் போர்த்தி மூடியிருந்த முந்தானையை ரமியின் கை அழுந்தப் பற்றியது.

# 14



ரமி பத்திரத்துடன் ஓட்டமும் நடையுமாகச் சென்று மறைந்து இரு தினங்களுக்குப் பிறகு கவுதமன் படுக்கையில் சாய்ந்தபடி படித்துக் கொண்டிருந்தான்.



கையில் இருந்த 'இந்தியப் பொருளாதாரம்' பற்றிப் புத்தகம் சிந்தனையைத் தூண்டிற்று.

தன் போக்கில் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை இழுத்து விடலானான்.

சிகரெட்டுப் புகையின் மணத்தோடு வேறு ஒரு வாசனையையும் அவனது நாசி உணர்ந்தது.

அது... அவள் வாசனை

அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

எப்படி இருக்க முடியும்?

தினந்தோறும் மெத்தை, தலையணைகளின் உறைகளும், படுக்கை விரிப்புகளும், ஏன் படுக்கை அறை திரைச் சீலைகளும்கூட மாற்றப்பட்டுச் சலவை செய்யப் படுகின்றன.

அதை மீறி அவளது மணம் எப்படி நிலைக்க முடியும்?

ஆயினும் அவனால் அவளை உணர முடிந்தது.

மென்மையான அழகிய உடல்.

நினைவு ஓடும்போதே அவனது உடல் சூடேறியது.

அவன் தொடுகையில் கூசிச் சுருங்கிய அந்த மிருதுவான சருமம்...

அவளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

எதற்கும் இருக்கட்டும் என்று அவளது முகவரியை சுந்தரிடம் வாங்கி வைத்தது நினைவு வந்தது.

நாளை பார்த்துவிடலாம்!

மறுநாள் கவுதமன் அந்த விலாசத்துக்குச் சென்று பார்க்கையில் முழுக்க முழுக்க வித்தியாசமான முக அமைப்போடு வேறு சிலர் இருந்தனர்.

''இங்கே ஒரு பெண்...'' என்று அவன் இழுத்தபோது நாங்கள் புதிதாக வந்தவர்கள். நீங்கள் எந்த விவரம் வேண்டுமானாலும் மாடியில் போய்க் கேளுங்கள்'' எனப் பட்டென்று பதில் கிடைத்தது.

ஆனால், திரும்பிப் போக மனம் வராமல் மாடி ஏறிச் சென்றான்.

மாடிப் படியில் ஏறும்போதே அவனுக்குள் யோசனை பிறந்தது.

கீழ்வீட்டுப் பெண்மணியின் சந்தேகப் பார்வை யோசனையை உறுதிப் படுத்தவும், ''கீழே முன்பு இருந்த பெரிய அம்மாவைப் பார்க்க வேண்டும். இப்பொழுது அவர்கள் எங்கு இருக்கிறார்கள்?'' என்று மாடியில் இருந்த அம்மாவிடம் கேட்டான்.

ரமியைப் பற்றி ஒரு வார்த்தை மூச்சு விடவில்லை.

அந்த அம்மா முழங்காலைத் தேய்த்து விட்டுக் கொண்டே ''யாரு? ரஜனி அம்மாளா?'' என்று விசாரித்தார்.

அந்தப் பெயர் அவனது நினைவு மண்டலத்தில் நெருடியது.

''பாவம் ரொம்பச் சின்னப்புள்ள மாதிரிக் குணம்'' என்று இழுத்தார் தெரஸா.

'என் அம்மா குழந்தை மாதிரி என்றாளே' ரமி அப்படியென்றால்?

''ரஜனிராஜன்!'' என்று முணுமுணுத்தான் கவுதம்.

''ஆமாம் அதுதான் ரமி அம்மாவோட பேரு. 'மிஸஸ் ரஜனிராஜன்'னு பெருமையாகச் சொல்லிக்கிடும்.''



ரஜனிராஜன்!

அப்படியானால் ரமி சுந்தருக்காக வரவில்லையா? பெற்று வளர்த்த தாயாருக்கான அவமானத்தை ஏற்க வந்தாளா? மைகாட்! இப்போது...

''இப்போது அவர்கள் எங்கே?'' என்று படபடப்புடன் கேட்டான்.

''ஊம்...'' என்று பெருமூச்சு விட்டார் தெரஸா, ''அவங்க வீட்டைக் காலி பண்ணிட்டுப் போய் இன்னியோட நாள் மூணாறதே'' என்றார் வருத்தமாக.

''என்ன!'' என்று அதிர்ந்தான் அவன்.

''ஆமாங்க. அந்தம்மா கொஞ்சம் அசடு மாதிரி, ஆனால் ரமி தங்கமான பொண்ணு. தன் அம்மாவையே பெத்த புள்ளையைப் போலப் பார்த்துக்கிடும். என்னவோ நாலாம் நாள் காலையில் திடீர்னு காலி பண்ணிட்டாங்க. பாவம் திடீர்ன்னு என்ன கஷ்டம் வந்திச்சோ என்னவோ?'' என்று புலம்பினார் அந்த அம்மா.

என்ன கஷ்டம் வந்தது என்று அவனுக்குப் புரிந்து விட்டாற் போல இருந்தது.

ஆனால் சுந்தருடைய காதலி ஒரு கன்னியாக இருப்பாள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

மேலும் அவன், அவளைப் பலவந்தம் செய்துவிடவில்லையே, அவளும் மனம் ஒப்பியதுதானே.

ஆயினும் சுந்தரைப் பழி வாங்கவென்று திட்டம் போட்டபோது மிகவும் சரியானதாகத் தோன்றிய ஒன்று இப்போது வெகுவாக நிறம் மாறித் தெரிந்தது.

அவள் தன் தாயைக் காப்பதற்காக அவனுக்குப் பணிந்தாள் என்றால், தன் செயலைக் கடுமையான வில்லத்தனமாக அவன் உணர்ந்தான்.

யோசனையோடு, ''திடீரென்று எப்படியம்மா காலி செய்தார்கள்? ஒரு மாத நோட்டீஸ் என்றெல்லாம் ஒப்பந்தம் எதுவும் இல்லையா?'' என்று விசாரித்தான்.

''பின்னே? அது இல்லாமே இருக்குமா? அதுக்காகத் தானே அட்வான்ஸ் வாங்குறதே. ஆனால் கண்ணுலே த்ண்ணியோட பணத்துக்கு ரொம்பத் தேவை இருக்குது. ஆன்ட்டி முடியுமானால் அட்வான்ஸையும் திருப்பித் தரீங்களா'ன்னு ரமிப் பொண்ணு கேட்டபோது எனக்கு மனசு ரொம்பக் கஷ்டமாயிட்டுது. இருநூறு ரூபாயையும் அப்படியே கொடுத்திட்டேன். 'தாங்க்ஸ் ஆன்ட்டி' என்று ரமிக்குட்டி கண்ணீரோட போனப்ப எனக்குத் தாளவே இல்லை...''

''இப்போது அவர்கள் எங்கே?'' என்று அவசரமாகக் குறுக்கிட்டுக் கேட்டான் கவுதமன்.

''பத்துத் தடவை கேட்டும் அந்தப் பொண்ணு சொல்லவே இல்லையே தம்பி'' என்று ஆற்றாமை யோடு கையை விரித்தார் தெரஸா.

திடீரென்று நிகழ்காலத்துக்கு வந்தவராக எதிரே நின்றவனைக் குறுகுறுப்புடன் ஆராய்ந்தார்! பார்வை யில் கூர்மையுடன் ''நீங்க யாரு தம்பி? அவங்களுக்கு உறவு கிறவா?'' என்று விசாரித்தார்.

வினாடிக்குள் ஒரு முடிவுக்கு வந்து, ''உறவு என்று சொல்வதற்குள் இல்லை அம்மா. ஆனால் ரஜனி அம் மாளிடம் ஒரு சொத்து விஷயமாக ரொம்பவும் முக்கிய மாகப் பேச வேண்டும். அவர்களிடமிருந்து தகவல் ஏதும் வந்தால் இந்த நம்பருக்கு டெலிபோன் செய்யுங்கள்'' என்று கூறி விடைபெற்றான் அவன்!



காரில் ஏறி அமர்ந்தவன் புருவ மத்தியில் முடிச்சுடன் சற்று நேரம் திகைத்தான்.

பிறகு சுந்தருடைய இருப்பிடத்திற்குச் சென்றான்.

சொல்லி அனுப்பியிருந்தால்கூட சுந்தர் ஓடோடி வந்திருப்பான்.

ஆனால் கவுதமனுக்குப் பொறுமை இல்லை.

வசதியான அந்தப் பெரிய அறையைச் சுந்தர் வைத் திருந்த விதம் அவன்மீது கவுதமனுக்கு ஏற்கெனவே இருந்த வெறுப்பை மிகுதிப்படுத்திற்று.

''வாருங்கள், வாருங்கள்'' என்று வாயெல்லாம் பல் லாக அவனை வரவேற்றான் சுந்தர்.

''என்ன சாப்பிடுகிறீர்களா? காபி, போன்விடா அல் லது வேறே மாதிரி வேண்டுமானாலும்...'' என்ற சுந்தரின் உபசாரத்தை அலட்சியம் செய்து, ''அவள் அந்தப் பெண் ரமி எங்கே!'' என வினவினான் கவுதம்.

சுந்தருடைய கை அவனை அறியாமல் கன்னத்தைத் தடவியது.

வந்தவனின் பார்வை கூர்மையாவதைக் கண்டதும் கையால் கன்னங்களை மறைத்தபடி, ''அந்தக் கேவ லத்தைக் கேட்காதீர்கள் சார்'' என்று விம்மினான்.

''ஏன்?'' என்றான் கவுதமன் ஒரு மாதிரிக் குரலில்.

''நான் கட்டிக் கொள்வதாக இருந்த பெண். ஆனால் ரொம்ப முன்னாலேயே வேறே மாதிரித் தொடர்பு இருந் திருக்கும் போல் தெரிகிறது சார்'' என்று கண்ணை உருட்டினான் சுந்தர்.

''என்ன மாதிரித் தொடர்பு?'' என்றான் கவுதமன் பழைய குரலிலேயே.

புரிந்து கொள்ளாமல், ''அதான் சார், பக்கத்துத் தெருவில் இருந்த பையனோடு ரமி ஓடிப்போய் விட் டாள் சார்... சார்... சா..ர்'' என்று விடுபட முடியாமல் துடித்தான் சுந்தர்.

இடது கையால் சட்டைக் காலரைப் பிடித்துக் கொண்டு மறு கரத்தால் உள்ளங்கை எரிய எரிய விளாசித் தள்ளினான் கவுதமன்.

பிறகு சும்மாவிட மனம் இல்லாமல் சுந்தருடைய தலை முடியைப் பலமாக குலுக்கி, ''இன்னொரு தரம் அவளைப் பற்றி நீ தவறாகப் பேசினாய் என்று தெரிந் தால் முதுகெலும்பை முறித்து விடுவேன், ராஸ்கல்'' என்று உறுமினான்.

அருவருப்புடன் சுந்தரை உதறி விட்டுத் தன் வீட்டை அடைந்த கவுதமனுக்கு ஒரே குழப்பம்.

யாரோ ஒருவன் தன் மாமன் மகளைப் பற்றி ஏதோ சொன்னால் தனக்கு ஏன் இவ்வளவு கோபம் கைமீறி வரவேண்டும் என்பது முதல் குழப்பம்.

அடுத்தது, இங்கே இருபது நூறுகளை மறுத்துப் போனவள் அங்கே வீட்டுக்கார அம்மாளிடம் இருநூறு ரூபாய் அட்வான்ஸ் பணத்தைக் கண்ணீர் சிந்திக் கேட்டுப் பெறுவானேன்!

வீட்டைக் காலி செய்து ஓடுவானேன்.

திடீரென்று வீட்டைக் காலி செய்துவிட்டு அவள் போன இடம் கடலாக இருக்குமோ? முழக் கயிறாக இருக் குமோ? அல்லது ரயில் தண்டவாளமாக இருக்குமோ?

''கடவுளே!'' என்று அலறி விட்டான்.



அவசரமாக ஓடிப் போய்க் கடந்த மூன்று நாட்களில் செய்தித்தாள்களையும் எடுத்து வந்து அலசினான்.

நல்ல வேளையாக அவன் அஞ்சியது போன்ற எந்தச் செய்தியும் பத்திரிகைகளில் இடம் பெறவில்லை.

அப்படியானால் அவள் எங்கே போயிருப்பாள்?

பேப்பரில் வாரத எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு தானே இருக்கின்றன என்று வாதிட்டது அவனுடைய அலைப்புற்ற மனம்.

இன்டலிஜென்ஸில் உயர் அதிகாரியான ஒருவர் அவனுடைய நண்பர்.

அவர் மூலமும் ரகசியமாக விசாரித்தான்.

அவர் மூலமும் ஒரு விவரமும் வெளிவரவில்லை.

தெரியாத அளவில் கொஞ்சம் நிம்மதியும் உண் டாயிற்று.

கூடவே இன்னொரு ஆறுதல்.

சாகப் போகிறவள் அந்த இருநூற்றையும் கண்ணீர் சிந்தி வாங்கிப் போவானேன்.

அவனிடம் மறுத்தது உண்மைதான். அவனிடம் பணம் பெற விரும்பாமையே அதன் காரணமாக இருக் கக்கூடும்.

ஆனாலும்...

இதே குழப்பத்தில் அவன் வேலை ஓடாமல் தவித்த ஐந்தாம் நாள் அவன் நண்பன் அருண் அவனைத் தேடி வந்து சேர்ந்தான்.

''என்னம்மா கவுதம், நேற்று டென்னிஸ் ஆடவர வில்லை? முந்தா நாள்... நாலாவது நாள்கூட...''

''ச்சு ஒன்றும் இல்லையப்பா...'' என்று அசிரத்தையாகச் சொல்லிவிட்டுத் தங்க நிற சிகரெட் கேஸை நண்பனிடம் நீட்டினான் கவுதம்.

அவன் ஒன்றை எடுத்ததும் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு இருவருக்குமாகப் பற்ற வைத்தான்.

... அன்று சிகரெட் புகைத்தபோது அவள் லேசாகக் கமறினாள். சிகரெட் என்றால் பிடிக்காதோ...

''என்னம்மா அவ்வளவு தீவிரமான சிந்தனை?'' என்று இடைவெட்டியது நண்பனின் குரல்.

அருணை ஆழப் பார்த்துவிட்டு இவன் விடமாட்டான் என்று புரிந்து, ''ஒரு பெண்'' என்றான் சுருக்கமாக.

''வேறே என்னவாக இருக்கும்?'' என்று நகைத்தான் அவன். ''படியவில்லையாக்கும். அப்படி என்னதான் வேண்டுமாம்?''

''ஷ் அதில்லை அருண்'' என்று அதட்டினான் கவுதமன். ''குடும்பத்துப் பெண்...''

''மற மகனே, மற, உடனே விநாடியில் மற.''

''ச்சு, புரியாமல் பேசாதேப்பா. நீ நினைப்பதுபோல் பிரச்சினை இல்லை... அருண், இப்போது அவளைக் காணவில்லை. தற்கொலை என்று ஏதும் செய்திருப்பாளோ என்று மனதில் சங்கடமாக இருக்கிறது.''

''டேய் முட்டாள்! நீ ஒன்றும் ரேப் அது இது என்று...''

''சேச்சே... அதெல்லாம் இல்லை. அவளும் ஒப்பித்தான் ஆனால்...''

''பின்னே உன் தப்பு என்ன பிரதர்? இருந்திருந்து உப்புப் பெறாத காரியத்துக்காக நாலு நாளாக பிரம்மச்சரியம் காக்கிறாயாக்கும் வா வா வா... இன்று ஒரு...''



''ச்சு. இல்லை அருண், ஒரே டல்லாக இருக்கிறது.''

''டல்லை ஒழித்து கிக் கொடுக்கத்தானே நான் உன்னைக் கூப்பிடுவதே கவுதம். இன்று 'லிட்டில் ஹெல்'லில் ரோவா ட்வின்ஸின் ஸ்டிரிப்டீஸ், இரண்டு பேருமே ஆஸ்திரேலியன் ஆப்பிள்தான். கண்ணைக் காட்டினால் ஓடி வருவார்கள். வா... அட வாய்யா'' என்று வற்புறுத்தி கவுதமனை இழுத்துச் சென்றான் அவன்.

நண்பனோடு செல்லும்போதும், எப்போதும் போல இந்த அளவில் நில்லாமல் குலப்பெண் மீது ஏன் கை வைத்தோம் என்று தன்னையே நொந்து கொண்டான் கவுதம்.

'யாரையோ பழி வாங்குவதாக எண்ணிக் கொண்டு ஓர் அறியாப் பெண்ணை பலிவாங்கி விட்டேனே' அவன் மனம் அலை பாய்ந்தது.

ஆனால் இனி அந்த எண்ணங்களால் பயன் எதுவும் இல்லை; அருண் சொல்வது போல மறந்துதான் ஆக வேண்டும்!

ஆயினும் மறப்பது சுலபமாயில்லை.

அன்றிரவில் முக்கால் உடலைத் திறந்து போட்டுக் கொண்டு ஒரே ரோவஸ் பெண் அவனை நெருங்கிய போது அவனுக்கு வயிற்றைப் புரட்டியது.

அவள் மேலே வந்து விழுந்தபோது அன்று கூசிச் சுருங்கிய பட்டான சருமம் இன்று நினைவுக்கு வந்தது இவனுக்கு.

மிஞ்சிய ஆடையையும் அவள் அகற்ற முற்படும் போதே கழுத்து வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஓடிய பெண் மனதில் உலா வந்தாள்.

சே!

கவுதம் எழுந்து விட்டான்.

திகைத்து விழித்த அந்தப் பெண்ணிடம், ''சாரி டியர்! சற்று உடம்பு சரியில்லை'' என்று கூறிப் பணத்தை அதிகமாகவே கொடுத்துவிட்டு வெளியேறினான்.

தொடர்ந்து இரு தினங்களைப் புகை மண்டலத்தில் கழித்தான்.

ஆஸ்டிரே நிரம்பி வழிந்தது.

கடைசியாக இனி 'இந்த மாதிரி உறவே வேண்டாம்' என்று முடிவெடுத்தான் அவன்.

ஆனால்... ஒரு வேளை... அந்த ரமியைப் பார்க்க முடிந்தால்...

## 15



பானுமதிக்குச் சிறு வயதில் இருந்தே குழந்தைகள் என்றால் பைத்தியம்.

தன் முசுட்டுச் சிற்றன்னையிடம் வணங்கிப் போன காரணமே அந்தச் சிற்றன்னை மூலம் கிடைத்த தம்பி தங்கைகளை உயிராக நேசித்ததுதான்.

சிவநாத் முகர்ஜியை மனதால் வரித்து மாலையிடவும் விரும்பியபோது வீட்டில் சுடும் எதிர்ப்பு உண்டாயிற்று. வேற்று மொழி, இனம், ஜாதி என்று எல்லாமே மறுப்புக்கே இடமாகிப் போயிற்று.



கடைசியாக வீட்டை எதிரிட்டுக் கொண்டு வெளியேறி சிவநாத்தை அவள் மணந்தபோது வீட்டுச் சிறுவர்களின் நினைவுதான் அவளை மிகவும் பாதித்தது.

பத்தாம் மாதமே தனக்கென ஒன்றைப் பெற்றுவிட விரும்பினாள்.

ஆனால் மேலும் ஒரு பத்து மாதம் சென்ற பின்னரும் அது நிகழாததால் இருவருமே தம்மைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டனர்.

சோதனைகளின் முடிவு தெரிந்ததும் சில நாட்கள் பானு இடிந்து போனாள்.

தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று மனைவியை ஆறுதல் படுத்த சிவநாத் முயன்றார்.

ஆனால் பானுவுக்கு வேறு எண்ணம் தோன்றியது.

காரணம் இல்லாமல் உலகில் எதுவும் நடப்பது இல்லை. அவளுக்கு மிகவும் பிரியமான ஒன்று மறுக்கப்படுவது என்றால், அந்தத் தண்டனைக்குச் சரியாக அவள் ஏதாவது பிழை புரிந்திருக்க வேண்டும். அல்லது வேறு ஏதாவது பெரிய காரியம் ஒன்றை அவளைக் கொண்டு நடைபெற வேண்டி இருப்பதால் இந்த வடிகால் மூடப்பட்டிருக்க வேண்டும்.

பிழைக்கு பிராயச்சித்தமானாலும் சரி, பெரிய காரியம் நடப்பதானாலும் சரி என்ற எண்ணத்தில் பிறந்ததுதான் இந்த இல்லம்... நல்லகம்.

ஆனால் ஓர் அனாதை இல்லத்தை உருவாக்கி நடத்துவது எளிதான காரியம் அல்லவே.

பானுவின் தாய்வழிச் சொத்தையும் சிவநாத்தின் அன்று வரையிலான சேமிப்பையும் முதல் செலவுக்குப் பயன்படுத்தினார்கள்.

திருச்சி நகரத்தை அடுத்து காவேரிக்கரை ஓரமாகப் பெருமளவில் ஆன நிலம் ஒன்றை ஒரு பெரியவர் அளித்தார்.

ஓலைக்கூரை வேய்ந்த அழகிய கட்டிடங்களுடன் 'நல்லகம்' எழுந்தது.

நம் நாட்டில் அனாதைப் பிள்ளைகளுக்கா பஞ்சம்?

பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகக் கொஞ்சம் நெருக்கடி வந்தது.

மாலை வேளையில் திருச்சியில் பானு தன் மருத்துவத் தொழிலைத் தொடர்ந்து பொருள் ஈட்டினாள்.

அத்துடன் சேர்ந்த சிவநாத்தின் வருமானம் கூடப் போதாதே என்ற நிலை வந்தது.

சிவநாத்தின் நண்பனான நிவாஸின் யோசனைப்படி நர்சரிப் பள்ளி ஒன்றையும் தொடங்கினார்கள்.

கல்வியும் பயிற்சியும் தரமாகவே இருந்ததால் வருமானம் பெருகியது.

கூடவே நல்ல செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்த நல்ல நிலையில் இருந்த நிவாஸ் இந்த ஆசிரமத்துக்கு ஒரு விளம்பர அதிகாரி போலப் பணியாற்றினான்.

நிவாஸைப் பொறுத்தவரையில் அவனுக்கு இந்த இல்லத்திடம் பற்றுதல் என்று கிடையாதுதான்.

ஆனால் நண்பனான சிவநாத்திடம் மிகுந்த பிரியம் உண்டு.

ஓய்வு பெறும் காலத்தில் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் இருபத்தைந்து ஆண்டுகள் முன்னதாகவே இழுத்துப் பிடித்துக் கொண்டு சிரமப்படுகிறாரே என்ற எரிச்சல் உண்டு.



இளம் கணவனான தம் நண்பன் இந்த முப்பத்தியிரண்டு வயதில் பெரிய குடும்பத் தலைவன் போல நெற்றியில் கவலை மேட்டுடன் வளைய வருவதில் அதிகமான வருத்தமும் உண்டு.

எனவே தன் குடும்பத்தின் செல்வாக்கைப் பயன்படுத்திப் பல வழிகளிலும் 'நல்லக'த்துக்கு வருமானம் பெறுமாறு செய்து வந்தான்.

பொதுவாக இலகு வாழ்க்கையில் நாட்டமுடையவன் அவன்.

நண்பனின் குடும்பத்திற்காக மட்டுமே ஆசிரமத்துக்கு போய் வந்து இருந்த அவன் கண்களில் அன்று பட்ட அழகிய மலர் புதிய சுவாரசியத்தை ஊட்டியது.

நிவாஸின் பார்வை ஆர்வத்துடன் தன் மீது படியவும் ரமி கூசிப் போனாள்.

தோளை மூடியிருந்த முந்தானையை இறுகப் பிடித்தபடி திருப்பிச் செல்ல முயன்றபோது பானு அவளை அழைத்து ''ரமி, இவர் நம் இல்லத்தின் பொறுப்பினை பாதியைத் தாங்குகிறவர். இவர் இல்லாவிடில் இல்லத்தை நடத்துவதே சாத்தியமற்றுப் போயிருக்கும். பெயர் நிவாஸ். நிவாஸ் இவள் புதிய ஆசிரியை மட்டும் அல்ல. என் இனிய சிநேகிதியும் கூட'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

''என்னைப் பற்றி மிகவும் அதிகப்படியாக் சொல்லி விட்டார்கள் டாக்டர்'' என்று முறுவலித்தான் நிவாஸ்.

அதற்குள் கரம் குவித்து, ''வணக்கம்'' என்ற ரமி ''கொஞ்சம் வேலை இருக்கிறது அக்கா'' என்று திரும்பலானாள்.

''சற்றுப் பொறுங்கள் ரமி. இப்படி ஓடி மறைய முயன்றீர்களானால் உங்களுக்கு 'மின்னல்' என்று பட்டப் பெயர் வைத்து விடுவேன்'' என்று நிவாஸ் விளையாட்டுக் குரலில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே காது கேளாதவள் போன்று ரமி மறைந்தே போனாள்.

அவன் முகம் சுருங்கியது.

சிவநாத்கூட ''மரியாதை தெரியாதா உன் தோழிக்கு?'' என்றார்.

பானுவுக்கும் ரமியின் நடத்தை சங்கடமாகத்தான் இருந்தது.

''ஒரே பெண்ணாக வளர்ந்தவள், மற்றவர்களை எண்ணத் தெரியவில்லை'' என்று மன்னிப்புக் கோருவது போல முறுவலித்தாள்.

''இவள் கர்வம் கொண்டவள் அல்ல நிவாஸ். முன்பு செழிப்பாக இருந்தவர்கள். தந்தை இறந்த பின் எல்லாம் தலைகீழாகி விட்டது. இந்த மாற்றத்தை அவளால் தாங்க முடியவில்லை என்று நினைக்கிறேன்'' என்று தோழிக்காகப் பரிந்தாள் பானு.

''ஒகே, ஒகே. நீங்கள் வருத்தப்பட வேண்டாம். ரோஜாவில் முள்ளைப்போல அழகான பெண்களிடம் கர்வம் இருப்பது இயல்புதான்'' என்று மீண்டும் முகத்தில் ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டான் நிவாஸ்.

''சாரி! இனி உங்கள் தோழியை இம்மி அளவுகூடக் குறைவாக மதிப்பிடுவதில்லை. சரிதானா?'' என்றான் நிவாஸ் விளையாட்டுப்போல.

பேச்சு வேறு திசைக்குத் திரும்பியது.



ஆனால், அவனது மனம் மாறாமல் ரமியிடம் நின்றது.

அது என்ன ஓட்டம்.

எத்தனை நாளைக்கு ஓடுவாய்?

அப்படி எங்கே ஓடி விடுவாய்?

இல்லத்து நிகழ்ச்சிகளில் நிவாஸ் உற்சாகத்துடன் கலந்து கொண்டான்.

அதற்கு இசைவாக நல்லகத்தில் ஆண்டு விழாவும் நெருங்கியது.

பெரிதாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தலாம். அதனால் இல்லத்துக்கு வருமானமும் வரும் என்றான் நிவாஸ்.

ரமி நன்றாக ஆடுவாள் என்பதால் நாட்டிய நிகழ்ச்சி ஒன்றை ரமியிடம் ஒப்படைத்தாள் பானு.

ரமியும் மறப்பதற்கு எது கிடைக்கும் என்று காத்திருப்பவள் தானே. முழுமனத்துடன் ஈடுபட்டாள்.

முழுக்க முழுக்க அடவுகளாலேயே நவரசங்களை காட்டுவதுபோல அமைத்து பானுவுக்கு மட்டும் ஆடிக் காட்டினாள்.

அவளுக்கு ஒரே மகிழ்ச்சி.

''இது ஒன்றே போதும் போல இருக்கிறது. கூடக் கொஞ்சம் விரிவாக அமைத்து நீயே ஆடிவிடு'' என்றாள்

உடம்பை இறுகப் பிடிக்கும் ஆடை அணிகளுடன் பலர் முன்னிலையில் ஆடுவதா? எத்தனை பேர் எப்படி எப்படிப் பார்ப்பார்கள்?

ஆண்... பெண் என்று பேதமற்று எல்லோருடைய கவனமும் உடல் வாளிப்பில்தானே பதிகிறது.

நீண்ட காலம் கழிந்த பின்னர் ஒருவேளை முன் போல இந்தப் பார்வையினால் பாதிப்பு ஏதும் ரமிக்கு ஏற்படாமல் போகக்கூடும்.

ஆனால் பச்சைப் புண்ணாக இருந்த ரணம் ஆறியி ராத இந்த நிலையில் சின்னத் தூண்டுதலிலும் முன்னே நிகழ்ந்தவை நினைவுக்கு வருவதையோ அதை நினைக்க முடியாமல் துடிப்பதையோ ரமியால் நிறுத்த முடிய வில்லை.

எனவே, பானுவிடம் பிடிவாதமாக மறுத்தாள்.

ஆனால், மாற்று யோசனையாகவும் அவளே சொன் னாள். ''குழந்தைகளையே ஒவ்வொருவராக, ஒவ்வொரு உணர்ச்சியையும் வெளிப்படுத்த ஆடச் சொல்லலாம். அதற்குப் பொருத்தமான வண்ணத்தில் உடையலங்கார மும் செய்தால் மிக அழகாக இருக்கும்'' என்றாள்.

''சின்னப் பிள்ளைகள் சரியாக ஆடுவார்களா?'' என்று சந்தேகப்பட்டாள் பானு.

''நிச்சயம் கமலா ஐந்து வயதில் தாளம் தவறாமல் ஆடியதாக எங்கள் மாஸ்டர் சொல்லுவார்கள். குழந் தைகள் ஆடினால்தான் நன்றாக இருக்கும்'' என்று எடுத்துச் சொன்னாள் ரமி.

''செய். எல்லாம் உன் பொறுப்பு'' என்று பொறுப் பைக் கொடுத்தாள் பானு.

பிள்ளைகள் ஆர்வமாகப் பயின்றனர்.

எல்லோரையும் இந்த நாட்டிய நிகழ்ச்சி கவர்ந்த போதும் சிவநாத்துக்கும் இதில் அதிகமான ஈடுபாடு. மற்ற வேலை முடிந்துவிட்டால் இந்தப் பயிற்சியைக் காண வந்து விடுவார்.



சின்னச் சின்னப் பிள்ளைகளுக்குக் கனிவும் கண்டிப்பு மாக ரமி கற்றுக் கொடுத்த விதம் அவளைப் பற்றி அவரது அபிப்பிராயத்தை மாற்றி உயர்த்தியது.

ஒருநாள் பயிற்சியின் போது, சுழன்று ஆடிவிட்டு உட்கார்ந்த நிலையில் பாதித் திரும்பித் தலையை அசைக்கும் விதங்களைச் செய்து காட்டியபோது ஒரு தரம் அறை சுழன்றாற் போல இருந்தது ரமிக்கு.

சமாளித்துக் கொண்டு எழுந்தாள்.

ஆனால், அது சற்றுக் கடினமான அடவு என்பதால் மீண்டும் மீண்டும் கற்றுத் தர வேண்டியிருந்தது.

இரு தடவைகள் பெறு முயற்சியோடு சமாளித்தவள் மூன்றாம் முறை செய்தபோது கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வர மயங்கி விழுந்தாள்.

பானுமதியுடன் அறையினுள் நுழைந்த நிவாஸ் வேக மாகத் தன் அருகில் ஓடி வந்ததுதான் அவள் கடைசியாக அறிந்தது.

ரமி மீண்டும் கண் விழித்தபோது இரு நீண்ட பெஞ்சிகளை இழுத்துப் போட்டுத் தயாரித்த அவசரப் படுக்கையில் கிடப்பதை உணர்ந்தாள்.

அருகில் அமர்ந்து 'பல்ஸ்' பார்த்த பானு - சற்று அப்பால் நின்று கவலையுடன் நோக்கிய நிவாஸ், புருவத்தின் மத்தியில் முடிச்சுடனும், கண்ணில் இரக்கத் துடனும் கவனித்த சிவநாத், கதவுப் பக்கமிருந்து தயக்கமும் பயமுமாக எட்டிப் பார்த்த சிறார்கள்...

ரமி வெட்கத்துடன் எழ முயன்றாள்.

''ச்சு, பேசாமல் படுத்திரு'' என்று அதட்டினாள் பானு.

அந்தக் குரலின் கடுமை உரைக்கவும் ரமியின் முகம் வாடியது.

விழிகளைத் தாழ்த்தி அசைவற்றுக் கிடந்தாள்.

''மதியம் சாப்பிட்டாயா, இல்லையா?'' என்றாள்.

ஒரு விநாடி ரமியின் பதிலுக்காகப் பொறுத்துவிட்டு, ''கண்ணெல்லாம் சோகை, இரத்தப் பசையே இல்லாதது போல் வெளுத்திருக்கிறது... கேட்டேனே. மதியத்தில் ஏதாவது உண்டாயா இல்லையா?'' என்று கோபமான குரலில் கேட்டாள் பானு.

''கொஞ்ச நாளாகச் சரியாக சாப்பிட முடியவில்லை'' என்றாள் ரமி மெலிந்த குரலில்.

''எத்தனை நாளாக?''

''சுமார்... சுமார் ஒரு வாரமாக...'' என்று குழப்பத்துடன் பானுவைப் பார்த்தாள்.

தன் உடம்பைப் பேணத் தெரியாதா என்று கோபமா அக்காவுக்கு.

''இப்போது ஒன்றும் இல்லையக்கா'' என்றாள் சமாதானமாக.

''இப்போதைக்கு என்ன? தலைவலியெல்லாம் இனி மேல்தானே'' என்று முணுமுணுத்துவிட்டு சட்டென எழுந்து சென்றாள்.

புரியாமல் சிவநாத்தைப் பார்த்தபோது அவரது முகத்தில் திரை விழுந்திருப்பதைக் கண்டாள் ரமி.

அன்றிலிருந்து நிவாஸின் நடத்தையில் மிகுந்த வேறுபாட்டைக் கண்டாள் ரமி.

''அடி என்னடி'' என்னுமளவுக்குத் திமிரை அவனிடம் காண நேர்ந்தது.

அவன் எல்லை மீறுவதை வேறு வழியின்றி ரமி பானுவிடம் சொன்னபோது, ஏதோ கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.



''இதற்கெல்லாம் நான் என்ன செய்ய முடியும்? ஆனானப்பட்ட சென்னையிலேயே வெளியே போய் வேலை செய்து திரும்பியவள்தானே நீ. அங்கே பார்த்திராததா? இதெல்லாம் அவரவர்தான் சமாளிக்க வேண்டும். மற்றபடி உனக்காக நிவாஸை விரோதிக்க முடியுமா? இதற்கெல்லாம் என்னைத் தொந்தரவு செய்யாதே. வேலையிருக்கிறது எனக்கு'' என்று கணக்கிலேயே கவனம் போல் விட்டேற்றியாகப் பேசி அனுப்பி விட்டாள் பானு.

இரு கரங்களையும் விரித்து அன்பாக வரவேற்ற அக்கா எங்கே போனாள்?

மருத்துவமனைக்குச் செல்லுமுன் இங்குள்ள வேலைகளை முடித்துவிட்டுச் சற்று நேரம் சும்மா இருப்பது பானுவின் வழக்கம்.

அந்நேரத்தில் அவளைச் சந்தித்து, ''ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்? நான் என்ன தப்பு செய்தேன்?'' என்று கேட்டுவிட எண்ணி மீண்டும் அறைக்குச் சென்றாள்.

யாருடனோ ஆத்திரமாகப் பானு பேசிக் கொண்டிருப்பது வெளியே நன்றாகக் கேட்டது.

வேறு யாருடனும் அல்ல அவருடைய கணவர் சிவநாத்துடன்தான்.

''பளிச்சென்று அழகாயிருக்கும் முகத்தைப் பார்த்தால் கிறுகிறுத்துப் போகும் எல்லா ஆண்களும் போலத்தான் நீங்களும் உருகுகிறீர்கள்'' என்ற வெடித்தாள் பானு.

ரமி திகைத்து நின்றாள்.

சிவநாத்தையும் தன்னையும் இணைத்து பானுவுக்குச் சந்தேகமா!

இதென்ன அசட்டுத்தனம்.

ரமியின் மனதையே எதிரொலிப்பது போல சிவநாத்தும் அதே வார்த்தைகளைப் மொழிவதையும் ரமி கேட்டால்.

''பின்னே என்னவாம்? அவர்கள் இருவரையும் போகச் சொல்லிவிடலாம் என்றால் ஒத்து கொள்ள மாட்டேன் என்கிறீர்களே? எங்கேயோ தட்டழிந்து போய் வயிற்றில் சுமந்து கொண்டு வருகிறவர்களுக்கெல்லாம் இது புகலிடம் என்றால் அசிங்கமாக இல்லையா? இதற்கா இந்த ஆசிரமத்தை இவ்வளவு சிரமப்பட்டு நடத்து கிறோம்?'' என்று படபடத்தாள்.

'தட்டழிந்து வயிற்றில் சுமந்து கொண்டு.'

'வயிற்றில் சுமந்து கொண்டு!'

அனைத்துப் புலன்களும் செயல் இழந்தவளாக அங் கேயே தொய்ந்து சரிந்தாள் ரமி.

## 16



சினிமாக்களில் சந்தர்ப்ப வசத்தால் ஆணும் பெண் ணும் ஒரே ஒரு தவறு செய்வதாவும், உடனே அந்தப் பெண் கருவுறுவதாகவும் காட்டுவதைப் பார்த்து இந்த ரீலை மட்டும் ஒட்டு மொத்தமாக அத்தனை பேரும் ஒரே மாதிரி விடுகிறார்களே என்று படிக்கும் நாட்களில் தோழிகளோடு ரமி கேலி பேசிச் சிரித்திருக்கிறாள்.

சில விநாடிகளில் நினைவு திரும்பியபோது ரமிக்கு அதுதான் நினைவு வந்தது.



அது நடக்கக் கூடியதே; அதுவும் தனக்கே என்று அவளுக்கு ஏன் தெரிந்திருக்கவில்லை.

விரும்பியோ, விருப்பம் இல்லாமல் முழு வெறுப் புடனோ ஆணும் பெண்ணும் இணைகையில் புது உயிர் தோன்றும் என்பதைக் கூட அறியாத சிறுமி அல்லவே அவள்!

எதற்காகப் போகிறோம் என்று தெரிந்த பிறகும் அந்த விபத்து தனக்கு நேரிடக்கூடும் என்று ஏன் அவள் எண்ணிப் பார்க்கவில்லை?

அதைத் தடுப்பதற்கு எத்தனையோ வழிகள் உண் டாமே அவளுக்காகத் தெரிந்திரா விட்டாலும் குறைந்த பட்சம் அந்தக் குள்ளநரி... கொடும்பாவி சுந்தரிடமாவது தெரிந்து... ச்சு...

நடந்து முடிந்ததை நினைத்துக் குமுறுவது செத்த குழந்தைக்கு ஜாதகம் பார்ப்பது போலத்தான்.

எள்ளளவும் பயன் அற்ற காரியம்.

கடவுள் இருப்பது உண்மைதானா?

இருந்தால் இப்படித் திரும்பத் திரும்ப சோதிப்பாரா? இடிந்து போனாள் ரமி.

மகளின் வேதனை தோய்ந்த விழிகளையும் ஓய்ந்த தோற்றத்தையும் ரஜனி கவனிக்கவே செய்தாள்.

இரவில் உணவை மறுத்துப் பட்டினியாய்ப் படுத்த போதும், படுக்கையில் நிலைகொள்ளாமல் புரண்ட போதும் கூடப் பழைய நினைவில் ஒற்றை அலை. 'ஒரு கண்ணீரில் ஓய்ந்து விடும்' என்றே எண்ணினாள்.

ஆனால் இரவு நெடுநேரம் சென்ற பின்னரும் மகள் அமைதியுறவில்லை என்பதை உணர்ந்ததும் மகள்

அருகே சென்று அமர்ந்து, 'மறந்துவிடு கண்ணம்மா' என்றாள் கனிவாக.

இதமாகத் தலையை வருடிய தாயின் கையை இறுகப் பற்றித் தன் கொதிக்கும் கன்னத்தில் பதித்துக் கொண்டாள் ரமி.

சூடான நீர் பொங்கி வழிவதை உணர்ந்து ''என்னடா கண்ணு?'' என்று உருகினாள் தாயார்.

''மறந்து விடுவதற்குரிய நல்லவினையைக் கூட நான் செய்யவில்லையே, அம்மா'' என்ற போது ரமியின் குரல் நடுங்கியது.

''சீச்சீ அழக்கூடாது தங்கம். இறக்க முடியாத சுமை என்று ஒன்றும் கிடையாது கண்ணா. பாரேன், அப்பாவின் மறைவைக் கூட அவ்வப்போது மறந்து வாழப் பழகி விடவில்லையா? எல்லாம் சரியாகிப் போகும்? நாளாக ஆக... என்னடா கண்ணு? என்ன? என்னம்மா?'' என்று மகளின் தவிப்பைக் கண்டு தானும் பதறினாள்.

நாள் ஆக ஆக என்ன ஆகும்! அய்யய்யோ!

அதற்கு மேல் பொறுக்க முடியாமல், ''நான் எனக்கு, அம்மா, அய்யோம்மா, எனக்குள் ஒரு குழந்தை இருக்கிறதே...'' என்று கொட்டிவிட்டுப் பயமும் வேதனையுமாகப் பரிதாபகரமாக அழுதாள் ரமி.

ஆறுதல் கூற முடியாமல் ரஜனியும் பேச்சிழந்து போனாள்.

அந்தத் தாயின் மனதில் எத்தனையோ கனவுகள்.

மகளின் திருமணம், வளைகாப்பு, பேரன் என்றெல்லாம் எண்ணி, எண்ணிலடங்காத கற்பனைகள்!



இப்போது அத்தனையும் நொறுங்கி விழவும் அப்படி விழ, தானே காரணம் என்பதையும் உணர்ந்தபோது தானும் தவிக்கலானாள்.

அந்தத் தவிப்பிலும் மகளின் வேதனை உறுக்கியது.

'இதே சிசு, முறைப்படி வந்திருந்தால் என் செல்வத்தின் கண்ணில் ஒரு துளி நீர் வர பொறுப்பேனோ?' என்று எண்ணம் ஓடியது.

குனிந்து, ''அழாதே தங்கம். நம்மை மீறின விஷயத்துக்கு நாம் என்ன செய்யலாம்?'' என்று தேற்ற முயன்றாள்.

''எதிர்காலம் மிகவும் பயங்கரமாக இருக்கிறதே அம்மா'' என்று கலங்கினாள் மகள்.

''ஏண்டாம்மா! அன்றைக்குச் சென்னையில் இருந்து கிளம்பும்போது உதவி செய்த கடவுள் இப்போதும் செய்வார்'' என்று வேதாந்தம் பேசினாள்.

நீர்த்திரையினூடே தாயை இரக்கமாக வெறித்தாள் ரமி.

வளர வேண்டும் என்று சொன்னால் மட்டும் வளர்ந்து விடுவார்களா?

''ஏம்மா அப்படிப் பார்க்கிறாய்? பழைய மாதிரி பேசி விட்டேனா? உன்னை மாதிரி எனக்குத் தெளிவில்லை கண்ணு. தெரிந்து கொள்ளும் ஆசையில் முன்னே கூட உன் அப்பாவிடம் கேட்டிருக்கிறேன். அவர் சொன்னாலும் எனக்குப் புரியாதுதான். அதனால் வரவுக்குள்ளே செலவு செய்கிறேன் என்று மட்டும் கேட்பேன். வரவு செலவு கணக்கெல்லாம் இந்த அழகுத் தலைக்கு வேண்டாம் என்று சிரிப்பார். அப்படிச் சிரித்துச் சிரித்தே...''

ரஜனியின் கண்களில் நீர் ஆறாகப் பெருகி ஓடியது.

சிரிப்போடு நில்லாமல் தலையை வருடியதும் முகத்தை நிமிர்த்தியதும் முத்தமிட்டதும் நெஞ்சு விண்டு விடும்போல வலித்தது.

ஏற்கனவே தவிக்கும் மகளை மேலும் துன்புறுத்த விரும்பாமல், ''நீ சொல்லம்மா'' என்று ஊக்கினாள்.

''அங்கிருந்து கிளம்பியபோது போக்கிடமாக இங்கே பானுக்கா, இருந்தார்கள் அம்மா. ஆனால் இங்கிருந்து கிளம்ப வேண்டியிருக்கிற இந்த நேரத்தில், ஒரு புகலிடமும் இல்லை, அதோடு...''

''ஏன் கிளம்ப...'' என்று தொடங்கிய ரஜனி பேச்சை நிறுத்திக் கொண்டாள். பிறகு, ''அதெல்லாம் அப்புறம் பார்க்கலாம். இப்போது தூங்கு'' என்று தட்டிக் கொடுத்து மகளை உறங்க வைத்தாள்.

ரமி தூங்கிய பின் மெல்ல எழுந்து கதவைத் திறந்தாள்.

நள்ளிரவின் இருள் அந்தப் பேதைத் தாயை முதலில் பயமுறுத்தியது.

ஆனால் உள்ளும் புறமும் ஓய்ந்தவளாய் உறங்கும் மகளின் நினைவு உந்தித் தள்ளக் கதவை வெளியே பூட்டிக் கொண்டு நடந்தாள்.

அந்த நேரத்தில் ரஜனியை பானுமதி எதிர்பார்க்க வில்லை என்றாலும் வந்த விஷயம் உடனே புரிபட்டு விடவே அலட்சியமாக வரவேற்றாள்.

சுற்றி வளைத்துப் பேசும் நகாசுக் கலைகளை அறியாதவளாக ரஜனியும் முதலிலேயே விஷயத்துக்கு வந்தாள்.



''பானும்மா, இங்கே இருந்து கிளம்பி விட வேண்டி யிருக்கும் என்று ரமி சொல்கிறாளேம்மா, என் பெண் ணைத் தப்பாக நினைக்காதே தாயே, அவள்...'' என்று தொடங்கியவள் மேலே பேச முடியாமல் நிறுத்தினாள்.

''நினைப்பதற்கு என்ன மிச்சம் இருக்கிறது? எல்லாம் தெளிவாகத் தெரிந்த பிறகு'' என்றாள் பானு வெறுப் பாக.

''அப்படிச் சொல்லாதே, பானு! என் குழந்தை பத்தரை மாற்றுத் தங்கம். மற்றவர்களுக்காக இயேசு நாதர் சிலுவையைத் தோளில் சுமந்தாராம். பெற்ற பாவிக்காக என் மகள் வயிற்றில் சுமக்கிறாள்'' என்ற விம்மி னாள் ரஜனி.

''சொல்லுவதை அழாமல் தெளிவாகச் சொல்லி முடி யுங்கள். இரவு நெடுநேரம் ஆகிவிட்டது'' என்று விறைப்புக் குறையாமலே பேசினாள் பானு.

''இதோ சொல்லி விடுகிறேன் டாக்டரம்மா! நீ கோபித்துக் கொள்ளாதே, யாரிடமும் சொல்ல வேண் டாம்னு அவளிடம் சொன்னேன். இப்போ நானே சொல் லும்படியாகி விட்டது'' என்று தொடங்கி, கண்ணீ ரிடையே நடந்ததைச் சொல்லி முடித்தாள்.

''தியாகம் என நினைத்து என தங்கம் தப்பைச் செய்து விட்டாள். ஆனால்? காரணம் என்னவாக இருந்தாலும் தப்பு சரியாகி விடுமாம்மா? தண்டனையை மடியி லேயே கடவுள் கொடுத்து விட்டார்'' என்று விக்கினாள்.

கொஞ்சம் சமாளித்து, ''பானும்மா, பெத்தவளைக் காப்பாற்ற வேண்டும் என்பதாலேயே அவள் செய்தது சரிதான் என்று சொல்ல நான் வரவில்லை. தப்பு

தப்புதான். ஆனால் உனது இந்த இல்லத்தில் எத்தனையோ பேர் வெளியே சொல்ல முடியாத பிறப்பாக இருப்பார்கள். அவர்களில் ஒருத்தியாக என் பெண்ணை ஏற்றுக் கொள்ள உன்னாலே முடியாதாம்மா?'' என்று கையேந்திக் கேட்டாள்.

இயல்பிலேயே இளகியதான பானுவின் மனம் அப்போது உருகியே போயிற்று.

ரஜனியைத் தேற்றி வேலையாள் துணையுடன் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள்.

ரஜனியைத் தேற்றி அனுப்பி விட்டுத் தன் கணவன் மார்பில் விழுந்து விசித்தாள் பானு. மனைவியை மெல்லத் தட்டிக் கொடுத்தார் சிவநாத்.

* * *

பானுவிடம் பரிவை உணர்ந்ததுமே தன் கதை அவளை எட்டி விட்டது என்பதை ஊகித்துக் கொண்டாள் ரமி.

''சொல்லுகிறவர்களுக்கும் புண்ணியத்தைத் தேடிக் கொடுக்க நமது கதை என்ன பாரதமா அல்லது ராமாயணமா அம்மா? இந்த அவமானத்தை வெளியிலும் சொல்ல வேண்டுமா? என்னால் அக்காவை நிமிர்ந்து பார்க்க முடியவில்லையே'' என்று தாயைக் கடிந்து கொண்டாள்.

''பின்னே என்னம்மா செய்வது? இங்கேயிருந்து எங்கே போவது? அதுவும் வயிற்றுப் பிள்ளையோடு போவது முடிகிற காரியமா?'' என்று சமாதானம் சொன்னாள் அன்னை. ''பின்னாலே என்னவெல்லாம் பார்க்க வேண்டும்?''



யோசனையோடு தாயைப் பார்த்துவிட்டுப் பார்வையை வேறுபுறம் திரும்பினாள் ரமி.

எங்கோ பார்த்தபடி, ''அம்மா, இதுபற்றிப் பேச வேண்டும் என்று நினைத்தேன். இதை.. இதை அழித்து விடலாமா என்று...'' அவள் மேலே தொடருமுன் ''ஆ'' என்று அலறி விட்டாள் ரஜனி.

''குழந்தையைக் கொல்லுகிறதா? எப்படியடி மனசு துணிந்து சொல்லுகிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

இன்னமும் தாயை நேராகப் பாராமலே, ''அம்மா யோசித்துப் பாருங்கள். இது பிறப்பது அவமானம் தானே. எல்லோருக்குமே வேதனை தானே'' என்றாள் மகள்.

ரஜனியின் முகம் கலங்கியது.

சற்று நேரம் தீவிரமாக யோசித்துவிட்டு, ''அம்மா, தெரிந்தோ தெரியாமலோ தப்புச் செய்து விட்டாய். அதற்காக வாழ்க்கை முழுவதையுமே பலி கொடுக்கிறது தப்பு. ஆனால் ரமி, ஒரு காலத்தில் ரொம்ப நாள் கழித்த பிறகேனும் வேறு யாரையும் மணந்து, அவரோடு உன்னால வாழ முடியுமா?'' என்று கேட்டாள்.

சட்டென உடல் கூசிச் சுருங்க, 'சீச்சீ' என்றாள் மகள்.

''அதுதானம்மா, அது உன்னாலே முடியாதது மட்டும் இல்லை; நியாயமும் இல்லாதது. ஆனால், காரணம் நல்லது என்றுதான் கடவுளாகப் பார்த்து உன் வாழ்க்கை பட்டுப் போகாமல் இப்படி ஒரு துளிர் உருவாகுமாறு அருள் செய்திருக்கிறார். இடையில் என்ன அவமானமே நேர்ந்தாலும் சகித்துக் கொள்ளுவோம். என்னாலே உன் வாழ்க்கையை அழித்ததோடு நிறுத்திக் கொள்ளம்மா...

பிள்ளையை ஒன்றும் செய்து விடாதே'' என்று கண்ணீர் வழியக் கெஞ்சினாள்.

'இது வரம் அல்ல தண்டனைதான்' என்றே ரமிக்குத் தோன்றியது.

ஆனால், பரிதாபமாக நின்று கொண்டிருந்த தாயை பார்த்து, ''எனக்காகப் பார்க்கவில்லை அம்மா. நீங்கள் வேதனைப்படுவீர்களோ என்றுதான் யோசித்தேன். மற்றபடி உங்கள் விருப்பம்'' என்றாள் அலுப்பும் அயர்வு மாக.

## 17

பானுமதிக்கு விஷயம் எல்லாம் தெரிந்து விட்ட பிறகு ரமி அவளிடம் இருந்து மிகவும் ஒதுங்கத் தொடங்கியிருந்தாள்.

அன்று ரமி கூசி ஒதுங்கிச் சென்றபோது, தன் கண வனுடைய வற்புறுத்தலுக்காக, அவளைப் பிடிவாதமாக இழுத்து வைத்துப் பேசத் தொடங்கினாள் பானுமதி.

''முன்னே என்ன பாவம் செய்தேனோ. என் வயிறு திறக்காதது என்று ஆகிவிட்டது ரமி. ஆனாலும் உன் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கும்போது...''

''என் எதிர்காலம் என்று ஒன்றும் கிடையாது பானுக்கா'' என்று குறுக்கிட்டுப் பேசினாள் ரமி.

மெய்யாகவே அவள் எண்ணியிருந்ததும் அப்படித் தான்.



''உங்கள் விருப்பம்'' என்று தாயிடம் கூறி முடித்த போது, பின் விளைவுகளை உணராமல் அவள் சொல்லி விடவில்லை.

திருமணம் என்ற முத்திரையின்றி ஒரு பெண் தாய்மை அடையும்போது எவ்வளவு அவமானங்களை அவள் ஏற்க வேண்டியிருக்கும் என்பதை ரமி தெரிந்தே இருந்தாள்.

கூடவே மொட்டைப் பாலைவனமாய் நீண்டு பரந்து கிடந்த எதிர்காலத்தைப் பற்றி எண்ணமிடும்போது உடன் இருக்கும் தாயாரின் வாழ்வுக்கேனும் இது ஒரு பாலைவனச் சோலையாக அமையக் கூடுமோ என்று நினைத்தாள்.

மற்றவர்களின் ஏளனமும், கேலியும், இகழ்வு தன் னையே குறி வைக்கும் என்பதை அறியாமல் இல்லை.

ஆனால், சதா நெஞ்சைத் தகிக்கும் அவமான நெருப் பிற்கு முன் அதுவும் பெரிதாகத் தோன்றவில்லை.

'இவ்வளவு சகித்தும் நடமாடவில்லையா? இனி நடப்பது நடக்கட்டும்' என்று எண்ணினாள்.

கூடவே ஒரு நப்பாசை.

பெரிய ஆசை என்று கூடச் சொல்லலாம்.

'பிரசவம் மீண்டும் ஒரு பிறவி எடுப்பது போல என் கிறார்களே; ஒரு வேளை கடவுள் அருளால் அச்சம யத்தில் அந்த உயிர் போய் விடாதா' என்று ஆசைப் பட்டாள்.

எப்படியும் ரஜனியைப் பானு பார்த்துக் கொள்வாள்.

எனவே ரமியின் இறப்பால் யாருக்கும் நட்டமில்லை.

ஆகவே தலையெழுத்துப்படியே இந்தப் பிரச்சனை தீரட்டும் என்று அவள் முடிவு செய்திருந்தாள்.

ரமியின் உள் எண்ணம் தெரியாத போதும், அவள் வாழ்வை வெறுத்துப் பேசியது பானுவுக்குப் பிடிக்க வில்லை.

''உஷ். இப்படி எல்லாம் பேசக்கூடாது ரமி. வாழ்க் கையே முடிந்துவிடும் அளவுக்கு என்ன நடந்துவிட்டது. பார்க்கப் போனால் உன்னிடம் நான் பிழையே காண வில்லை. இத்தனை ஆண்டுத் தொழிலில் எத்தனை பார்த்துவிட்டேன் தெரியுமா? ஆசைக்காக, வசதிக்காக, பணத்துக்காக என்று என்னவெல்லாம் நடக்கிறது தெரியுமா? நீ தியாகமாக...''

உதடு துடிக்க மீண்டும் குறுக்கிட்டாள் ரமி. ''இப்படி எல்லாம் எனக்குள்ளே வாதம் செய்துதான், என்னை நானே ஏமாத்திக் கொண்டேன் அக்கா. அப்போதும் தப்பு என்று தெரியாமல் நான் எதுவும் செய்துவிடவில்லை. இக்கட்டு தீர்வதற்காகச் செய்து தொலைக்க வேண்டிய தப்பு என்று நினைத்தேன். ஆனால் அது தற்கொலை என்று பிறகுதான் தெரிந்து கொண்டேன். தற்கொலை என்பது கூடச் சரியல்ல அக்கா. எப்படிச் செய்தாலும் சாவோடு சகலமும், துன்பமும் கூட முடிந்து விடும். மறக்க முடியாமல், நினைவு வருவதைத் தடுக்க முடி யாமல் இந்த அவமானம் தீயாக எரிக்காதே...''

தோழியின் கையைப் பற்றி மிருதுவாகத் தட்டிக் கொடுத்தாள் பானு.

''உன் வேதனை புரிகிறது ரமி. ஆனால் இன்றைய வேதனையிலேயே உழன்று கொண்டு இராமல் எதிர் காலத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பின்னாளில் நல்ல வாழ்வு அமைய இது தடையாக இருக்கக் கூடாது பார், அதனால்...''



''இதை அழித்து விட்டால் சரியாகப் போய்விடுமா அக்கா?'' என்றாள் ரமி கசப்புடன்.

பிறகு அவளே தொடர்ந்து, ''மனம் என்பது அவ்வளவு எளிதாகக் கையாளக் கூடியது இல்லை அக்கா. மேலும் அம்மாவுக்கும் அழிப்பதில் பிரியம் இல்லை!'' என்றாள் வறண்ட குரலில்.

''முடிவு செய்ய வேண்டியவள் நீதான் ரமி'' என்றாள் பானு சிறு கோபத்துடன். ''இன்னமும் அம்மா, அடுத் தவர் என்று பாராமல் உன் நலத்தை மட்டும் நினைத்துப் பார்த்து உன் விருப்பத்தை மட்டும் சொல்லு'' என்றாள் அழுத்தமாக.

சன்னல் வழியே தெரிந்த நீலவானில் ரமியின் பார்வை நிலைத்தது.

எல்லாவற்றையும்... உயிர் உட்பட... உதறிவிட்டு ஒரேயடியாய் ஓடிவிடத்தான் அவளுக்கு ஆசை.

ஆனால் அது முடிகிற காரியமா?

''நம் நாலு பேரைத் தவிர இன்று வரை வேறு யாருக்கும் தெரியாது. இனியும் தெரியாமலே செய்து விடலாம். ஆனால்...''

''எனக்குத் தெரியுமே?'' என்றாள் ரமி பட்டென்று, அவள் குரலில் வெறுப்பும் கசப்பும் நிறைந்திருந்தன.

''ரமி!'' என்றாள் பானு புரியாமல்.

''ஆமாம் பானுக்கா எனக்குத் தெரியும் என்பது மட்டுமல்ல, அதனாலேயே இதை மறக்கவும் முடியாது'' என்றாள் அதே குரலில்.

என்ன சொல்வது என்று புரியாமல் பானு பேசாதிருந்தாள்.

ரமியும் சில கணங்கள் மவுனமாய் இருந்துவிட்டுப் பிறகு சொன்னாள், ''அக்கா, முதலும் கடைசியுமாக இதைப் பற்றிப் பேசி முடித்து விடலாம். நானும் கூட முதலில் இதை அழித்துவிடலாம் என்றுதான் நினைத்தேன். அதன் காரணம் முன்பு நடந்ததை எல்லாம் மறைத்து மறந்து ஒன்றுமே நிகழாதது போலப் புது வாழ்வு தொடங்குவதற்காக அல்ல. மறைப்பது எளிது. ஆனால் மறப்பது முடியாத காரியம் என்று எனக்குத் தெரியும். ஆனால் இங்கிருந்து வேறிடம் செல்லும் போது கல்யாணம் ஆகாமல் தாயாகிற மகளுடன் போவது அம்மாவுக்கு மிகவும் வேதனையாக இருக்கும் என்று நினைத்தேன். வேலை செய்து பொருள் ஈட்டித்தான் சாப்பிட்டாக வேண்டிய நிலையில், அந்த நிலைமை தாங்க முடியாதது என்றும் எண்ணினேன், மற்றபடி...''

தடுக்க நினைத்ததும் பழைய நினைவுகள் அவளைப் பிடித்து ஆட்டின.

பானுவின் தோளில் சாய்ந்து, ''அழிக்க வேண்டாம் அக்கா'' என்றாள் லேசான விசிப்புடன்.

பானுவின் முகம் மலர்ந்தது. ''நல்ல வேளையாக இந்த முடிவுக்கு வந்தாய் ரமி. எனக்கும் ஒரு குழந்தையை அது சின்னக் கருவாக இருக்கையில் கூட அழிப்பது விருப்பம் இல்லைதான். ஆனால் உன் எதிர்காலத்தைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சிவா வற்புறுத்தியதால்தான் இவ்வளவு சொன்னேன்'' என்று தோழியை அணைத்துக் கொண்டாள்.



தூரத்தில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.

பானுவிடம் இருந்து விலகி அவள் அணைத்தபோது சற்றே நெகிழ்ந்திருந்த சேலையைச் சீர்செய்து போர்த்திக் கொண்டாள் ரமி.

சட்டென நினைவு வந்தவளாக, ''ரமி நான் உன்னிடம் மன்னிப்புக் கோர வேண்டியவள், மன்னித்து விடுகிறாயா? இனி நிவாஸினால் தொல்லை இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள் பானு.

ஒருகணம் தெளிந்த ரமியின் முகம் மீண்டும் கறுத்தது.

''அம்மா சொன்னதை எல்லாம் கூடச் சொல்லிவிடுவீர்களா?'' என்று அவமானக் குன்றலுடன் வினவினாள்.

''இல்லை'' என்று தலையசைத்தாள் பானு. ''அது உன் ரகசியம் ரமி. ஆனால் நானும் அவருமாக ஒன்று சொன்னால் நிவாஸ் அதற்குக் காரண காரியம் எல்லாம் கேட்டு அலச மாட்டார்'' என்று ரமியைத் தேற்றி அனுப்பி வைத்தாள் பானுமதி.

நிவாஸிடம் பானு என்ன சொன்னாளோ... அதன் பிறகு அவனால் ரமிக்கு எவ்விதத் தொல்லையும் நேரிடவில்லை.

பல சமயங்களில் அவன் கண்களில் ஒரு குறுகுறுப்பை ரமி காண நேர்ந்தது.

அதில் இருந்து பானு எதுவுமே சொல்லவில்லை என்று ஊகித்துக் கொண்டாள்.

காரண காரியம் அறிந்த நண்பர்களின் வார்த்தையிலேயே ஒருவன் கட்டுப்படுவது என்றால் அவன் நல்லவனாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு ரமி வந்தாள்.

ஆனால் அவனைப் போல எல்லோரும் ஒதுங்கிப் போவார்களா?

'நல்லக'ப் பள்ளியில் பயின்ற சில குழந்தை களுடைய தாய்மாரின் கவனம் ரமியின் உப்பி வந்த வயிற்றின் மீது சற்று அதிகப்படியாகவே படிந்தது மெய்தான்.

அந்த அதிகப்படி கவனம் அளவு மீறி வந்து ரமியை உறுத்தாமலும் பானுவே கவனித்துக் கொண்டாள்.

மெல்ல மாதங்கள் உருண்டோடின.

நிறை சூலாகி சிறு வலி உருவாகிப் பெரு வலியாக வளர்ந்து தன் கட்டுப்பாட்டை மீறி 'அம்மா' என்று கதறிய போது ரமியின் செல்வன் பிறந்தான்.

மருத்துவமனையில் பதிவேட்டுக்காகத் தந்தை பெயரை விசாரித்தபோது அரை மயக்க நிலையில் இருந்த ரமி, ''கௌதம்'' என்று முணுமுணுத்தாள்.

அந்தப் பெயரைத் தனியாகக் குறித்து வைத்தாள் பானுமதி.

''ஆண் குழந்தை'' என்று மகிழ்ச்சியோடு ரமியிடம் கூறினாள் பானு.

''எத்தனை பேரை அழிக்கப் போகிறதோ'' என்று வேதனையோடு நினைத்தாள் ரமி.

''குழந்தையைப் பார்க்கிறாயா'' என்று பானு கேட்ட போது திடீரென்று தோன்றிய கலக்கமும் உடல் அயர்ச்சியுமாகப் ''பிறகு பார்க்கலாம்'' என்று கண்களை மூடிக் கொண்டாள் ரமி.

களைப்பு தீர வெகுநேரம் தூங்கி விழித்த பிறகு நர்ஸ் குழந்தையைக் கொணர்ந்து அவள் அருகே கிடத்தினாள்.



மிகமிக மென்மையுடன் வெண்ணிறத்தில் பிஞ்சு கால் களையும் கைகளையும் பார்க்கையில் தன்னையும் மீறி ரமியின் உள்ளம் கிளர்ந்தது.

பட்டான கன்னங்களை மெல்லத் தொட்டுப் பார்த்த போது அவளுக்கு உடல் சிலிர்த்தது.

இதுதான் தாய்மை என்பதா?

தாய்.

ரமி ஒரு குழந்தையின் தாய்!

பத்து மாதம் சுமந்து அவளே உருவாக்கிய... இல்லை அவன்...

அந்த 'அவன்' நினைவு வருவதைத் தடுக்கும் முயற்சி யாய்க் குழந்தையிடம் முழு கவனத்தையும் செலுத்தி னாள்.

சின்னக் கொட்டாவியுடன் கறுப்புமணிக் கண்களை திறந்து உருட்டியபடி உடம்பை நெளித்தது குழந்தை.

மேலே போர்த்தியிருந்த துணி விலகியது.

வலப் பக்கமாக மார்பின் மேல் பகுதியில் இருந்து தோள் முனை வரையில் ஒரு வேலின் அலகு போன்ற வடிவுடன் அமைந்திருந்த பெரிய கருநிற மச்சம், குழந்தையின் வெண்மை கலந்த ரோஜா நிற உடலில் பளிச்சென்று தெரிந்தது.

அந்த கவுதமனுக்கு இருந்த அதே மச்சம்.

இவள் மறந்துவிடப் போகிறாளே என்று கடவுள் நினைவுபடுத்துகிறாரா?

தன் உடல் நிலையை மறந்து கண்ணீர் வடித்துக் காய்ச்சலை இழுத்துக் கொண்டாள் ரமி.

# 18



காலில் குத்திய முள் முனை முறிந்து போனால் நடக்கும் பொழுதெல்லாம் 'சுருக், சுருக்' என்று குத்திக் கொண்டே இருக்கும்.

குழந்தையின் தோளில் மச்சத்தைப் பார்க்கும் பொழு தெல்லாம் ரமிக்கும் அன்றைய 'அந்த' அகன்ற தோளின் அணுகல், மனதில் தோன்றி வதைத்தது.

அதற்காகக் குழந்தையை வெறுக்க முடியுமா?

ஆனால், மச்சத்தைப் பார்த்த பிறகு முகத்தை, உருவ அமைப்பை எல்லாம் தூண்டித் துருவி ஆராயத் தோன்றியது.

கொழு கொழு என்று இருக்கும் இந்தக் குழந்தை சதை வடிந்து விட்டால், முகம் அவனுடையதேதான் என்பது நன்றாகத் தெரிந்தது.

நீள நீளமான கைகளும் கால்களும் கூட பின்னாளில் அவனை போல ஆறடி ஆவதின் அடிப்படைதானே.

பத்து மாதம் சுமந்து பெற்றவள் ரமி.

இந்தக் குழந்தை ஏன் அவளைப் போல இருக்கக் கூடாது?

சும்மாவே மறக்க முடியாமல் தவிப்பவளுக்கு இப்படி வேறு நினைவுபடுத்த வேண்டுமா?

தாய்மை உணர்வில் குளிர்வதும், பழைய நினைவில் தவிப்பதுமாக ரமி இருந்தாள்.



முழுமையாக மகிழ்ந்தவள் ரஜனி.

''என் மகள் பட்டமரமாகி விடாமல் இந்தப் பசுந்தளிரைக் கடவுள்தான் கொடுத்திருக்கிறார்'' என்று நிச்சயமாக நம்பினாள்.

குழந்தையின் அழகும், எப்போதும் சிரிக்கும் இயல்பும் அவளது நம்பிக்கையை உறுதி செய்தன.

பானு சிவநாத் இருவருக்கும் கூட அவன் செல்லப் பிள்ளையாகிப் போனான்.

அந்தக் கண்ணனே வந்து பிறந்தாற்போலச் சிரிக்கும் மழலையிடம் எல்லோரும் மயங்கினர்.

''ஒழுக்கம்'' என்று முணுமுணுத்த பள்ளிப் பிள்ளைகளின் தாய்மார்கூட இங்கே வந்த பிறகு இவளிடம் குறை சொல்ல முடியாது என்று மன்னித்தனர்.

அவ்வளவு தூரம் அனைவரையும் கவர்ந்து விட்டான் கதிர்... ரமியின் மைந்தன்.

ஒதுங்கியிருந்த நிவாஸ் கூட நெருங்கி வந்தான். குழந்தையுடன் விளையாடினான். நேரான பார்வையுடன் ரமியிடம் பேசினான்.

ரமியும் மெல்ல மெல்ல இறுக்கம் தளர்ந்து எல்லோருடனும் ஓரளவு இயல்பாக பேசத் தொடங்கினாள்.

கதிருக்கு நீலநிற ஆடை நன்றாக இருக்குமா, அல்லது சிவப்பு மேலா என்று நிவாஸுடன் கலந்து விவாதித்து வாங்கும் அளவிற்கு சகஜமாகப் பழகினாள் ரமி.

அவ்வப்போது நிவாஸ் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ரமியின் வீடு வரை வந்து விட்டுப்போவது கூட அடிக்கடி நடப்பதாயிற்று.

இன்னமும் கூட கதிரின் மச்சம் ரமியை துரத்திக் கொண்டு தான் இருந்தது.

சில நேரம் அவளது வேதனை தெரியாமல், ''வலது தோளில் மச்சம் என்றால் அதிர்ஷ்டம்'' என்று சிலர் பேசி விடுவது உண்டு.

அச்சமயங்களில் தனிமையை நாடி நதிக்கரையில் சென்று அமர்ந்து விடுவாள் ரமி.

இன்னமும் அதிகமாக மனம் அலை பாய்ந்தால் லீவு போட்டுவிட்டு மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் போய் உட்காருவாள்.

இப்படி ஒரு நாள் நதிக்கரை ஓரமாக வளர்ந்து இருந்த பெரிய மரத்தடியில் அவள் அமர்ந்திருந்த போது நிவாஸும் அங்கே வந்து சேர்ந்தான்.

சற்று நேரம் பேசாமலே இருந்துவிட்டு, தன்னை மணந்து கொள்ளும்படி ரமியிடம் கேட்டான்.

பிரமிப்பில் அகன்ற ரமியின் விழிகளில் கலவரம் பரவுவதைக் கண்டதும் நிவாஸ் அவசரமாகப் பேசினான்.

''தயவு பண்ணித் தவறாக ஏதும் எண்ண வேண்டாம் ரமி! நீ இங்கே வந்த புதிதில் உன் வெளி அழகும் நிலைமையும் என் மனதில் தப்பான எண்ணங்களை எழுப்பியது உண்மை தான். ஆனால், சின்னக் குழந்தை களிடம் நீ காட்டும் பரிவு, இணைந்து வேலை செய் வோருக்கு உதவும் பண்பு, தன்னந்தனியாகச் சுமையைத் தாங்கும் திடம் இன்னும் பாராட்டத்தக்க உன் குணமே என்னைக் கவர்ந்து விட்டது ரமி; எனக்கு முப்பது வயது ஆகி விட்டது. திருமணம் பற்றிய எண்ணமே இல் லாமல் இதுவரை வாழ்ந்துவிட்டேன். ஆனால் இப்போது



வேறு நினைவுகளே தோன்றுவது இல்லை'' என்று லேசாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அவளிடம் எதிரொலிக்கவில்லை.

உதட்டைக் கடித்துக் கொண்டு தலை குனிந்து நின்றவள் அப்போது தலை நிமிர்ந்து, ''நிவாஸ். கதிரின் பிறப்பை மறந்து விட்டுப் பேசுகிறீர்கள். நான்.. நான் கன்னியல்ல'' என்றாள் மெல்லிய குரலில்.

அவள் முகத்தில் வேதனையைக் கண்டதும் நிவாஸ் சட்டெனக் கை ஏந்தி, ''ரமி, ப்ளீஸ்..'' என்றான்.

புரியாமல் விழித்த ரமியிடம் அவன் வேகத்துடன் பேசலானான். ''உன் வாழ்வில் முன்பு ஏதேதோ நடந் திருக்கலாம். ஆனால் அதற்கும் இன்றைய வாழ்வுக்கும் என்ன சம்பந்தம்? கண்களைத் திறந்து பார் ரமி. கன்னி கள் தான் திருமணம் செய்யலாம் என்று சொன்னால் இன்றைக்குக் குறைந்தது ஐம்பது சதவீதம் பெண்கள் மணமற்று வாழ வேண்டியதுதான்.

''அதோடு கதிரைப் பற்றிப் பேசினாய். என்னைக் கவர்ந்தது நீ மட்டும் இல்லை. கதிரும்தான். அவனை நல்லபடியாக வளர்த்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவும் விரும்புகிறேன். அவனே நம் முதல்...''

மேலே அவன் தொடர்ந்து பேசுமுன், ''ப்ளீஸ் நிவாஸ், என் வாழ்வில் இனி திருமணம், குடும்பம் என்பதற்கெல் லாம் இடமே கிடையாது, அந்தப் பேச்சை விடுங்கள்'' என்று முடித்து விட்டாள்.

சற்று நேரம் பேச்சு இழந்து நின்றான் நிவாஸ்.

பிறகு, ''மெதுவாக யோசித்துப் பதில் சொல்லலாமே ரமி?'' என்றான் மிருதுவாக.

மிகவும் சிரமப்பட்டு ஒதுக்க முடியாமல் தவித்த நினைவுகள் மீண்டும் மனதில் குவியப் பேச முடியாமல், தலையை மட்டும் மறுப்பதாக அசைத்தாள் அவள்.

அவளது அகன்ற விழிகளில் நிறைந்திருந்த வேதனையைப் பொறுக்க முடியாமல், ''வேண்டாம் ரமி! இந்தப் பேச்சை இத்துடன் விட்டுவிடலாம். ஆனால் என்றேனும் உன்மனம் மாறினால் நான் காத்திருப்பது நினைவில் இருக்கட்டும்'' என்றான் நிவாஸ்.

மறுநாளில் இருந்து அவன் முன்னிலையில் வராமல் ஒதுங்க முயன்றாள்.

''ஆனால் வேறு உறவைத் தர முடியாவிட்டால் தந்திருந்த நட்பைக் கூட விட்டு விட வேண்டுமா ரமி? அவ்வளவுக்கு நான் என்ன பிழை செய்தேன்?'' என்று வருத்தமாக நிவாஸ் விசாரித்தபோது அவள் மனம் இளகிப் போயிற்று.

முன்னைப் போல பழகலானாள்.

ஆனால் தப்பர்த்தம் செய்து கொள்ளக்கூடிய எதையும் காட்டி விடாமல் பேச்சிலும் பார்வையிலும் வெகு கவனமாக இருந்தாள்.

ரமியின் நடத்தையில் மாறுதல் இருப்பதைப் பானு உடனேயே இனம் கண்டு கொண்டாள்.

காரணத்தை ஊகிப்பது ஒன்றும் கடினமான காரியமாக அவளுக்குப் படவில்லை.

ரமியை அழைத்துப் பேசினாள்.

விஷயத்தை அறிந்ததும், ''பைத்தியம். நிவாஸுக்கு நல்ல வருமானம். கதிரை ராஜா போல் வளர்க்கலாம். இப்போது போலவே நாமும் சேர்ந்தே இருக்கலாம். இதைப் போய் மறுப்பானேன்?'' என்று அதட்டிக் கேட்டாள்.

''அக்கா'' என்று அவள் அருகில் சென்று அவள் தோளில் முகம் புதைத்தாள் ரமி. ''எனக்கு நினைக்கவே மிகவும் அசிங்கமாக இருக்கிறதே'' என்று விம்மினாள்.

ரமியின் பூவுடல் கூசி நடுங்குவதை உணர்ந்த பானு, ''உஷ் என்ன ரமி இது? இப்போது என்ன ஆகிவிட்டது என்று இப்படி நடுங்குகிறாய்? இங்கே உன்னை யாரும் எதிலும் கட்டாயப்படுத்தப் போவதில்லை, பின்னே எதற்கு இந்த பயம்?'' என்று தேற்றினாள்.

''தீ சுடும் என்று புத்தகத்தில் படிக்கும்போது ஒன்றும் தெரிவது இல்லை அக்கா. ஆனால் சுடுபட்ட பிறகோ நெருப்பு என்ற சொல்லே உடலை நோகடித்து விடுகிறது!'' என்றாள் ரமி வேதனையோடு.

அவளைக் கூர்மையாகப் பார்த்துவிட்டு, ''ரமி! நிவாஸ் ஒரு 'ஜென்டில்மேன்', எல்லோரையும் கவுதமனைக் கொண்டு எடை போடாதே'' என்றாள் பானு பளிச் சென்று.

அக்காவுக்கு அவன் பெயர் எப்படித் தெரியும்? உள்ளூர அதிர்ச்சியுடன் நினைக்கும்போது, கதிர் பிறந்தபோது தந்தை என்று கவுதமன் பெயரை அவள் சொன்னது நினைவுக்கு வந்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள். ''அமைதியாக யோசி'' என்று சொல்லிஅவளை அனுப்பினாள் பானுமதி.

* * *

கதிரின் தந்தை பெயரை கவுதமன் என்று ரமி கூறியபோது பானு அதை மனதில் இறுத்திக் கொண்டாள்.

பிறகு தனிமையில் ரஜனியிடம், அந்தப் பெயரைச் சொல்லி விசாரித்தாள்.

கவுதமன் என்ற பெயரில் யாரையும் அவளுக்குத் தெரியவில்லை என்றறியவும் பானுவுக்கு அவள் மீது எரிச்சல் வந்தது.

பெற்ற மகளின் வாழ்வையே பலி வாங்கியிருக்கிறான் ஒருவன். சும்மா பெயரளவில் கூட அவனைப் பற்றித் தாயாருக்குத் தெரியவில்லை.

கழுத்தில் கட்டிய கல்போல ரமிக்கு இப்படி ஒரு தாயார் என்று சினம் வந்தபோதும் கபடு அறியாத அந்த வெகுளியின் முகத்தைப் பார்த்ததும் பானுவின் மனம் இளகிப் போயிற்று.

கவலையுடன் பார்த்தவளிடம், ''ஒன்றும் முக்கியமாக இல்லை'' என்று தேறுதலாகச் சொல்லிவிட்டு வந்தாள்.

மெய்யாக ஒன்றும் முக்கியம் இல்லைதானே?

இனி அவனை அறிந்து ஆவது என்ன?

அத்தோடு அந்த விஷயத்தை விட்டுவிட்டாள்.

இப்போது நிவாஸையும், தான் அறிந்த அந்த ஒரு கவுதமனாக மட்டுமே ரமி எண்ணுகிறாளே என்ற ஆத்திரத்தில் பானு பேசிவிட்டாள்.

ஆனால் ரமியின் கண்ணுள் தவிப்பைக் காணவும் ஏன் பேசினோம் என்று வருத்தப்பட்டாள்.

இந்த நிகழ்ச்சிகள் ஊடே நாட்கள் வேகமாக ஓடின. கதிரின் இரண்டாவது பிறந்த நாள் வந்து போயிற்று.

தொடர்ந்து இல்லத்தில் ஆண்டு விழாவும் நெருங்கியது.



அன்று இல்லத்துக்கு வந்த நிவாஸின் முகத்தில் பரபரப்பு இருந்தது.

''சிவா சென்னையில் ஒரு பணக்காரர். தனது வருட வருமானத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை ஆண்டுதோறும் தரும காரியங்களுக்குக் கொடுப்பது வழக்கமாம். நேற்று அவரைப் பற்றித் தெரிந்தது. இந்த ஆண்டு அந்தப் பணம் நமது இல்லத்துக்கு வந்து சேர ஒரு முயற்சி செய்யப் போகிறேன். இன்றே சென்னைக்குக் கிளம்புகிறேன்'' என்று விடை பெற்றுப் போனான்.

## 19



சென்னையில் நிவாஸ் சந்திக்கச் சென்றது ஒரு பணக்கார மனிதரை.

அவர் என்னென்ன பாவம் செய்து பொருள் ஈட்டினாரோ? ஆண்டுதோறும் தனது வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைத் தரும காரியங்களுக்காக செலவு செய்வது வழக்கமாம்.

காரியம் மெய்யானதாக இருக்க வேண்டும்; போலியைக் காட்டி அவரை ஏய்க்க முடியாது.

இது திருச்சியில் நிவாஸுக்குக் கிட்டிய தகவல்.

நல்லகத்தைக் காட்டிலும் மெய்யான தரும காரியம் என்ன இருக்க முடியும்?

ஆசிரமப் பிள்ளைகளுக்கு இன்னமும் பல வசதிகளைச் செய்து கொடுக்க சிவநாத் தம்பதிகளுக்கு இருந்த தாளாத ஆசை, நிவாஸ் அறியாதது அல்ல.

சென்னையில் அந்த மனிதரைச் சந்தித்து, பணம் பெற்று அந்த வசதிகளில் சிலவற்றையேனும் செய்து விட விரும்பினான். அதற்காகவே சென்னைக்கு ஓடினான்.

முதலில் அந்தப் பணக்காரருடைய செயலாளரைப் பார்த்துப் பேசி விளக்கினான்.

அதன் பிறகு அந்தப் பணக்காரரை நேரில் பார்க்க அழைக்கப்பட்டான்.

ஏதோ வயதான பெரிய மனிதர் ஒருவரை எதிர் பார்த்துச் சென்ற நிவாஸுக்குத் தன்னை ஒத்த ஒருவனைக் காண நேர்ந்ததே அதிசயம்தான்.

அவன் ''அலோ ஐயாம் கவுதமன்'' என்று அவன் கை குலுக்கியபோது, நிவாஸ் பேச்சு இழந்து விழித்தான்.

அமருமாறு எதிரில் இருந்த குஷன் நாற்காலியைக் காட்டிவிட்டு தானும் அமர்ந்தான் கவுதமன்.

முதல் கேள்வியாக, ''ஏன் ஆச்சரியமாகப் பார்க்கிறீர்கள், மிஸ்டர் நிவாஸ்?'' என்று விசாரித்தான்.

''இல்லை.. உங்கள் முகம்.. பழகிய முகம் போலத் தெரிகிறது. எனவே ஒன்றும் புரியவில்லை'' என்றான் நிவாஸ்.

''சிறு வயதில் நான் ஊட்டியில் படித்தேன். பிறகு கல்லூரிப் படிப்பு எல்லாம் சென்னையில்தான். இதில் எங்கேனும் பார்த்திருப்பீர்களா? ஆனால், எனக்கு உங்கள் முகம் புதியதாகத்தான் தெரிகிறது. நான் மறதிக்காரனும் இல்லை'' என்று இலகுவாகப் பேசினான் கவுதமன்.

''இந்த இடங்களில் நான் படித்தது இல்லை. சரி போகட்டும். நான் வந்த விஷயத்தைப் பற்றி'' என்று தொடங்கினான் நிவாஸ்.



''செகரட்டரி சொன்ன அளவில் சிறப்பானதாகத்தான் தெரிகிறது. எதற்கும் எல்லா விஷயங்களையும் சரி பார்த்து விட்டுத் தேவையானதைச் செய்கிறேன்'' என்றான் அவன்.

''எல்லா விவரங்களும், பத்திர நகல்கள் கூட கொண்டு வந்திருக்கிறேன். இப்போதே பார்க்கிறீர்களா?'' என்று ஆர்வத்தோடு கேட்டான் நிவாஸ்.

''பரவாயில்லையே!'' என்று பாராட்டிவிட்டு மேசை மேல் கிடந்த சிறு குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தான் கவுதமன்.

பிறகு ''இப்போது ஓய்வுதான். ஆனால், இங்கே இருந்தால் யாராவது வந்து கொண்டே இருப்பார்கள். வாருங்கள் விருந்தினர் விடுதிக்குப் போய்விடலாம். அங்கே இடையூறின்றி நிம்மதியாகப் பேசலாம்'' என்று கூறி அந்த விசாலமான காம்பவுண்டின் பின்புறத்தில் அமைந்திருந்த ஓர் அழகிய சிறு வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

வீட்டைச் சுற்றிலும் வெகு நேர்த்தியாக வளர்க்கப்பட்டிருந்த செடி கொடிகளைப் பார்த்து ரசித்தபடியே கவுதமனைப் பின்பற்றி அந்த வீட்டினுள் சென்றான் நிவாஸ்.

''உட்காருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று உட்புறம் சென்றான் கவுதமன்.

வெல்வெட் உறையிட்ட மெத்தென்ற சோபாக்கள். இணைந்த நிறத்தில் ஊசலாடிய திரைத் துணிகள் என்று.. ஒவ்வொன்றாக ரசனையுடன் பார்த்தபடியே நிமிர்ந்த நிவாஸ் சட்டென முகம் வெளுத்தான்.

கதிரின் படம் இங்கே எப்படி வந்தது?

ஆனால் இது கதிர் அல்ல.

கதிரின் உடம்பில் இத்தனை நகை ஏது?

புலிப்பல் லாக்கெட்டுடன் கனமான சங்கிலி, யானை முடி வளையல்கள், தண்டை, தங்கக் கொலுசு, இடைச் சங்கிலி... ஊகூம்... ஆனால்...

அறையின் நான்கு சுவர்களிலும் அந்தச் சிறுவனின் பெரிதாக்கப்பட்ட படங்களே தொங்கின.

ஒன்று.. இரண்டு.. மூன்று நாலு வயது வரையில் வருடந்தோறுமாக எடுக்கப்பட்ட படங்கள் கவுதம னுடைய முகம் ஏன் பழக்கப்பட்ட படங்கள் கவுதம னுடைய முகம் ஏன் பழக்கப்பட்டதாகத் தோன்றியது என்பது ஆணி அறைந்தாற் போலப் புரிந்தது.

அப்படியானால் கதிர்...

''இந்தப் பையனை உங்களுக்கு அடையாளம் தெரி கிறதா?'' என்று சிரித்தபடி கையில் இருந்த பழச்சாற்றை நிவாஸிடம் நீட்டினான் கவுதமன்.

''நீங்... நீங்களா?'' என்று தடுமாறினான் நிவாஸ்.

''நூற்றுக்கு நூறே வாங்கி விட்டீர்கள். பரிசாக ஆரஞ்சுச் சாற்றைக் குடியுங்கள்'' என்று நகைத்தான் கவுதமன்.

நிவாஸுக்கு எதிர்புறத்தில் அமர்ந்தபடி, ''என் தாத்தாவுக்கு இவைகளை மாட்டி வைத்துப் பார்ப்பதில் மிகுந்த ஆசை. வலப்புற சன்னல் வழியே பார்த்தால் அவர் முதல் முதலாகத் தொடங்கிய தொழிற்சாலை தெரியும். கடைசிக் காலத்தில் ஃபேக்டரியையும் இந்தப் படங்களையும் பார்த்தபடி இங்கேயேதான் நாட்களைக் கழித்தார்.. அந்த மச்சத்தைப் பார்த்தீர்களா? அதிருஷ்ட



மச்சமாம். போட்டோவில் தெரிவதற்காகச் சட்டை ஏதும் போடாமலேயே நாலு வயது வரை படம் எடுத்து விட்டார்கள். பிறகு நான் விடவில்லையாம்...'' என்று வந்தவனின் தடுமாற்றத்தைப் போக்கவோ என்னவோ கவுதமன் இயல்பாகப் பேசிக் கொண்டே போனான்.

ஆனால் கடும் வெய்யிலில் கூடக் கதிருக்குக் கையுள்ள சட்டைகளையே ரமி அணிவித்து வைத்தது தான் நிவாசுக்கு நினைவு வந்தது.

நினைவூட்டும் மச்சத்தை மறக்க முயன்றாளா?

மறைக்க மட்டுமா அல்லது மறக்கவுமா?

இருவருக்கும் இடையே என்ன கதை நடந்திருக்கும்?

இவன் ஆசைகாட்டி ஏய்த்து விட்டானா?

இவனது தோற்றத்திலும் பேச்சிலும் எந்த பொண ணும் மயங்குவாள்.

ஆனால் ரமி.

ஒருவேளை ரமி இவனுக்காகக் காத்திருக்கிறாளோ என்று ஒரு சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

கவுதமனுக்காக ரமி காத்திருக்க, அவளுக்காகத் தான் காத்திருக்க... அந்தக் கணத்தில் தனது நிலைமை சகிக்க முடியாததாகத் தோன்றியது நிவாஸுக்கு.

''உங்களுடைய மகனுக்கும் இந்த மச்சம் இருக்கிறதா மிஸ்டர் கவுதமன்?'' என்று அவனுக்கு வேறு திருமணம் ஆகியிருக்கிறதா என்பதை நாசுக்காக விசாரித்தான் நிவாஸ்.

''மனைவி வந்தால் அல்லவோ மகனும் மச்சமும் வருவதற்கு?'' என்று முறுவல் செய்தான் அவன்.

'இருக்கிறானடா முட்டாள்!' என்று அலற வேண்டும் போல இருந்தது நிவாஸுக்கு.

''பெற்றோர் இருந்திருந்தால் ஒழுங்கான குடும்ப வாழ்வு அமைந்திருக்குமோ என்னவோ? நான் பேரன் வளர்த்த பேய்ப்பிள்ளை ஆகிப் போனேன்...''

விளையாட்டாகப் பேசுவது போலக் கூறியபோதும் கவுதமனின் முகத்தில் திரைபடியக் கண்டான் நிவாஸ்.

அந்தக் கணத்தில் நிவாஸ் தீர்மானித்தான்.

இவனை... இந்தக் கவுதமனைத் திருச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

அங்கே எப்படியும் ரமியைச் சந்திக்க வைத்தாக வேண்டும்.

என்ன ஆனாலும் சரி ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும்.

ஆனால் நிவாஸ் மேலே அது பற்றிப் பேசுமுன், ''ஓகே நிவாஸ் என்னைப் பற்றிப் பேசுவதற்காக நீங்கள் இவ்வளவு தூரம் வரவில்லை. வந்த காரியத்தைப் பார்க் கலாம்'' என்று லாவகமாவும் தீர்மானமாயும் பேச்சைத் திருப்பினான் கவுதம்.

நல்லகத்தின் இருப்பிடம், தோற்றம், வளர்ச்சி நடப்பு என்று எல்லாவற்றையும் மீண்டும் தெளிவாக எடுத்துரைத் தான் நிவாஸ்.

நல்லகத்தைப் பற்றிய கவுதமனின் பல கேள்விக்குப் பதில் கூறிய நிவாஸ். தன் எண்ணத்தையும் நிறை வேற்றக் கருதி, ''நீங்கள் நேரில் வந்து பாருங்கள் கவுதமன். அப்போதுதான் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியும்,'' என்றான்.



ஆனால் அதை மறுத்து, ''பொதுவாக இந்த மாதிரி உதவும் இடங்களுக்கு நான் நேரில் செல்வது இல்லை நிவாஸ். இந்திரனே, சந்திரனே என்று அதிகப்படி மரி யாதை தந்து போரடித்து விடுவார்கள். நிறையப் பணம் பாருங்கள்'' என்றான் கவுதமன்.

அவனைக் குறுகுறுப்புடன் பார்த்து, ''எத்தனை சதவீதம்?'' என்று கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண் டான் நிவாஸ்.

ஆனால் அவன் எதிர்பார்த்தது போலக் கோபம் கொள்ளாமல், ''அது என் ஆடிட்டருக்கும் எனக்கும் மட்டிலுமே தெரிந்த சிதம்பர ரகசியம்'' என்று சிரித்தான் கவுதமன்.

மீண்டும் நிவாஸின் மனம் ரமியிடம் ஓடியது.

தவறு யார் பக்கம் இருந்திருக்கும்?

இவன் பழக இனிமையானவனாக இருக்கிறானே!

''ஸாரி'' என்று மன்னிப்புக் கோரிவிட்டு, ''ஆனால் அங்கே நதிக்கரையில் பொன் மணலும், ஆற்றோர மரங்களும் ஆசிரமக் குழந்தைகளும்.. நீங்கள் மெய் மறந்து போவீர்கள், சார்'' என்று ஆசை காட்டினான்.

கவுதமன் யோசிக்கவும், ''அதிகப்படி மரியாதை ஏதும் தராமல் நான் பார்த்துக் கொள்கிறேன், மிஸ்டர் கவுதம்'' என்று மேலும் வற்புறுத்திப் பேசினான்.

''பிறகு பார்க்..கலாம்...'' என்று இருந்துவிட்டு மணிக்கட்டைத் திருப்பி கைக்கடிகாரத்தைப் பார்த்தான் கவுதமன்.

குறிப்புக் காட்டுகிறானோ என்று எண்ணி எழுந்தான் நிவாஸ்.

ஆனால் அவன் விடை பெறத் தொடங்குமுன், ''மிஸ்டர் நிவாஸ், இப்போது நான் ஒரு விருந்துக்குச் செல்ல வேண்டி இருக்கிறது, உங்கள் ஆசிரமத்தின் தேவைகள் பற்றி இன்னமும் எனக்குச் சில விவரங்கள் தெரிய வேண்டும். அதனால் என்னோடு அந்த விருந்துக்கு வருகிறீர்களா? அங்கே போய் மேலே பேசலாம்'' என்று அழைத்தான் கவுதமன்.

''அறியாதவர்கள் வீட்டுக்கு அன்னியனான நான் அழையா விருந்தாளியாக எப்படி வருவது? அதை விட உங்களைப் பார்க்க நாளை வருகிறேனே'' என்று தயங்கினான் நிவாஸ்.

உதட்டோரத்தில் ஓர் ஏளன வளைவுடன், ''என்னோடு எத்தனை பேர் வந்தாலும் அந்த வீட்டினருக்கே அதிகப்படியாகத் தெரியாது. அன்னியராகவும் கருத மாட்டார்கள். சும்மா வாருங்கள் நிவாஸ். நாளைக் காலையே நான் வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது'' என்று கட்டாயப்படுத்தி நிவாஸையும் தன்னோடு அழைத்துச் சென்றான் கவுதமன்.

''வாங்க வாங்க... உள்ளே வாங்க'' என்று வாயெல்லாம் பல்லாக வரவேற்ற சரளாவை எங்கோ பார்த்த நினைவு வந்தது நிவாஸுக்கு.

ஆனால் சரளாவுக்கு கவுதமனைத் தவிர வேறு யாரைப் பார்க்கவும் கண்ணிருக்கவில்லை.

''இவ்வளவு நேரமாயிட்டுதே கவுதம் தம்பி! பாவம் வாசலைப் பார்த்துப் பார்த்து நம்ம மணிக்குக் கண்ணெல்லாம் பூத்துப் போயிட்டுது. சோபாவிலே உட்காருங்க தம்பி. நான் போய் மணியை அழைத்துக்கிட்டு வருகிறேன். பாருங்களேன், ''இவ்வளவு நேரம் காணலியே'' என்று துடித்து விட்டு இப்போ என்ன வெட்கமாம்!'' என்று மீண்டும் முப்பத்திரண்டு பல்லையும் காட்டி விட்டு, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய தோட்டத்தில் மறுபுறமாக நின்று கொண்டிருந்த பச்சை ஆடைப் பெண்ணை நோக்கிச் சென்றாள்.



ஓகோ? காற்று இந்தத் திசையில் வீசுகிறதா?

சட்டென நிவாஸின் மனம் துள்ளியது.

கவுதமனுக்கும் இந்த வீட்டு மணிக்கும் இணைப்பு ஏற்பட்டால் அங்கே ரமிக்கு மனதில் ஒரு விடுதலை கிடைக்கக் கூடுமே!

ஆனால்...

நிவாஸ் யோசனையோடு கவுதமன் முகத்தைப் பார்த்தான்.

சற்றும் சலனமற்று இருந்தது அந்த முகம். உதட்டோரத்தில் மற்றும் ஒரு சிறு ஏளன வளைவுடன்.

அதற்குள்ளாகத் தாயின் பெரிய உடம்பின் பின்னே தலை நிமிராமல் அந்த 'மணி' வந்து சேர்ந்தாள்.

கன்னங்களில் செம்மைக்கு வெட்கம் தான் காரணமோ? அல்லது...

அழுந்த மூடிய உதடுகளுடன் தரையைப் பார்த்தபடி வந்தவள் அருகில் வந்த பின், ''வணக்கம் மிஸ்டர் கவுதமன்'' என்று நிமிர்ந்தாள்.

நிமிர்ந்தவள் பார்வையில் கவுதமனின் அருகே நின்றவன் பட்டான்.

பிரமிப்பில் கண்கள் விரிய ''நிவாஸ்!'' என்று கூவினாள்.

‘‘நீ.. மேகலை.. மணிமேகலை? அடேயப்பா! எப்படி வளர்ந்துவிட்டாய்’’ என்று வியந்தான் நிவாஸ்.

‘‘ஆன்ட்டி சுகமா? உங்கள் தங்கை சுசீலாக்கா எப்படி இருக்கிறார்கள்! அப்புறம் உங்கள் தோட்டக்காரன் மாரி...’’ என்று அடுக்கினாள் மணிமேகலை உற்சாகத்துடன்.

‘‘எல்லோரும், முன்பு குட்டியாக இருந்து இப்போது குட்டி போட்ட நாய், தென்னை மரம் உட்பட எல்லோரும் நலம்’’ என்று நகைத்தான் நிவாஸ்.

குளிர்பானம் நிரம்பிய தம்ளர்கள் அடுக்கிய தட்டுடன் பணியாள் ஒருவன் வந்தான்.

‘‘நம்ம தம்பிக்கு உன் கையாலே...’’ என்று தொடங்கிய தாயைக் கவனியாதவள் போல நிவாஸிடம் ஒரு தம்ளரை எடுத்துக் கொடுத்து ஆர்வமாக அவனை உபசரித்தாள் மணிமேகலை.

ஆங்காரத்துடன் மகளை உறுத்து விழித்து விட்டு இரண்டு கைகளிலும் இரண்டு டம்ளர்களை எடுத்தாள் சரளா.

இரண்டையும் கவுதமனிடம் நீட்டி, ‘‘இந்தாங்க கவுதம் தம்பி, நீங்க இந்த வீட்டுப் பிள்ளை. எத்தனை வேணுமோ உங்க இஷ்டம் போலக் குடியுங்கள்...’’ என்று கூறிக் காது வரை உதடுகளை இழுத்து இளித்தாள்.

## 20



கேலிச் சிரிப்புடன், ‘‘வெறும் கலர் தண்ணீரைத் தந்து வயிற்றை நிரப்பிவிடப் பார்க்கிறீர்களா’’ என்று ஒரு தம்ளரை மட்டும் வாங்கிக் கொண்டான் கவுதமன்.



ஆனால் மகளின் செய்கையால் விளைந்த கோபம் சற்றும் அடங்கவில்லை சரளாவுக்கு.

அவளுக்கு வந்த ஆத்திரத்தில் நிவாஸைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பாள்.

ஆனால் கவுதமனோடு வந்தவனை அவமானப் படுத்தும் தைரியம் அவளுக்கு இருக்கவில்லை.

எனவே சமாளிக்கும் முயற்சியாக, ‘‘தம்பியோட விருந்தாளியை தன்னோட விருந்தாளியாக நினைத்துக் கொண்டு உபசாரம் பண்ணுகிறா’’ என்று கூறி முடித்தாள்.

ஆத்திரமாக தாயை முறைத்தாள் மணிமேகலை.

இருவரையும் கவனியாதவன் போல, ‘‘உங்களுக்கு மணியை முன்பே தெரியுமா?’’ என்று நிவாஸிடம் விசாரித்தான் கவுதமன்.

‘‘முன்பெல்லாம் ஆண்டுதோறும் மேகலை திருச்சியில் உள்ள தன் தந்தை வழித் தாத்தா வீட்டுக்கு வருவது வழக்கம். அந்தத் தாத்தா வீட்டுக்கு அடுத்த வீடு எங்களுடையது. சுமார் ஏழெட்டு ஆண்டு காலமாக மேகலையின் வரவு ஏனோ நின்று போயிற்று... உங்களைக் கூட ஒரு தரம்.. நானெல்லாம் சிறுவனாக இருந்த போது பார்த்த நினைவு இருக்கிறது’’ என்று சரளாவிடம் கூறி முடித்தான் நிவாஸ்.

‘‘அந்த ஊரெல்லாம் நமக்கு ஒத்துக்கிடறது இல்லை’’ என்றாள் சரளா அலட்சியமாக.

‘‘உனக்கு அந்தத் தொல்லை இல்லையல்லவா மணிமேகலை?’’ என்று மணிமேகலையிடம் திரும்பினான் நிவாஸ்.

வழக்கமான வருகை நின்ற காரணத்தைச் சொல்ல முடியாமல் தயங்கினாள் மணிமேகலை. சமாளிப்பாக,

''சினிமா தியேட்டர் தவிர உங்கள் திருச்சியில் என்ன இருக்கிறதாம்?'' என்றாள் கேலியாக.

''அதென்ன அவ்வளவு அலட்சியமாகச் சொல்லி விட்டாய் மணிமேகலை? மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், காவிரி, கொள்ளிடம்... அத்தோடு கூட அடுத்த வாரம் வந்தாயானால் எங்கள் ஆசிரமத்துக் கலை நிகழ்ச்சி வேறு...'' என்று அடுக்கலானான் நிவாஸ்.

''ஆங்... ஆசிரமக் கலை நிகழ்ச்சியிலே என்னத்தைப் புரட்டி விடுவாங்களாம்?'' என்று மட்டம் தட்ட முயன்றாள் சரளா.

நிவாஸை சீண்டி விட்டாற்போல ஆயிற்று. ''நிரம்பவே தான் புரட்டுகிறோம். எங்கள் ஆசிரமத்தின் நடன நிகழ்ச்சிக்காகவே அரங்கம் நிறைந்து போகும். நாலாம் ஆண்டு, நடன நிகழ்ச்சியைத் தன் படத்தில் சேர்க்க விரும்பினார் புகழ்பெற்ற டைரக்டர் மோகன். அடவுகளாலேயே நவரசங்களையும் சித்தரித்தது அந்த நிகழ்ச்சி. போன வருடம் மனிதனின் நிலைகளை விளக்கிய நடனம். இந்த ஆண்டு காலங்களின் தன்மைகளை எடுத்துக் காட்டுவது போல...'' என மழையாகப் பொழியத் தொடங்கினான்.

ஆனால் இடையே குறுக்கிட்ட மணி, ''இவைகளும் கூட அடவுகளால் அமைக்கப்பட்டவைதானா'' என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினாள்.

''ஆமாம். இந்த நடனங்களால் எங்கள் கலை நிகழ்ச்சி என்றாலே ஹவுஸ்ஃபுல்தான்'' என்றான் நிவாஸ் பெருமையாக.

''இந்த நாட்டியம் எல்லாம்...'' என்று ஆர்வத்துடன் தொடங்கிய மணியை அவள் தாயின் குரல் இடைமறித்தது.



''என்னடி பெரிய நாட்டியம்? கையையும் காலையும் நெளித்து விட்டு இதெல்லாம் ஒரு கலையா? எங்க மணிக்கண்ணு படம் வரைவாள் பாருங்க. சும்மா பார்த்துக்கிட்டே இருக்கலாம். அவளோட படக் கண்காட்சியைப் பார்த்துத் தானே கவுதம் தம்பி கூடக் கிறங்கிப் போனது. கலையினால் அது கலை. அதிர்ஷ்டக்காரக் கலை...''

'படமுமாச்சி, மண்ணுமாச்சி. கலரும் பேப்பருமாகக் காசைக் கரியாக்குறியே. இவதான் கேட்டான்னா உங்க மண்டையிலே களி மண்ணா இருக்குது. இதெல்லாம் வாங்கிப் பணத்தை பாழாக்குகிறீர்களே' என்று தாயார் ஆடிய பத்ரகாளிப் படலங்கள் நினைவுக்கு வர மணியின் முகம் கறுத்தது.

மகளின் முகத்தைக் கவனியாமல், ''கவுதம் தம்பி நம்ப மணிக்கு இந்தப் பச்சைக் கல் செட்டு நல்லா இருக்குதில்லை?'' என்று எங்கோ பார்த்த கவுதமனின் கவனத்தை மீண்டும் மணியின்பால் இழுத்தாள் சரளா.

''இருக்கிறதே'' என்றான் கவுதமன் சிறு முறுவலுடன்.

''நம்ப சொந்தத்திலே ஒரு குடும்பம் நொடிச்சுப் போயிட்டது. பாவம்னு, கூடக் குறையக் கொடுத்து வாங்கினேன். எல்லாம் அசல் கல்லுங்க. மணிக்குன்னே செய்த மாதிரி இருக்குது.. ஹி.. ஹி..'' இளித்தாள் சரளா.

ரமியின், பால்வண்ண மேனியின் இந்தப் பச்சைக் கல்ஜொலித்த அழகும். அவைகளைத் தன் அன்னை வாங்கிய முறையும் நினைவுக்கு வரவே, ''அவள் கழுத்தில் இன்னமும் அழகாக இருந்தது'' என்றாள் மணி வெடுக்கென்று.

''ஆங்... அது கெடக்குது அதிர்ஷ்டம் கெட்ட கழுதை. நகையின்னு செய்தால் போடக் கொடுத்து வைக்க

வேண்டாமா? கழுதை பேச்சை விடு... நம்ம தம்பி உனக்கு ஏதானும் பரிசு கிரிசு கொண்டாந்திருக்கும், உள்ளே போய்த் தனியாகத் தரணுமின்னா அழைச்சுகிட்டு போயேன். நிவாஸூத் தம்பிகிட்டே நான் பேசிக்கிட்டு இருக்கேன்'' என்றாள் சரளா.

இவ்வளவு வெளிப்படையாக அவனிடம் தள்ளு கிறாளே தாயார் என்று மணி அவமானத்தில் துடித்தாள்.

''தனியாக என்ன.. இதோ வாழ்த்துக்களோடு என் பரிசு'' என்று ஒரு அட்டைப் பெட்டியை நீட்டினான் கவுதமன்.

''நன்றி'' என்று முணுமுணுத்தபடி வாங்கினாள் மணி.

''நான் இவருடன் பேச வேண்டும்'' என்று நிவாஸை ஒரு தனி மேசைக்கு அழைத்துச் சென்றான் கவுதமன்.

தாயின் அருகே நின்ற மணிமேகலையின் முகத்தில் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் இனம் கண்டான் நிவாஸ்.

ஆனால் அதன் காரணத்தை யோசிக்க விடாமல் ஆசிரமம் பற்றிய கேள்விகளைக் கவுதமன் தொடங்கி விட்டான்.

கவுதமனோடு தனிமையில் மகிழ முடியாத வருத்தமா அப்படியும் தோன்றவில்லை.

கவுதமனும் கூட மணிமேகலையிடம் மயங்கி மணக்கப் போகிறவன் போலத் தோற்றம் அளிக்கவில்லை.

பின்னே சரளாவின் வெளிப்படையான குறிப்புப் பேச்சுகளுக்கு அவன் ஏன் மறுப்புத் தெரிவிக்கவில்லை?

நகை பரிசு வேறு.

எதையோ தன்னிடம் மணிமேகலை பேச விரும்பியது போல நிவாஸுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று.



அவளது ஏக்கம் நிறைந்த முகம், திரும்பும் பயணம் முழுமையும் அவனைத் தொடர்ந்து வந்தது.

கூடவே ரமியின் சோக நிழல் படிந்த அமைதியான முகமும் தோன்றியது.

சொந்த வாழ்வில் கவுதமன் மோசமானவனா?

அப்படியானால் ஒரு மலரைச் சிதைத்தவன் இன் னொரு மலரை அழிக்கவிடலாமா?

ரமிக்கும் மன விடுதலை கிடைக்குமானால்...

* * *

ஆசிரமத்தில் ஆண்டுவிழா அழைப்புகளில் இரண்டை எடுத்து கவுதமனுக்கும், மணிமேகலைக்கும் கட்டாயம் வருமாறு கோரும் துணைக் கடிதங்களுடன் அனுப்பி வைத்தான் நிவாஸ்.

ஆசிரமத்தை நேரில்வந்து பார்த்து முடிவு எடுக்கும் படி கவுதமனுக்கும் சிவநாத்தும் ஒரு கடிதம் எழுதினார்.

ஆண்டு விழாப் பயிற்சிகள் தவிர, வாழ்க்கை பழைய படியே செல்வது போலத்தான் எல்லோருக்கும் தோன் றியது.

ஆனால் நிவாஸுக்கு.

அன்று வரையில் பரிதாபமும், ஒரு மதிப்புமாக ரமியைக் கவனித்தான். இப்போது ஆராய்ச்சி நோக்கோடு பார்க்கலானான்.

இனிமையான உதட்டளவு புன்னகையுடன் பின்னே ஒளிந்து கொண்டு மற்றவர்களை எல்லாம் அவன் தூர விலக்கி வைப்பதுபோல் தோன்றியது அவனுக்கு.

இது அவனுள் ஆத்திரத்தை எழுப்பியது.

தகப்பன் பெயர் சொல்ல முடியாமல் பெற்ற பிள்ளையைத் தன் பிள்ளையாக ஏற்க முன்வரும் அவனிடம் கூட அப்படியா?

அந்தப் புன்னகைத் திரையைக் கிழித்து உள்ளே இருப்பதைக் கண்டு விடத் துடித்தான்.

ஒருநாள் கதிரைத் தூக்கிக் கொண்டு ரமியுடன் நடக்கும் போது கேட்டான், ''நான் உன்னிடம் திருமணம் பற்றிப் பேசியது நினைவிருக்கிறதா ரமி, மேலே யோசித்தாயா?''

அது முடிந்து போயிற்று என்று ஒதுக்கிவிட்டு நிம்மதியாக இருந்த ரமி திடுக்கிட்டாள்.

உடனே சுதாரித்துக் கொண்டு, ''ப்ளீஸ் நிவாஸ். அந்தப் பேச்சைத் தயவு பண்ணி விட்டு விடுங்கள். எனக்குத் திருமணம் என்பது கிடையாது'' என்றாள் முடிவாக.

அவள் முகத்தையே ஓரக்கண்ணால் பார்த்தபடி, ''கதிரின் தந்தை வந்து கேட்டால் கூட இப்படியே சொல்வாயா?'' என்றான் அவன்.

தூக்கி வாரிப்போட அப்படியே நின்று விட்டாள் ரமி. முகம் சிவப்பும் வெளுப்புமாய் வர்ண ஜாலம் காட்டியது.

காசுக்கு வந்து போனவளை எவனாவது கல்யாணம் செய்ய விரும்புவானா?

காரித் துப்பாமல் இருந்தால் அதிசயம்.

மிகவும் சிரமப்பட்டுச் சமாளித்து மேலே நடையைத் தொடங்கினாள்.

ரமியின் கண்களில் வேதனையைக் கண்ட போதும் நிவாஸுக்கு இரக்கம் தோன்றவே இல்லை.



''கேட்டேனே'' என்றான் அழுத்தமாக.

''அது நடக்கும்போது பார்த்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம்'' என்று பட்டென முடிவெடுத்து வேகமாக நடந்தாள் ரமி.

'பார்க்கத்தான் போகிறேன்' என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டான் நிவாஸ்.

இல்லத்தின் ஆண்டுவிழா சிறப்பாக நடந்தேறியது.

மறுநாள் நர்சரிப் பள்ளிக்கு விடுமுறை.

இல்லத்துப் பிள்ளைகளின் காலை உணவை ரமி மேற்பார்வை பார்த்துக் கொண்டு இருந்தபோது பானுவிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

பெரிய பெண் ஒருத்தியிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அலுவலக அறையை நாடிச் சென்றாள் ரமி.

அலுவலக அறையின் கதவைத் தாண்டி உள்ளே காலடி எடுத்து வைத்த ரமியை, 'ரமி' என்று கூறியபடி தாவி வந்து அணைத்துக் கொண்டாள் மணிமேகலை.

''மணி நீ.. நீயே தானடி? இங்கே எப்படி...'' என்று தானும் உணர்ச்சி வசப்பட்டவளாகத் தடுமாறினாள்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''நானே தான்! எனக்குக் கூடத் தெரியாமல் மறைத்து விடுவதா ரமி. எத்தனை நாள் அழுதேன் தெரியுமா?'' என்று குற்றம் சாட்டும் குரலில் பேசினாள் மணிமேகலை.

ரமியின் முகமும் அதன் காரணத்தை எண்ணி வாடியது.

''இருவருமாகப் பின்புறம் சென்று சற்று நேரம் பேசிக் கொண்டு இருங்கள். இங்கே நளினியை ஒரு மணி

நேரம் பார்த்துக் கொள்ளச் சொல்லுகிறேன்'' என்றாள் பானுமதி.

''ஒரு மணி நேரமா! ஊகூம். குறைந்தது இன்று ஒரு நாள் மட்டுமேனும் ரமிக்கு லீவு கொடுங்கள் டாக்டர்'' என்று கெஞ்சினாள் மணி.

''நன்றி அக்கா'' என்று மட்டும் சொல்லி விட்டு மணியின் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு போனாள் ரமி. ''ஒரு மணி நேரத்தில் அக்கா கிளினிக்குக்குப் போக வேண்டும் மணி'' என்ற விளக்கமும் கொடுத்தாள்.

பின்புறமாக இருந்த ஆற்றங்கரை ஓரமாக ஒரு மரத்தடியில் இருவருமாக அமர்ந்தனர்.

'இவளிடம் எதை என்னவென்று கூறுவது' என்று கலங்கியது ரமியின் நெஞ்சம்.

கதிரைப் பற்றி அறியும் போது மணியான இந்தத் தோழி மாறி விடுவாளா?

## 21



பலகாலம் கழித்துப் பார்த்த சிநேகிதியிடம் தன் அவலத்தைச் சொல்ல ரமிக்கு மனம் வரவில்லை.

எனவே, முந்திக் கொண்டு ''உன்னைப் பற்றிச் சொல்லு மணி... வாழ்க்கை எப்படி நடக்கிறது?'' என்று விசாரித்தாள்.

''ஒரே போர்?'' என்றாள் மணிமேகலை எரிச்சலோடு.

''என்னது!''



''ஆமாம். பெரும் போர். அதில் இருந்து தப்பிக்கத் தான் இங்கே வந்து சேர்ந்தேன்'' என்றாள் மணிமேகலை அதே குரலில்.

''இங்கே யார் வீடு...''

''தில்லை நகரில் என் தாத்தா இருப்பது மறந்து போய் விட்டதா ரமி.''

''யார்? ஓ... அந்தக் கல்யாணம் பண்ணிக்கோ தாத்தா தானே'' என்று முறுவலித்தாள் ரமி.

''ஆமாம் அவரேதான். பதினைந்து வயதிலேயே அறுக்கத் தொடங்கி விட்டாரே என்று இங்கு வருவதையே நிறுத்தினேன். இப்போது 'அங்கத்தி' அறுவை இதை மிஞ்சி விட்டது'' என்று அலுத்துக் கொண்டாள் மணிமேகலை.

''அங்கேயும் அதே பஜனையா?'' என்று கேலியாகச் சிரித்தாள் ரமி.

''வெறும் பஜனையா?'' என்ற மணியின் முகத்தில் கோபம் ஜொலித்தது.

''ரமி, என் அம்மா குணத்தில் மட்டம் என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னையே குழியில் தள்ளும் அளவுக்கு பணப்பேய் என்று நான் நினைக்கவே இல்லை'' என்றாள் சினத்துடன்.

''ஒரேயடியாக அத்தையை மட்டம் தட்டுகிறாயே மணி. பணத்தாசை இருந்தாலும் அத்தைக்குப் பிள்ளைப் பாசமும் அதிகம் உண்டுதான்'' என்ற மணியின் தாய் சரளாவுக்கு வக்காலத்து வாங்கினாள் ரமி.

''நீ அப்படி நினைத்துக் கொண்டு இருக்கிறாய்'' என்று முறைத்தாள் மணி. ''ரமி நான் படம் வரைவது

தெரியும் அல்லவா? வரைந்த படங்களை எல்லாம் சேர்த்து ஓர் ஓவியக் கண்காட்சி வைத்தோம். எதற்கு என்று தெரியுமா? கலரிலும் பிரஷ்சிலும் காகிதத்திலு மாகச் செலவழித்த பணத்தைச் சம்பாதித்து அம்மாவிடம் திருப்பிக் கொடுக்கத்தான்.''

''எந்த வேளையில் கண்காட்சி வைத்தேனோ? அன்றிலிருந்து மூன்று மாதமாக எங்கள் வீட்டை வளைய வருகிறான் ஒருவன்... பெரிய பணக்காரனாம். அவ் வளவுதான். அம்மா என்னைத் தூக்கி அவன் மடியில் வைக்காத குறை. எனக்கு அவமானம் தாங்க முடிய வில்லை ரமி.

''ஒருவேளை சும்மா என்றால் அவனை எனக்கும் பிடித்துப் போயிருக்குமோ என்னவோ? இந்த அம்மா வின் வெளிப்படையான தூண்டில் பேச்சில் குமட்டு கிறது.

''தாத்தாவைச் சாக்கிட்டு இங்கே ஓடி வந்தேன். அப்பா வழித் தாத்தா அல்லவா? முன்பே அம்மாவுக்குப் பாட்டி சண்டை, அதனால் இங்கே தொல்லை செய்ய வரமாட்டார்கள்.

''கூடவே நிவாஸ் வேறு ஆசிரமத்துக் கலை நிகழ்ச்சிகளைப் பற்றி சொல்லவும் எனக்கு உன் நினைவு வந்தது. படிக்கும் நாளையிலேயே இதுபோலப் புதிது புதிதாக நடனங்களைப் பற்றிக் கூறுவாயே எனக்கு இந்த நடனங்கள் ஏற்பாடு செய்வது நீயாக இருக்குமோ என்ற சந்தேகம். உன்னைப் பார்க்கும் ஆவல் வேறு மிகுதியாகச் சேர்ந்து கொண்டதா? அப்பாவுக்கு ஐஸ் வைத்து தாஜாப் பண்ணி எப்படியோ வந்து சேர்ந்துவிட்டேன். இனி இங்கிருந்து நகரப் போவதாக இல்லை'' என்று முக மெல்லாம் மலரப் பேசி முடித்தாள் மணிமேகலை.



சில விநாடி மவுனத்தின் பின், ''பாவம் அப்பாவுக்கு நல்ல மண்டகப்படி நடந்துகொண்டு இருக்கும். ஆனால், அம்மாவுக்கு இவ்வளவு இடம் கொடுத்து வளர்த்து விட்டதற்காக அவரும் பட வேண்டியதுதான்... ம் இனி நீ தொடங்கு'' என்று தோழியை ஊக்கினாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு சற்று நேரம் கொள் ளிடத்தை வெறித்தாள் ரமி.

ஒரு முடிவுக்கு வந்தவளாக நிமிர்ந்து, ''மணி நான் திருமணம் ஆனவள் அல்ல. ஆனால் எனக்கு ஒரு குழந்தை எனக்கே பிறந்தது இருக்கிறது'' என்றாள் வேகமாக.

''ரமி..'' என்று அதிர்ந்தாள் மணிமேகலை.

பார்வையை ஆற்று நீரிலிருந்து திருப்பாமலே, ''ஆமாம். இதற்கு விளக்கம், சமாதானம் என்றெல்லாம் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் இதற்காக என்னுடன் பேச விருப்பமின்றி எழுந்து சென்றுவிட் டால் உன்னைப் பற்றிக் கொஞ்சமும் பிழையாக எண்ண மாட்டேன்,'' என்றாள் உணர்ச்சியைத் துடைத்த குரலில் ரமி.

இதற்குப் பதில் கூறுவதுபோல மணியின் கை ரமியின் விரல்களை அழுந்தப் பற்றியது.

சற்று நேர அமைதிக்குப் பிறகு, ''உன் குழந்தையின் பெயர் என்ன ரமி? என்ன வயதாகிறது?'' என்று விசாரித் தாள் மணி.

இன்னமும் மனம் வசத்துக்கு வராமல் எங்கோ பார்த்த படியே ரமி பதிலளித்தாள். ''அவன் பெயர் கதிர். வயது இரண்டு வயதும் சில மாதங்களும்.''

மனதில் கணக்கிட்டு, ''அப்படியானால், நீ சென்னையை விட்டுக் கிளம்புவதற்கு இந்தக் குழந்தை.. இதன் தந்தை தான் காரணமா?'' என்று வினவினாள் மணி.

தந்தையா? இப்படி ஒரு பிள்ளை இருப்பதையே அறியாதவனுக்கு அந்தப் பெயரை எப்படித் தருவது?

ரமியிடமிருந்து பதில் வராது போகவும், ''எப்படியோ அவன் உன் மகன். அவனிடம் எனக்குப் பிரியம் உண்டாக அது போதும். அவன் எங்கே ரமி? எனக்கு அவனை உடனேயே பார்க்க வேண்டுமே'' என்று பரபரத்தாள் மணி.

குழந்தையைப் பார்த்த பின் சற்று நேரம் மணி பேச வில்லை.

தோழியின் கன்றியிருந்த முகத்தையும் குழந்தையின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி ஏதோ யோசனை யில் ஆழ்ந்து போனாள்.

அதற்கு பானுமதி குறிப்பிட்ட நேரம் முடிந்து போய் விடவே ரமி தனது வேலையைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள்.

வீடு திரும்பிய பின் பகல் எல்லாம் யோசித்தாள் மணி.

அவளுக்கு ஒரு சந்தேகம்.

அது சரியே என்று ஆகிவிட்டால் எல்லோருக்கும் மிகுந்த நன்மைதான்.

ஆனால் தவறாகிப் போனாலோ வீணாகச் சுருக்குக் கயிற்றில், தானே சென்று தலையை மாட்டினாற் போலத்தானே,

இந்த யோசனையில் உழன்றாள்.



இதையே நினைத்தபடி தோட்டத்தில் வளைய வந்த போது பக்கத்து வீட்டில் நிவாஸின் வாகனம் நுழைவதை பார்த்தாள்.

அவனைப் பார்த்து முறுவலித்தாள் மணி.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அருகில் வந்தான் நிவாஸ்.

அவள் முகத்தை ஒரு தரம் கூர்மையாகப் பார்த்து விட்டு ''அடையாளம் தெரிந்ததா?'' என்று கேட்டான்.

தலையாட்டினாள். மணிகேலை, ''நீங்கள் போட்டோ பார்த்தீங்களா?'' எனக் கேட்டாள்.

''ஆம். ரமியின் வாழ்வை நாசப்படுத்தி விட்டு உனக்கும் வலை விரிக்கிறான் கயவன்'' என்றான் அவன் கோபமாக.

அவனை ஆச்சரியமாய்ப் பார்த்துவிட்டு, ''அங்கே கவுதமனிடம் அப்படிக் குழைந்தீர்களே!'' என்றாள் மணி.

''அது ஆசிரம விஷயம். இது நல்ல இரு பெண்களின் வாழ்க்கை ஆயிற்றே'' என்றான் நிவாஸ்.

''என்ன நடந்தது என்று தெரியாமல் எப்படித் தலையிடுவது என்ன சொல்வது என்று புரியவில்லை'' என்றாள் மணி.

''உன் உயிர்த் தோழி என்றாயே ரமியிடம் நீ பேச முடியாதா?'' என்று வினவினான் நிவ்ாஸ்.

''மூன்று ஆண்டுகள் பழகிய பிறகு உங்களுக்கு ரமியின் குணம் தெரியவில்லை. தன் துன்பங்களைப் பகிர்ந்து கொள்கிறவள் அல்ல அவள், நாமாகக் கேட்டால் கூடப் பூட்டுப் போட்ட மாதிரி மூடிக் கொள்வாள்.

முகபாவனையில் இருந்து கூட ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது'' என்றாள் மணி கவலையில் பெருமை யாக.

''ஆமாம் தனக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொள்கிற கர்வம்'' என்றான் நிவாஸ் ஏளனமாக.

''கவுரவம் என்று நான் நினைக்கிறேன் நிவாஸ்'' என்றாள் மணி தலை நிமிர்த்தி.

''அவ்வளவு கவுரவம் பார்த்து ஒதுங்குகிறவளிடம் இவ்வளவு அன்பை வைத்திருக்கிறாயே, ஆச்சரியம் தான்'' என்றாள் நிவாஸ்.

''இந்தக் கஷ்டங்கள் எல்லாம் நேருமுன் நீங்கள் ரமியைப் பார்த்தது இல்லை நிவாஸ். அவ்வளவு அழகை வைத்துக் கொண்டு அதைப் பற்றிய நினைப்புக் கூட இல்லாமல் எல்லோருடனும் ஆசையாகப் பழகுவாள். அவளைப் பற்றி...'' மேலே பேச முடியாமல் மணியின் குரல் கம்மிற்று.

முதல் தடவையாக மணிமேகலையைக் கண்களை அகல விரித்துப் பார்த்தான் அவன்.

''ரமி மாதிரி இல்லாவிட்டாலும் நீ அவளை விட எந்த விதத்திலும் குறைந்தவள் அல்ல, மணிமேகலை'' என்றான் மிருதுவாக.

மணியின் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

ஆயினும் தலையசைத்துவிட்டு, ''ரமியின் அழகுக்கு முன் நான்...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

அவன் குறுக்கிட்டு, ''அவள் பார்த்த உடனே மனதைக் கவர்கிறாள். நீ பார்க்கப் பார்க்க மனதை நிரப்புகிறவள். இரண்டும் சமம்தான்'' என்றான்.



கன்னங்கள் சிவப்பேற மணி பேச்சை மாற்றினாள்.

''ரமிதான் கவுதமனைத் தவறாக எண்ணி ஓடி வந்து விட்டாளோ என்று எனக்கு ஒரு சந்தேகம் நிவாஸ்'' என்று தொடங்கினாள்.

''அதெப்படி? அங்கே உனக்கு நகை, பரிசு எல்லாம் தடபுடல் பட்டதே.''

''பணம் இருந்தால் நகையும் பூவும் ஒன்றுதான் நிவாஸ். அதை விடுங்கள். என் படங்களில் ரமியின் சாயலைக் கண்டதனால்தான் கவுதமன் என்னிடம் பேச முன் வந்தாரோ என்று தோன்றுகிறது. என் படங்களின் மாடல் யார் மூலம் எந்தப் பெண் என்று எல்லாம் விசாரித்தார். இந்த அம்மா தான் குறுக்கே விழுந்து ''எல்லாமே என் மகளின் சொந்தக் கற்பனை தான்'' என்று ஒரே அடியாய் அடித்து விட்டார்கள். அதை நம்பாமல் உண்மையை அறியத்தான் மீண்டும் மீண்டும் வந்தாரோ என்றெல் லாம் சந்தேகமாக இருக்கிறது'' என்று மனதில் குடைந் ததை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் மணிமேகலை.

''கவுதமனை இங்கே வரவழைத்து ரமியைச் சந்திக்கச் செய்து பார்க்கலாமா என்று தோன்றுகிறது. ஆனால் என் சந்தேகம் தவறானால் பிறகு எனக்குத்தான் துன்பம்'' என்பது யோசனையோடு நிறுத்தினாள்.

நிவாஸின் மனம் கலங்கியது.

ரமிக்கு மன விடுதலை கிடைக்கும் என்று அவன் நினைத்தது பொய்யாகி முழுமையாக பந்தம் ஏற்பட்டுப் போனால்?

ஒரே கணம்தான், இந்தக் கலக்கம்.

உடனேயே, இந்த இக்கட்டான நிலைமைக்கு இல்லை என்று முடிவானால் அதுவும் கூட மேல்தான் என்று தோன்றியது.

அவள் பேசத் தொடங்குமுன், ''மணிக்குட்டி, உனக்கு போன் வந்திருக்கிறது'' என்று மணிமேகலையின் பாட்டி அழைத்தார்கள்.

புன்னகையால் விடை பெற்றுக் கொண்டு சென்று டெலிபோனை எடுத்தாள் மணிமேகலை.

''திருச்சி நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டது, கவுதமனின் கேலிக் குரல்.

கவுதமனின் குரல் சற்றும் எதிர்பாராமல் டெலி போனில் கேட்கவும் மணிமேகலை திகைத்து நின்றாள்.

''என்ன மணிமேகலை, பேச்சையே காணவில்லையா? திருச்சி மனதை மயக்கி விட்டதா?'' என்று அவனே தொடர்ந்தான்.

''ம்.. ஆ.. அதில்லை.. நீங்கள்.. நீங்கள் இங்கே எப்படி? என் தாத்தாவின் டெலிபோன் நம்பர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று திக்கித் திணறினாள் மணி.

''இங்கே எனக்குக் கொஞ்சம் சொத்துக்கள் உண்டு. அவ்வப்போது வருவேன். உன் டெலிபோன்... யார் தந்திருக்கக் கூடும்? உன்னால் ஊகிக்க முடியாதா?'' என்றான் அவன் கிண்டலாக.

''அம்மா...'' என்றாள் அவள் சுதி குறைந்த குரலில்...

''நிச்சயமாக.. இங்கே போரடித்துக் கிடப்பாய்? துணையாக இருக்க வேண்டும் என்று'' சிரித்தான் அவன்.

மணிக்கு முகமெல்லாம் எரிந்தது.

துணையாக இருப்பதாமே?

அவன் பேச்சை மாற்றினான். ''முன்பு பழகிய இடம் தானே. பழைய சினேகிதிகள், தெரிந்தவர்கள் என்று



யாரையேனும் பார்த்தாயா?'' என்று சாவதானமாகக் கேட்டான்.

''ஆம்...'' என்று தொடங்கிய போதே மணியின் மனம் மாறிவிட்டது.

தாயிடம் உள்ள பயம் தலை தூக்கியது.

ரமிக்கு, மணியே இந்தப் பணக்காரனைத் திருப்பி விட்டாள் என்று தெரிந்தால், வார்த்தையாலேயே கொன்று விடுவாள்!

அதனால் கவுதமன் தானாகவே ரமியைச் சந்தித்தாற் போல ஏற்பாடு செய்ய வேண்டும்.

எதற்கும் நிவாஸிடம் கலந்து கொள்வது நல்லது.

அதற்குள் ''யார் யாரை சந்தித்தாய்?'' என்று விசாரித் தான் கவுதமன்.

அவன் குரலில் ஆவல் கலந்திருக்கிறதா என்று யோசித் தாள் மணி. இல்லை என்று மனதில் முடிவானதும், ''நிவாஸ்'' என்றான் அவனுக்குப் பதிலாக.

''ஓகே... அவரா சரிதான், வைத்து விடு மணி. நான் நிவாஸிடம் பேச வேண்டும்'' என்றான் அவன்.

''வந்து... வந்து எங்கள் தாத்தாவிடம் அப்பா எப்படி யிருக்கிறார் என்று சொல்லுங்களேன்'' என்று தாத்தாவை ஜாடை காட்டி அழைத்து அவர் கையில் டெலி போனைக் கொடுத்துவிட்டு, நிவாஸைத் தேடி ஓடினாள்.

* * *

பள்ளி வேலை முடிந்த பிறகு, பிள்ளைகளின் குற்றம் குறைபாடுகள், முறையீடுகள் என்று சில பல வேலை களை முடித்துவிட்டு ரமி வீட்டுக்குக் கிளம்பும்போது, குறைந்த பட்சம் ஐந்தரையாவது ஆகிவிடும்.

சில சமயங்களில் அதற்கு மேலும் ஆவது உண்டு.

அதனாலேயே ஆசிரமத்துக்கு மிக அருகில் வேறு வீடு ஒன்றில் புகுந்திருந்தது ரமியின் சின்னக் குடும்பம்.

அன்றைய வேலைகளை முடித்துவிட்டு குழந்தைகள் பகுதிக்குச் சென்று மகனை அழைத்துக் கொண்டாள்.

கதிருடைய பிஞ்சுக்கால்களின் தளிர் நடைக்குத் தகுந்த படி தானும் மெல்ல நடந்தபடி வீட்டை நோக்கிச் செல்லலானாள்.

வழக்கம் போல மகனிடம் முழுமையாக ஈடுபடாமல் மனது மணிமேகலையை நினைத்தது.

எவ்வளவு பிரியமான பெண்!

''மாலையில் வருகிறேன்'' என்றவள் வரவில்லையே என்று யோசித்தபடி நடந்தபோது ஒரு கார் அருகில் வந்து நின்றது.

''கிளம்பிவிட்டாயா?'' என்று வினவியபடி காரின் கதவைத் திறந்து கொண்டு வேகமாக இறங்கினான் நிவாஸ்.

வரவேற்பது போல லேசாக முறுவல் செய்தாள் ரமி.

''ஹாய் அங்கிள்...'' என்று நிவாஸைப் பார்த்து மழலைக் குரலில் சிரித்தபடி ஓர் எட்டு எடுத்து வைத்த கதிர், கதிரின் மறுபுறத்தில் இருந்து இறங்கி வந்த புதியவனைக் கண்டதும் லேசாக மிரண்டு திரும்பித் தாயின் கால்களைக் கட்டிக் கொண்டான்.

மகனோடு கூடவே திரும்பிப் பார்த்த ரமிக்குக் காலடியில் பூமி நழுவியது.

''இந்த ஆசிரமத்தின் இரண்டாவது முக்கிய பெண் மணியைச் சந்தியுங்கள் மிஸ்டர் கவுதமன், பெயர் ரமி'' என்ற நிவாஸ் மீண்டும் ரமியிடம் திரும்பினான்.



''ரமி, பானு இன்னமும் வரவில்லையா? நான் சிவாவிடம் அவசரமாகப் பேச வேண்டும். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள், நான் இதோ வருகிறேன்'' என்று ரமியின் திகைத்த தோற்றத்தைக் கவனியாதவன் போல மடமடவென்று மொழிந்து விட்டு வேகமாகச் சென்று மறைந்தான்.

உள்ளூர நிவாஸுக்கு நன்றி செலுத்தியபடி ''ரமீ!'' என்று மகிழ்ச்சியும் ஆர்வமுமாக அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான் கவுதமன்.

ரமியின் நெஞ்சு தடதடத்தது.

எந்த ஒருவனால் பழகிய மனிதர்கள் முகத்தைப் பார்க்கக் கூசி, பிழைக்கும் வழியையும், வாழ்ந்த ஊரையும் விட்டு அகதி போல ஓடி வந்தாளோ... அவன்.

எவன் பார்வையில் இனிப் பட்டு விடக்கூடாது என்று ஓடினாளோ... அவன்.

பனிப் புயலும், பாலைக் கனலுமாக மாறி மாறி அவளைத் தாக்குகையில் எள்ளளவும் பாதிப்பின்றி எவ்வளவு சாதாரணமாகப் புன்னகை செய்கிறான்.

அடியெடுத்து வைத்தால் விழுந்து விடுவாள் போல உச்சி முதல் உள்ளங்கால் வரை அவளுக்கு உதறும் போது அவன் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் என்ன இயல்பாக கடந்து வருகிறான்.

''பல நாட்களாக உன்னைத் தேடினேன், ரமி'' என்று ஆவலோடு நெருங்கி வந்தான் அவன்.

எதற்காக என்று புரிந்தது போல ரமியின் உடம்பு எரிந்தது.

நெருப்பின் மேல் நிற்பது போலத் தவிப்புடன் விலகிச் செல்ல முயன்றாள்.

தாயின் தவிப்பை உணராமல், 'அம்மா, அம்மா' என்று அவள் கையைப் பற்றி இழுத்து இரகசியம் பேசினான் கதிர், ''அங்கிள்கிட்டே போவோமா அம்மா?'' என்று கெஞ்சலாகக் கேட்டான்.

பிள்ளையின் கெஞ்சலை உணரும் நிலையில் ரமி இல்லை.

கவுதமனைப் போலவே தானும் அமைதியோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ள அவள் படாத பாடுபட்டுக் கொண்டு இருந்தாள்.

ஆனால் அப்போதுதான் குழந்தையை உணர்ந்தாற் போல கவுதமன் நின்றான்.

முகத்தில் நிழல் படிந்தது.

சிறு தயக்கத்தின் பின், ''உன் மகனா ரமி?'' என்று மெல்ல வினவினான்.

பதிலே போல, ''அம்மா...மா'' என்று அழுத்தம் கொடுத்து அழைத்தான் கதிர்.

பெரிய மனிதன்போல சிறுவன் அதட்டுவதைப் பார்த்து முறுவல் செய்தபடி, ''திருச்சிதான் உன் கணவர் ஊரா ரமி? திருமணம் எப்போது நடந்தது? இவன் தந்தை பெயர் என்ன? என்ன செய்கிறார்?'' என்று முறைப் படி குசலம் விசாரித்தான் கவுதமன்.

திருமணமா? பாவி... பாதகா...

எவ்வளவோ முயன்றும் கட்டுப்படுத்த முடியாமல் அன்றைய நிகழ்ச்சிகள் அணு அளவும் பிசகாமல் ஒரு முழுமையான படம் போல அவர்கள் முன்னே ஓடியது.



ஏதோ ஒரு வழியாக அந்த பயங்கரமான நினைவு களில் இருந்து மீண்டு விட்டோம் என்று எண்ணிய ரமிக்கு எல்லாவற்றையும் தலைக்குப்புறத் தட்டிக் கவிழ்த்தது போல ஆயிற்று.

மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகும், ஆயிரம் நாட் களுக்கு அதிகமாகவே சென்று மறைந்த பிறகும் இவ னுக்கு இவ்வளவு சக்தியா?

உள்ளம் எரிய, அமைதியாக இருப்பதுபோல காட்டிக் கொள்ளும் எண்ணம் கூட மறந்துவிட, ''வாடா கதிர்'' என்று மகனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேகமாகச் செல்ல முயன்றாள்.

ஆனால் பிள்ளை வேறு நினைப்பு வைத்திருந்தான்.

காலை அழுந்த ஊன்றிக் கொண்டு, ''அங்கிள் கிட்டே'' என்று சிணுங்கினான்.

''வாடா என்றால்...'' ரமி கடுங்குரலில் அதட்டவும் பழக்க மற்ற இந்தக் கடுமையில் சிறுவன் விழித்தான்.

''ஏன் இந்தக் கோபம் ரமி? ஒருவேளை அவசரமா? உன் கணவர் வீடு திரும்பிவிட்டிருப்பாரா? காரில் விரை வாகக் கொண்டு போய் விடட்டுமா? காரில் வருகிறாயா? குட்டிப் பையா?'' என்று கேட்டபடி கார்க் கதவைத் திறந்தான் கவுதமன்.

''வேண்டாம்'' என்றாள் ரமி கத்தரித்தாற்போல.

''ஏன் ரமி, சீக்கிரம் சென்று விடலாமே. எனக்கும் கூட உன் கணவரைப் பார்க்க வேண்டும்'' என்றான் அவன் இயல்பாக.

''எதற்காக?'' என்றாள் ரமி உள்ளடங்கிய ஆத்திரத் துடன்.

''வாழ்த்துவதற்காகத்தான் ரமி'' என்று அவன் புன்னகை செய்யவும் அவளுக்குத் தாங்க முடிய வில்லை.

''என்னவென்று வாழ்த்துவீர்கள்? நீ அடைந்தது எச்சிலை என்றா? இன்பமான அனுபவத்தை முன்பே அனுபவித்தவன், அடுத்து அனுபவிப்பதற்கு வாழ்த் துக்கள் என்றா?'' என்று பொரிந்து கொட்டிவிட்டாள்.

''சீச்சீச்சீ என்ன ரமி இது? அதெல்லாம் சொல்வேனா? ஏனோ அவரைப் பார்க்க வேண்டும் போல ஓர் ஆவல்... மேலும்...''

அவன் பேச்சை காது கொடுத்துக் கேட்க விரும்பாமல் கதிரின் கரத்தைப் பற்றி முரட்டுத்தனமாக இழுத்துச் செல்ல முயன்றாள் ரமி.

சிறுவன் வலியால் சிணுங்கினான்.

சட்டென அருகில் வந்து அவள் கையைப் பற்றி அவளது பிடியில் இருந்து கதிரை விடுவித்தான் கவுதமன்.

''சின்னக் குழந்தையிடம் இது என்ன முரட்டுத்தனம்?'' என்று கடிந்தான்.

அவன் கைபட்டதால் துடித்துக் கொண்டு விலகிய அவளைப் பொருட்படுத்தாமல் மிரட்சியுடன் நின்று இருந்த பிள்ளையை விளையாட்டுக் காட்டுவது போல தூக்கித் தோள் மீது வைத்தான்.

''அடடே! கதிர்ப் பையன் ரொம்ப வளர்ந்து விட் டானே'' என்று அவனிடம் கொஞ்சிப் பேசினான்.

தன் அழுகையை மறந்து கிளுகிளுத்துச் சிரித்தான் குழந்தை.



அதன் பிறகு ரமியிடம் திரும்பி, ''வீடு எங்கே சொல்... நானே கொண்டு வந்து விட்டுவிடுகிறேன்'' என்றான் மீண்டும்.

சொந்தம் போலக் கவுதமனின் தோளில் கதிர் சலுகை யுடன் அமர்ந்து இருந்த தோற்றம் ரமியின் நெஞ்சைக் கசக்கியது.

வேதனை தாளாமல் ''வேண்டாம் வேண்டாம்'' என்றாள் பதற்றத்துடன்.

''என்ன வேண்டாம்?'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

சற்று திகைத்து பின், ''வீட்டிற்கு வர வேண்டாம். அவனை... கதிரைக் கொடுங்கள்'' என்று திக்கினாள் ரமி.

சொன்னதோடு நில்லாமல் பிள்ளையைப் பற்றவும் முயற்சி செய்தாள்.

கண்கள் இடுங்கத் தன் தோள் மீதிருந்த சிறுவனை இறுகப் பற்றிக் கொண்டு ''அநாகரிகமாக நடந்து விடுவேன் என்று பயப்படுகிறாயா. அல்லது எதையும் என்னிடம் மறைக்க முயற்சிக்கிறாயா?'' என்று சற்று கோபமாகவே கேட்டான் கவுதமன்.

அந்தக் கேள்வி ரமியைத் தூக்கி வாரிப் போட்டது.

## 22



அந்த வினாடி வரையிலும் பழைய நினைவுகளில் பாதிக்கப்பட்ட ரமி, கவுதமனின் கண்களில் இருந்துதான்

மறைய வேண்டும் என்று நினைத்தாளே தவிர, மகனை மறைக்க வேண்டும் என்று எண்ணவில்லை.

வேகமாகப் பரவி சூழ்ந்த இருளின் காரணமாகவோ கதிர் தன் தாயிடம் முகம் புதைத்து நின்றதாலோ, அல்லது கவுதமனின் கவனம் முழுவதும் ரமியிடம் குவிந்திருந்த தாலோ, என்னவோ அதுவரை கவுதமன் கதிரின் சாயலை கண்டு கொள்ளவில்லை.

கண்டுவிட்டால் என்ன ஆகும்?

எதையுமே யோசிக்கும் சக்தியை இழந்த அவளுக்கு சிந்தை குழம்பியது.

அவன் என்ன செய்துவிடக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ள அவளால் முடியவில்லை.

அதனால் அது தெரியாமலேயே அவன் விலகிப் போய் விடமாட்டானா என்று மனம் ஏங்கியது.

கவுதமன் அவளை அதிகம் யோசிக்க விடவில்லை! ''நான் தான் இவனை உன் வீட்டில் கொண்டு விடப் போகிறேன். காரில் என்றாலும் சரி, நடையில் என்றாலும் சரி'' என்றான் உறுதியாக.

அவன் காரில் ஏறவும் சற்று வேகமாக நடந்தாள் ரமி.

குழந்தையுடன் நிதானமாகப் பின் தொடர்ந்தான் கவுதமன்.

* * *

மூச்சு இரைக்க நெஞ்சை அழுத்தியபடி உள்ளே வந்த மகளைப் பார்த்த ரஜனி திடுக்கிட்டாள்.

கை வேலையை அப்படியே போட்டு விட்டு ''என் னம்மா? என்ன ஆயிற்று? கதிர் எங்கே?'' என்று பரபரத் தாள்.



''அம்மா... அம்மா... என்னை மீறி ஒரு வார்த்தை சொல் லக் கூடாது. ஒரு.. ஒரு வார்த்தை கூட... ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது'' என்று மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தாயைத் தணிந்த குரலில் கட்டுப்பாடு செய்தாள் ரமி.

ஒன்றும் புரியாமல் ரஜனி விழிக்கையில் கவுதமன் குழந்தையோடு வந்து சேர்ந்தான்.

''இதுதான் உனது வீடா? உன் கணவர் எங்கே?'' என்று விசாரித்தான்.

அவன் குரலில் இருந்த அழுத்தம் பதிலை அதிகாரத் துடன் கேட்டது.

திகைப்புடன் ஏதோ சொல்ல வாயெடுத்த தாயிடம் ''அம்மா சொன்னேனே'' என்று அதட்டி உள்ளே இழுத்துக் கொண்டு போனாள் ரமி.

''எதையாவது சொல்லிவிட்டீர்கள் என்றால் பிறகு, என்னை உயிருடன் பார்க்க முடியாது. இங்கேயே இருங்கள்'' என்று தணிந்த குரலில் சீறிவிட்டு மீண்டும் முன் அறைக்குள் சென்றாள்.

அவள் முகத்தையே பார்த்தபடி, ''உன் கணவரைப் பார்க்க வேண்டும் என்றேனே!'' என்றான் அவன்.

''கதிர், உள்ளே அம்மாவிடம் போ'' என்று மகனைப் பிடித்து உள்ளே அனுப்பினாள் ரமி.

பிறகு கவுதமனிடம் பட்டென்று, ''பார்க்க முடியாது!'' என்றாள்.

''இப்போது இங்கே இல்லையா?''

''இல்லை'' என்று சுருக்கமாக வந்தது பதில்.

''ஏன் ரமி. ஒரு நண்பனைப் போல என்னிடம் பேச முடியாதா? என்னால் ஏதும் கெடுதல் நேரிடும் என்று

நினைக்கிறாயா? அவசியமே இல்லை. உன் நன்மையைத்தான் நானும் நாடுகிறேன். சென்னையை விட்டு அவ்வளவு அவசரமாக ஏன் கிளம்பினாய் ரமி? அவசியமே இல்லை; என்னிடம் பணத்தை வாங்க மறுத்தவள் வீட்டு அட்வான்ஸ்சைக் கூட கேட்ட வாங்கினாயாமே. பணத்தேவை என்றால் என்னிடம் கேட்பதற்கு என்ன?'' என்று சாதாரணமாகப் பேசலானான்.

'இன்னொரு இரவின் கூலியாகவா?' என்று தன்னுள் வெதும்பிய ரமி, ''நீங்கள் கிளம்புகிறீர்களா? உங்களுக்கு எத்தனையோ அலுவல்கள் இருக்கும்?'' என்றாள் கத்தரித்தாற்போல.

இது என்ன சிறுபிள்ளைத்தனம் என்பதுபோல முறுவலித்து, ''கொஞ்சம் கூட இளகுவதாக இல்லையாக்கும்?'' என்றான். பிறகு தன் விழிகளால் அறையைத் துழாவியபடி, ''ஒரு டீ கூடக் கிடைக்காதா ரமி?'' என்றான்.

அவன் அருகே தாமதிக்க விரும்புவது புரிந்துவிட, ''எங்கள் வீட்டு, டீ உங்களுக்குப் பிடிக்காது'' என்றாள் பட்டென்று.

''அதை நான் அல்லவா சொல்ல வேண்டும்'' என்று சிரித்தான் அவன்.

''ஊகூம். நான் அம்மாகிட்டே தான் குளிப்பேன்'' என்று கதிர் உள்ளே அடம் பிடிப்பது கேட்டது.

மகன் முன்னறைக்கு வருமுன் அவனை வெளியேற்றி விட விரும்பிய ரமி, ''எனக்கு வேலை இருக்கிறது'' என்று வாயில் அருகே சென்று கதவை நன்றாகத் திறந்து வைத்தாள்.



''ஓகே ஓகே... கழுத்தைப் பிடித்துத் தள்ளுமுன் நானே போய்விடுகிறேன். ஆனால் இந்தப் பதட்டத்துக்கு அவசியமே இல்லை'' என்றான். குரல் திடுமென நின்றது.

மாலைக் குளியலுக்கு தயாராக ஜட்டி மட்டும் அணிந்து தாயை அழைக்க வந்த கதிர், தன்னைத் தோளில் சுமந்து வந்த புதியவனைப் பார்த்து வெட்கச் சிரிப்பு சிரித்து விட்டு மீண்டும் உள்ளே மறைந்தான்.

ரமியின் விறைப்பான முதுகைத் திருப்பிப் பார்த்த கவுதமனின் கண்கள் பளபளத்தன.

மெல்ல நடந்து சென்று அவளை நெருங்கி சற்று நின்று ''இன்னொரு நாள் உனக்கு அவகாசம் இருக்கும்போது வருகிறேன் ரமி, பேசலாம்.. நிறைய'' என்று கூறிவிட்டு வெளியேறிச் சென்றான்.

அதுவரை தயங்கிய கால்கள் துவண்டு அப்படியே தரையில் சரிந்தாள் ரமி.

அவன் வெளியேறிச் சென்றதும் ஓடோடி வந்து, ''அது யார் ரமி?'' என ஆவலாக வினவினாள் ரஜனி.

தாயிடம் மறைப்பது கடினம் என்று உணர்ந்து, ''கதிரின் அப்பா, கதிர் பிறக்கக் காரணம் ஆனவர், போதுமா?'' என்று போட்டு உடைத்துவிட்டு முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள் ரமி.

''எங்கே, எங்கே போனார்?''

''அய்யய்யோ வந்தவரிடம் பேசி வழி பண்ணிக் கொள்ளாமல் விரட்டி அடித்துவிட்டாயே அசடு. அவர் எங்கே? எங்கே போனார்?'' என்று வாசல் பக்கம் ஓட முயன்றாள் அன்னை.

தாயின் கையைப் பற்றி இழுத்து நிறுத்தினாள் ரமி. ''அவர் ஏற்கனவே திருமணம் ஆனவராய் இருப்பார் அம்மா'' என்றாள் மெல்லிய குரலில்.

''பின்னே நீ இப்படி சன்னியாசி ஆகிவிடுவாயா? அதுவும் இந்த வயதில்?'' என்று ஆற்றாமையோடு கேட்டாள் ரஜனி.

சட்டென மூண்ட ஆத்திரத்தில், ''பின்னே, சின்ன வீட்டுக்காரியாக வாழ வேண்டுமா?'' என்று சீறினாள் ரமி.

அடி விழுந்தது போலத் திகைப்புடன் வாய் அடைத்து நின்றாள் தாயார்.

பிறகு சற்று மனம் இரங்கி, ''அம்மா நமக்கு ஒரு காரியத்திற்காக ஒன்று செய்தேன், கொடுப்பதும் பெறு வதுமாக அந்தக் கணக்கு அவர் அளவில் அப்போதே முடிந்து விட்டது. மேலே மிச்சம் எச்சம் எல்லாம் நம் கணக்குதான். நம்... நம்முடையது மட்டும்தான்'' என்ற ரமி சட்டென கைகளுக்குள் முகம் புதைத்து விசித்து அழுதாள்.

* * *

அதே நேரத்தில், பானுமதியின் கிளினிக்கில் அவளை சந்தித்துப் பேசினாள் மணிமேகலை.

கதிர், கவுதமனுடைய பிள்ளை என்பதைக் கண்டு கொண்டதையும், அதனால் ரமி.. கவுதமன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருப்பதையும் பற்றிக் கூறினாள்.

ஆனால் பானுவின் முகத்தில் திருப்தியில்லை.

''முதலிலேயே இது பற்றி என்னிடம் பேசியிருந்தால் இதைத் தடுத்திருப்பேன் மணிமேகலை. ஏனெனில்



ரமியின் வாழ்வில் அப்போது என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும்'' என்றாள்.

மணியின் முகத்தில் பொறாமை படியக் கண்டு தொடர்ந்து, ''இந்தப் பொறாமைக்கு அவசியம் இல்லை. உன்னை விட நெருங்கிய தோழியாக என்னை எண்ணி ரமி எதையும் என்னிடம் பகிர்ந்து விடவில்லை. ஒரு நெருக்கடி வேளையில் திருமதி ராஜன்தான் என்னிடம் சொன்னார்கள்'' என்றாள் வறட்சியாக.

''அப்படி என்னதான் நடந்தது?''

''அது ரமியின் இரகசியம். நான் சொல்வதற்கு இல்லை. ஆனால் மேலே சொல்வதற்கும் ஒன்றும் இல்லை'' என்றாள் பானு முடிவாக.

''எனக்கு அப்படித் தோன்றவில்லை'' என்று கூறித் தன் காரணங்களையும் எடுத்துச் சொன்னாள் மணி மேகலை.

சிறிது நேரம் யோசித்து விட்டு ''பணம் படைத்தவ னாக இருந்தபோதும், இல்லத்துக்கு நன்மைகளைச் செய்ய முன் வந்தபோதும், ரமியின் வாழ்வில் மிஸ்டர் கவுதமன் விளையாடிய விதம் எனக்குத் தெரிந்து இருப்பதால் சொல்கிறேன். இது தேவையற்ற காரியம். மேலும் ரமிக்காக நிவாஸ் காத்திருக்கிறார்'' என்றாள் பானுமதி.

''நிவாஸா?'' மணிமேகலையின் முகத்தில் சட்டென இருள் படர்ந்தது. உடனேயே தெளிந்து ''ரமியை இன்னமும் உங்களுக்குத் தெரியவில்லை'' என்றாள் அழுத்தத்துடன்.

''ஓரளவு தெரிந்து இருப்பதால்தான் சஞ்சலமே.. ஆனால் தன் வாழ்வை எப்படி நடத்துவது என்று

ரமிதான் முடிவு செய்து கொள்ள வேண்டும். இதில் நீயோ நானோ தலையிடுவது சரியில்ல?'' என்று முடித்தாள் பானு.

அதே சமயத்தில் ''உங்களிடம் சற்று தனிமையில் பேச வேண்டுமே'' என்று சிவநாத்தை அணுகிக் கொண்டு இருந்தான் கவுதமன்.

வழக்கம்போல நல்லகத்தைக் காட்டலாமென்று நிவாஸ் அழைத்து வந்த ஒரு பணக்காரன் இந்த கவுதமன். விரைவில் போய்விடுவான் என்று ரமி ஆசைப்பட்டது போல நடக்கவில்லை.

மறுநாள் மாலையில் வேலை முடிந்து திரும்பிய ரமி. வாயில் அருகே அவனது காரைக் கண்டு நின்றாள்.

முன் யோசனையோடு அம்மாவையும் கதிரையும் வீட்டில் விட்டு வந்தது நலமாயிற்று என்று எண்ணியவளாய் ஓசையில்லாமல் ஆசிரமத்தின் பின் எல்லையைத் தாண்டி நடந்து ஆற்றங்கரை ஓரமாக அமர்ந்தாள்.

ஆனால் சற்று நேரத்தில் தன் அழைப்பினாலேயே அவளைத் திகைப்படையச் செய்துவிட்டு அவளருகே அமர்ந்தான் கவுதமன்.

''உன்னிடம் ஒன்று சொல்ல வந்தேன், ரமி.''

''நீங்கள் சொல்லிக் கேட்க எனக்கு எதுவும் இல்லை'' என்று எழ முயன்றாள் ரமி.

அவள் கையைப் பற்றி அழுத்தி, எழ முடியாமல் தடுத்து, ''நீயாக உட்கார்ந்து கேள், அல்லது நானே உன்னை உட்கார வைத்துச் சொல்லுகிறேன்'' என்றான் அவன் அழுத்தமாக.



பேசாமல் கையை உதறி விட்டுச் சற்று விலகி அமர்ந்தாள் ரமி.

''உன்னிடம் மன்னிப்புப் பெறவே வந்தேன் ரமி.''

வரண்ட பார்வையால் அவனை வெறித்தாள் அவள்.

''ரமி, நீ அன்று உன் தாயாருக்காக வந்தாய் என்று எனக்குத் தெரியாது'' என்றான் மெதுவாக.

அன்றையப் பேச்சை அவன் எடுக்கவும் ரமிக்கு அவமானத்தில் முகம் சிவந்தபோதும் ஆத்திரமும் வந்தது.

''பின்னே உங்கள் மேல் ஆசையில் ஓடிவந்தேன் என்று எண்ணினீர்களோ?'' என்று குத்தலாக வினவினாள்.

''அந்த அளவுக்கு தற்பெருமை எனக்கு இல்லை. ஆனால் நீ உன் வருங்காலக் கணவனுக்காக வந்தாய் என்று எண்ணித்தான்...''

அதிகரித்த ஆத்திரத்துடன் திரும்பி ''தாயின் கழுத்தில் கத்தியை வைப்பதை விட வருங்காலக் கணவன் கழுத்தில் கத்தியை வைப்பது எந்த வகையில் உயர்வானது?'' என்று சீறினாள் ரமி.

''அந்த வருங்காலக் கணவனின் தகுதியை உனக்கு உணர்த்திவிட, விரும்பினேன் ரமி. தன் வசதிக்காக தன் பெண்மையையே விற்கும் ஒருவனை அந்தப் பெண் புரிந்து கொண்டு விட வேண்டும் என்று எண்ணினேன். புரிந்து கொண்டு அவனை வெறுத்து ஒதுக்கி விட வேண்டும். அவனுக்கு இல்லாமல் போய்விட வேண்டும் என்று நினைத்தேன்.''

சீற்றம் மிகக் குறுக்கிட்டுப் பேசினாள் ரமி, ''அவனுக்கு இல்லாமல் போவதோடு யாருக்கும் இல்லாமல் நடு தெருவுக்குப் போய்விட... வேண்டும் என்று எண்ணி னீர்கள்...''

''இல்லை ரமி, தயவு பண்ணிப் புரிந்து கொள். நான் காயப்படுத்த முனைந்தது உன்னையல்ல, என்னை ஏய்த்த சுந்தரைத்தான் பழிவாங்க எண்ணினேன். என்னை ஏமாற்றிய ஒருவனின் காதலியை... வருங்கால மனைவியை என்னுடைய விளையாட்டுக் கருவியாக்கு வதே அவனுக்குச் சரியான தண்டனையாகும் என்று திட்டமிட்டே உன்னை நான்...''

''போதும்'' என்று வீறிட்டாள் ரமி.

அவன் விடாமல், ''சுந்தரின் வருங்கால மனைவி என்று முத்திரை குத்தப்பட்டவள் கன்னியாயிருப்பாள் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை'' என்றும் மேலும் தொடர்ந்து பேசினான்.

''சீ'' என்றாள் ரமி சீற்றத்துடன்.

''நெருப்பு என்றால் வாய் வெந்துவிடாது ரமி. சற்று பொறுமையுடனே கேள். ஏனெனில், இதையெல்லாம். சொல்லாமல், என்னால் விளக்க முடியாது. அதோடு இன்னொன்றையும் தெரிந்து கொள். ஒருநாள் உறவி னால் இந்தக் காலத்தில் யாரும் அழிந்து போவது இல்லை. நீ சுந்தரை வெறுத்து வேறு வாழ்வை அமைத்துக் கொள்வாய் என்று நினைத்தேனே தவிர, நீ வேறுவிதம் என்றும் அவனோடு உலகையே வெறுத்து விடுவாய் என்றும் எண்ணவே இல்லை...''

''அறிந்திருந்தால் இந்தப் பழிவாங்கும் படலமே நடந்திருக்காதோ?'' என்று கசப்புடன் சிரித்தாள் ரமி.



அவன் சற்று தயங்கவும், ''எதற்காக இந்தத் தன் நிலை விளக்கம்? நான் கேட்டேனா? என்னைப் பொறுத்த வரையில் அன்று உங்களிடம் ஒன்றை நாடி வந்தேன். விலையாக, விலையாக என்... ஒன்றைக் கொடுக்க வேண்டியிருந்தது. அவ்வளவுதான் விலை கொடுத்துப் பொருளை வாங்கிய பின் விற்றவனுக்கும் வாங்கியவ னுக்கும் என்ன தொடர்பு? எதுவும் இல்லை'' என்று கொட்டி முடித்தாள்.

''தொடர்பு இருக்கிறதே'' என்றான் அவன் அவளது முகத்தையே பார்த்து.

அவள் சட்டென பயந்து போனாள்.

''இல்லை இல்லை'' என்று பதட்டமாக மொழிந்து விட்டு அவசரமாக எழலானாள்.

அவன் மீண்டும் அவள் கையைப் பற்றி அவளைத் தடுத்து இருக்கிறது. அந்தத் தொடர்பும் நம் கதிர்' என்றாள் தெளிவாக.

## 23



''நம் கதிர்'' என்ற அந்த ஒரு வார்த்தையில் ரமி அப்படியே உறைந்து சில்லிட்டாள்.

ஒன்றும் செய்யத் தோன்றாமல் அவன் முகத்தையே பேந்த விழித்தாள்.

அவன் முகம் இளகக் கையை நீட்டி அவளது தோளை லேசாகத் தட்டி 'ரமி' என்று மெல்ல அழைத்தான்.

சட்டென உணர்வு வந்தாற்போல அவன் கையைத் தட்டி விட்டு, ''கதிர் என் மகன். அவன் என் மகன்'' என்று பதறினாள் ரமி.

கவுதமன் அமைதியாகச் சொன்னான்; ''ஒத்துக் கொள்ளுகிறேன். கூடவே அவன் என் மகன் என்பதும் உண்மையே, அதாவது நம் குழந்தை.''

''கதிர் என் பிள்ளை என்பதற்கு நிரூபணம் இருக் கிறது. ஆனால் உங்கள் பிள்ளைதான் என்று என்ன நிச்சயம்?'' என்று குரோதத்துடன் கேட்டாள் ரமி.

''பிறகு ஒருநாள் ஞாபகப்படுத்து. இரண்டு வயதில் எடுத்த என் புகைப்படத்தைக் காட்டுகிறேன்'' என்றான் அவன் முறுவலோடு.

''உலகத்தில் ஒரே ஜாடையில் ஏழு பேர் இருப்பார் களாம்.''

''இருக்கலாம். ஆனால் என்னைப் போலவே மச்சம் இராது.''

''ஏன் உங்களைப் போல மச்சம் கூட...'' என்று பிடிவாதத்துடன் மறுத்துப் பேசினாள் ரமி.

கவுதமன் சட்டென்று பொறுமை இழந்தவன் போல் ''இந்த வீண் பேச்சு ஏன் ரமி? அவன் என் மகன் தான் என்று எனக்குத் தெரியும். உனக்கும் தெரியும். இப்போது மேலே பேசலாமா'' என்றான்.

வலைப்பட்ட பிராணிபோல ரமி மீண்டும் விழித்தாள்.

நல்லகத்தின் பின்புறமாக அமைந்து இருந்த நோயாளி அறைப்பக்கம் நிவாஸ் செல்வது தெரிந்தது.

''நிவாஸ், என்னைத் தேடித்தானே வந்தீர்கள்? இதோ வருகிறேன்'' என்று உரத்த குரலில் மொழிந்தவள்



கவுதமன் தடுக்குமுன் விரைந்து சென்று நிவாஸுடன் சேர்ந்து கொண்டாள்.

அவள் நடை தடுமாறுவதையும் உடம்பு பதறுவதை யும் நிவாஸ் கீழ்க் கண்ணால் கவனித்தான்.

அவளாக ஏதும் சொல்லுவாளோ என்று அவன் எதிர் பார்த்தது நடக்கவில்லை.

அப்போதைக்கு சமாளித்துக் கொண்ட போதும் ரமிக்குப் பதட்டம் அடங்கவில்லை.

கதிர் தன் வித்து என்பதைக் கவுதமன் கண்டு கொண் டான், சரிதான்.

ஆனால் கதைகளில் வரும் வில்லனைப் போல் பிள் ளையை மறுக்காமல் என் மகன் என்று உரிமை பாராட்டு கிறானே?

எண்ணும்போதே நெஞ்சு உலர்ந்தது அவளுக்கு.

ஒருவேளை முன்பு அவளது அன்னையின் கழுத்தில் கத்தியை வைத்து அடைந்ததை இன்று பிள்ளையை சாக்கிட்டுப் பெற முயல்கிறானோ?

''மீண்டும் வைத்துக் கொள்வோமா?'' என்று ஆசை யாகக் கேட்டவன் தானே.

கவுதமனின் அணுகலைத் தடுக்க நிவாஸைத் துணை கொண்டாள் ரமி.

ஆனால், இரு தினங்கள் உற்சாகமாக அவளுடன் நடந்த நிவாஸ். மூன்றாம் நாள் ''மணிமேகலைக்கு ஸ்ரீரங்கம் கோயிலைப் பார்க்க வேண்டுமாம். அழைத்துச் செல்லப் போகிறேன்'' என்று விலகினான்.

அப்புறம் திருவானைக்கோயில் பிறகு கல்லணை தஞ்சாவூர்...

திகைப்பும் வருத்தமுமாகப் பார்த்தவளிடம் ''நெருப்புக் கோழி மாதிரி தரைக்குள் தலையைப் புதைத்துக் கொள்ளுவதால் பிரச்சினைகள் தீராது ரமி. அவரவர் போராட்டத்தை அவரவர் போராடாமல் எத்தனை நாள் பிறர் பின்னே ஒளிய முடியும்'' என்று பூடகமாகப் பேசி விட்டுப் போனான்.

அவன் புரிந்து கொண்டான் என்பதைக் கண்டதும் ரமிக்கு அவமானமாக இருந்தது.

ஆயினும் இரு தினங்களாக மணியின் பார்வை நிவாஸின் மீது படியும் விதத்தையும் ரமி கவனித்திருந் தாள்.

இப்படியே நிவாஸின் மனம் மாறி மணிமேகலை யுடன் இணைவதும் நல்லதுதான்.

சரளா அத்தை தகராறு செய்யக்கூடும்.

ஆனால் மணிமேகலையுடைய தாத்தாவும் சளைத்தவர் அல்ல. மணியின் விருப்பம் இது என்று கண்டு விட்டால் திருமணப் பத்திரிகையையே மருமகளுக்கு அனுப்பி விடுவார்.

நல்லபடியாக நடக்கட்டும் என்று நிறைவோடு நினைத்தாள்.

ஆனால் அவளுடைய சொந்தப் பிரச்சினை?

இனி நிவாஸின் பின்னே ஒளிய இயலாதே.

மீண்டும் கல் விழுந்த குட்டைபோல மனது கலங் கியது. குழம்பியது.

'மனம் தெளிவுற மலைக்குப் போ' என்பார்கள்.

மிகவும் மனது உளையும் சமயங்களில் ரமியும் மலைக் கோட்டைப் பிள்ளையாரைத் தரிசித்துவிட்டுப்



பாதையிலிருந்து சற்று விலகி அமர்ந்திருந்து விட்டு வருவது உண்டு.

சுற்றியுள்ள பசுமையையும் தூரத்து நதியையும் பார்த்தபடி சிலுசிலுக்கும் லேசான குளிர் காற்றில் உட் கார்ந்திருந்து விட்டு வந்தால் மனம் இலேசாவது அவள் அனுபவம்.

அந்த உயரத்தில் அமர்ந்து பார்க்கும்போது உலகத் தோடு ஒட்டிய பிரச்னைகள் சின்னதாகித் தெரிவது வழக்கம்.

பானுவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அன்று மாலை முன்னதாகவே திரும்பியவர்கள் வழக்கம்போல மலையேறி யோசித்தாள்.

யோசிக்க யோசிக்க கவுதமனிடம் அஞ்சுவதே முட்டாள் தனம் என்று தோன்றியது.

கதிரைப் பறித்துக் கொண்டு விடுவானோ என்று பயந்ததெல்லாம் பேதமை.

கதிர் தன் பிள்ளை என்று அவனால் எப்படி நிரூபிக்க முடியும்?

அவளை அவன் திருமணமா செய்திருந்தான், அவளுடைய மகன் தன் பிள்ளை என்பதற்கு?

அப்படியிருக்க கதிர் மீது அவனுக்கு எவ்வித உரிமை யும் இராது.

பின் ஏன் அவனிடம் பயப்பட வேண்டும்?

பழைய நினைவுகளில் மனம் அலைப்புறுவதைத் தடுக்க இயலாவிட்டாலும் மகனைப் பற்றிய பயம் மறைந்து விடவும் சற்றுத் திடத்துடனே திரும்பி வந்தாள் ரமி.

அன்று ஓரளவு நிம்மதியுடன் உறங்கவும் செய்தாள்.

மறுநாள் மதிய இடைவேளையின்போது பானுவிட மிருந்து ரமிக்கு அழைப்பு வந்தது.

அங்கே சென்ற பிறகுதான் மற்ற ஆசிரியைகள் மற்றும் அலுவலர்களும் அங்கிருப்பதும் நடுநாயகமாகக் கவுதமன் வீற்று இருப்பதும் தெரிந்தது.

நல்லகத்தில் கவுதமனின் சுதந்திரமான நடமாட்டத் திற்கான காரணமும் அப்போது புரிய வந்தது.

நல்லகத்திற்கு உதவக்கூடிய ஒரு பெரிய பணக் காரனைக் கண்டு பேசப்போவதாக நிவாஸ் சொல்லிச் சென்று, பேசி வந்த பணக்காரன் கவுதமனே என்பதும் நேரில் நல்லகத்தைப் பார்வையிட வந்திருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

நல்லகத்துக்குத் தேவைப்படும் உதவிகளை எல்லாம் அறிந்து கொள்வதற்காக கவுதமன் கூட்டிய கூட்டம் என்பதும் கூடத்தான்.

விஷயத்தை எடுத்துச் சொல்லிவிட்டு தன் கிளி னிக்கை நாடி பானு பறந்தாள்.

இருந்து சொல்லுவோர் சொல்லட்டும் என்று முதலில் சென்றுவிட ரமி முயன்றாள்.

ஆனால் அதை ஊகித்தவன் போன்று இயல்பாக நடந்து கொண்டே பேசுவது போலக் கதவருகே சென்று அங்கேயே நின்று மற்றவர்களிடம் பேசி அனுப்பினான் கவுதமன்.

கால் மாற்றி மாற்றி நின்று ரமி பொறுமை இழந்த போது, 'ரமி' என்றான் குழைவாக.



திடுக்கிட்டு நிமிர்ந்தபோது மற்றவர்கள் எல்லாம் சென்றிருக்கக் கண்டாள்.

''எனக்கு நேரமாகிறது'' என்றாள் மொட்டையாக.

''உன்னிடம் கொஞ்சம் நிதானமாகப்பேச வேண்டும் ரமி. உன் வீட்டிற்கு அடிக்கடி வந்து, சூழ இருப்போர் பார்வையில் உன்னைத் தாழ்த்த எனக்கு விருப்பம் இல்லை அதனால்.''

''ஆக, ஆசிரமத்துக்கு உதவுவது மெய்யில்லை போலிருக்கிறது'' என்றாள் ஏளனமாக.

''சத்தியம் ரமி'' என்றான் அவன் தீவிரத்துடன் ''என் தாத்தா காலத்தில் இருந்தே இந்தப் பழக்கம் இருந்து வருகிறது. தொழில் என்று வரும்போது எத்தனையோ தப்புத் தவறுகள் செய்கிறோம்; அதற்குப் பிராயச்சித்த மாக என்று...''

''தொழில் மட்டும்தானா?'' என்று முணுமுணுத்தாள் ரமி.

''என்ன சொன்னாய்?'' என்று அவன் விசாரிக்கவும் அவளுக்கு வேறு ஒரு நினைவு வந்தது.

ஆசிரமக் குழந்தைகள் பாயில் படுப்பதால் பானு தன் கட்டிலை நோயாளி அறைக்குக் கொடுத்து விட்டுத் தரையிலேயே படுத்து வந்தாள்.

அதைச் சொல்லி, ''முடிந்தால் படுத்து உறங்க ஒரு பெரிய அறை கட்டி, பிள்ளைகளுக்கு எல்லாம் கட்டிலும் வாங்கிக் கொடுக்கலாமே'' என்றாள் யாரிடமோ சொல்வது போல.

''கட்டாயம் செய்கிறேன், நீ சொல்லி விட்டாய் அல்லவா?'' என்று புன்னகை செய்தான் அவன்.

''நான் சொன்னதாலா'' என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு, ''அப்படியானால் ஆசிரமம் முழுவதையும் பக்காவாகக் கட்டி ஏசி பண்ணலாமே'' என்றாள் பழைய குரலிலேயே.

அவன் லேசாகச் சிரித்துவிட்டு, ''நீ சொல்வதற்காக என்றே நிறையச் செய்வேன் ரமி. ஆனால் அதற்கும் அளவு இருக்கிறது'' என்று சொல்லவும் ரமிக்கு தன் தந்தையின் நினைவு வந்தது.

அவர் இப்படி நிறுத்தியிருந்தால்...

நினைத்த மறுகணமே கவுதமனையும் தந்தையையும் ஒப்பு நோக்கியதற்காக தன்னையே கடிந்து கொண்டாள் ரமி.

அவர் எங்கே, இவன் எங்கே?

அம்மாவிடம் அப்பா கொண்டிருந்தது காதல்! வெறும் காமம் அன்று.

''ஆசிரமம் விஷயம் முடிந்தது அல்லவா, ரமி? இனி நம் கதிர்?'' என்று பேசத் தொடங்கினான் கவுதமன்.

''என் கதிர்?'' என்றாள் விறைப்பாக.

அதைப் பொருட்படுத்தாதவன் போல ''அவனைச் சிறப்பாக வளர்க்க...'' என்று தொடர்ந்தான் அவன்.

கதிரை வளர்க்கப் பணம் தர முன் வருகிறானோ என்று நினைத்தாள் ரமி.

அவமானத்தால் முகம் எரிய, ''என் மகனை வளர்க்க என்னால் முடியும். உங்கள் பணம் தேவையில்லை'' என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றாள்.



''நில் ரமி, என் பேச்சை முழுமையாகக் கேட்டு விட்டுப் போ'' என்று அவள் கையைப் பற்றி நிறுத்தினான் அவன்.

அவன் தொட்ட மாத்திரத்தில் மிகுந்த பிரயாசைப் பட்டு வரவழைத்திருந்த அமைதி மறைந்து உடல் பதற, ''சீ விடுங்கள்!'' என்று உதறிவிட்டு விரைந்தாள் ரமி.

ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்தபோதுதான் பின்னோடு அவனும் வந்திருப்பது தெரிந்தது.

''போங்கள், போய்விடுங்கள். இங்கே ஏன் வந்தீர்கள்'' என்று வெறி கொண்டவள் போலக் கத்தினாள்.

''வேறு இடத்தில் பேச நீ விடவில்லையே!'' என்று லேசான முறுவலுடன் அவளை நெருங்கினான் கவுதமன்.

''எனக்கு என் பிள்ளை வேண்டும்'' என்று தன்னை நோக்கித் தாவி வந்து கதிரைத் தூக்கிக் கொண்டான்.

''அப்பா...'' என்று கெஞ்சிய மழலைக் குரலைக் கேட்டு நம்பமாட்டாமல் விழித்தாள் ரமி.

அவளது திகைப்பைக் கண்டு, ''நான் தான் கற்றுக் கொடுத்தேன். மணியை விட்டு இவனைத் தூக்கி வரச் செய்து காலை முழுவதும் என்னுடனேயே வைத்திருந் தேன்'' என்று பிள்ளையைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாட்டுக் காட்டினான்.

குழந்தையின் தந்தைப் பாசம் கடைசித் துருப்பாகி விட அழுதபடி உள்ளே ஓடினாள் ரமி.

பின் தொடர முனைந்த கவுதமன் அரவம் கேட்டுத் திரும்பினான்.

''அம்மம்மா'' என்று சிரித்தான் சிறுவன்.

''பூப்போன்ற என் மகளை இந்த கதி ஆக்கினாயே'' என்ற பாவனையுடன் நின்ற ரமியின் தாயிடம் புன்னகை செய்து மகனை நீட்டினான் கவுதமன்.

''வைத்துக் கொள்ளுங்கள் நான் ரமியுடன் பேச வேண்டும்'' என்றான்.

பேரனை வாங்கிய ரஜனி ''அவள் மிகவும் நொந்து போயிருக்கிறாள். மீண்டும் கண்ணீர் விடச் செய்யா தீர்கள்'' என்றாள் சிறு வெறுப்புடன்.

''கவலைப்படாதீர்கள்'' என்று கூறி உள்ளே சென்றான் அவன்.

அங்கே ரமி கண்ணீரைச் சமாளித்து முகத்தைத் துடைத்துக் கொண்டு நின்றாள்.

''கதிர் உங்கள் மகன் என்பதற்கு ஆதாரப் பூர்வமாக என்ன சான்று இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''கதிரின் பிறப்பு ஏட்டில் தந்தையின் பெயர் கவுதமன் என்று குறிப்பிட்டு, சான்றை அளித்திருப்பவளே நீதான் ரமி'' என்றான் அவன் சிறு முறுவலுடன்.

திகைத்துவிட்டு, ''அது! அந்தக் கவுதமன் வேறாக இருக்கலாம்'' என்றாள் ரமி.

''விதண்டாவாதமா'' என்று சிரித்தான் அவன். ''ஜாடை, மச்சம், இரத்தப் பரிசோதனை... இத்தனை இருக்கும்போது இன்னமும் வேறென்ன வேண்டும்? மேலும் பத்து ரூபாய்க்கு உன் அத்தான் எத்தனை கோர்ட் ஏறி சாட்சி சொல்லுவான்?''

ரமி பயந்து போனாள்.



தன் வாயாலும் அவளது கூற்றை ஒப்புவதைக் கவனியாமல் ''பிள்ளை வேண்டுமானால் வேறு பிள்ளை இல்லையா? என் ஒரே செல்வத்தைப் பிடுங்கப் பார்க்கிறீர்களே'' என்றாள் தன் வேதனையை அவளிடம் காட்டாமல் மறைக்க முயன்றபடி.

''வேறு பிள்ளை இல்லையே ரமி'' என்றான் அவன் இலகுவாக.

கதிரைத் தன்னிடமிருந்து அவன் பிரித்தே விடப் போகிறான் என்று கதிகலங்கிப் போனாள்.

எப்படியும் அதைத் தவிர்க்கும் முயற்சியாக, ''ப்ளீஸ் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். வந்து... த... தயவு செய்து எங்களைப் பழைய மாதிரியே விட்டு விட்டுப் போய் விடுங்களேன்... ப்ளீஸ்...'' என்று கெஞ்சினாள்.

குனிந்து அவளையே பார்த்த அவன் முகம் மிருதுவாயிற்று. கண்களில் கனிவுடன், ''கெஞ்சுவது உனக்குப் பழக்கம் இல்லை என்று தோன்றுகிறது. ஏன் அன்று கூட நீ அந்தப் பத்திரங்களைக் கெஞ்சிப் பெற முயலவில்லை அல்லவா? ம்! ரமி, நீ கேட்பதை கொடுத்து விடத்தான் ஆசையாக இருக்கிறது. ஆனால் நமது பிற்கால நலனை எண்ணி மறுக்கவும் வேண்டியிருக்கிறது. மன்னித்து விடு'' என்றான் மென்மையாக.

ரமியின் முகத்தில் கலவரம் தெரியவும், ''குழந்தையையும் உன்னையும் பிரிக்கப் போவது இல்லை ரமி. எனக்கு என் மகனின் தாயும் வேண்டும்'' என்றான் முறுவலோடு.

ஜிவ்வென்று முகம் சிவக்க, எங்களை ''நிம்மதியாக வாழ விட/மாட்டீர்களா?'' என்றாள் ரமி வெறுப்புடன்.

அவன் அவளை மிகவும் நெருங்கி, ''என்னை மணந்து கொள்ளத்தான் கேட்கிறேன். வேறு தவறான கருத்தில் பேசவில்லை?'' என்றான் மிருதுவாக.

அந்த மாதிரி வந்தவளை அவன் மணக்கவும் துணியக் காரணம்?

''மீண்டும் வைத்துக் கொள்வோமா?'' என்று கேட்டானே, அந்த இன்பமான அனுபவமா?

அவனைக் காயப்படுத்தி விடும் வெறியுடன் ''உங்களால் பிள்ளை பெற்றவர்களை எல்லாம் மணப்பது என்றால் சட்டம் இடம் தராதே'' என்று குத்தினாள் குரோதத்துடன்.

அவனது முறுவல் மறைந்த போதும் நிதானமாகவே, ''இருக்கலாம் ஆனால் என்னால் கன்னிமை நீங்கியவர்களை எல்லாம் மணப்பது என்றால் சட்டம் தாராளமாக இடம் தரும். ஏனெனில் அப்படிப்பட்டவள் நீ மட்டும்தான். அதனால்தான் கேட்கிறேன்'' என்றான் அழுத்தத்துடன்.

அவனது நிதானமும் அழுத்தமும்கூட அவளது நெஞ்சைப் படபடக்க வைத்தன.

தன் பதட்டத்தை மறைக்க முயன்றபடி, ''இந்த உலகத்திலேயே நீங்கள் ஒருவர்தான் ஆண் மகன் என்ற நிலை வந்தாலும் நான் உங்களை மணக்கப் போவது இல்லை!'' என்று பதில் அளித்தாள்.

## 24



ரமியின் மூச்சிரைப்பையும் பதட்டத்தையும் சில கணங்கள் கவனித்தான் கவுதமன்.



''பிறகு ஒன்று தெரியுமா ரமி? இந்த உலகத்தில் உள்ள அத்தனை ஆண்களும் வந்து வரிசையாக நின்றாலும் நீ என்னைத் தவிர யாரையும் மணக்க மாட்டாய்'' என்றான் அழுத்தத்துடன்.

''கர்வமா? நான் நினைத்தால் நிவாஸை.''

அவளை மிக மிக நெருங்கி, ''ஆனால் நினைப்பது தான் கடினம் இல்லையா?'' என்றான் சன்னக் குரலில் அவன்.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு அவசரமாக விலகினாள் ரமி.

அவனது அருகாமையும் அவன் பேச்சில் இருந்த உண்மையும் சோந்து அவளைக் குழப்பின.

அவனுக்குப் பதில் கூறும் வகையறியாமல் பேச்சை அவன் புறம் திருப்பி, ''உங்களுக்கு வேறு பெண்களே கிடைக்கவில்லையாக்கும்?'' என்றாள் குத்தலாக.

அவனது உதடுகள் ஏளனமாக மடிந்தன. ''பெண்களுக்கு என்ன பஞ்சம்? விரல் அசைத்தால் ஓடி வருவார்கள்'' என்றான் அலட்சியமாக.

''மணியை மறந்து பேசாதீர்கள். அவள் உங்களை வெறுத்து வந்தவள்.''

''அவளுடைய அம்மா தந்த தகவல் வேறே.''

''சரளா அத்தையின் பேச்சை நம்புகிறவர் என்றால் நீங்கள் சொந்த சாமர்த்தியத்தில் சம்பாதிப்பவர் இல்லை'' என்றாள் ரமி துடுக்காக.

''நம்பாமல்தான்... சரி அது போகட்டும் அவர்களைப் பற்றி பேசுவதற்காக நான் வரவில்லை.''

''உங்களுடைய எந்தப் பேச்சையும் கேட்க நான் தயாராக இல்லை.''

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''அமைதியாக யோசனை செய்து பார் ரமி. எல்லா விதத்திலும் என் முடிவு தான் சரி என்பது அப்போது புரியும். ஒன்று மட்டும் நினைவில் வை. கதிரும் நீயும் இல்லாமல் இந்தத் திருச்சியை விட்டு நான் செல்லப் போவது இல்லை. நான் பிறகு, வருகிறேன்.''

அவன் சென்ற பிறகே ரமிக்குத் தாராளமாக மூச்சு விட முடிந்தது.

ஆனால் அடுத்து ரஜனி தொடங்கினாள்.

''அவரைப் பார்த்தால் கெட்டவராகவே தெரிய வில்லை. அவராக வந்து கேட்கிறபோது ஏன் இந்த முரட்டுத்தனம்?'' என்று சினத்துடன் கேட்டாள்.

''எனக்குப் பிடிக்கவில்லை என்றால் விடுங்களேன்'' என்று எரிந்து விழுந்தாள் மகள்.

ரஜனியோ அவளுக்கும் மேலாகக் குரலை உயர்த்தி 'அதுதான் ஏன் என்று கேட்கிறேன். உன் சிநேகிதி அதுதான் அந்த டாக்டரோட ஆசை எனக்குத் தெரியாது என்று நினைக்காதே. நான் உன்னை அந்த மாதிரி வளர்க்கவில்லை. தான் செத்த பிறகுதான் நீ நிவாஸைக் கட்டிக் கொள்ள முடியும்'' என்றாள் கோபமாக.

''கடவுளே! என்னைச் சும்மா விடுங்களேன்'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் ரமி.

மகள் இம்மாதிரி உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறவள் அல்ல என்பதால் ரஜினி திகைத்துப் போனாள்.

''ஏண்டாம்மா?'' என்றாள் உருகிப் போய்.



''அம்மா.. உங்களுக்கு என் அவமானம் புரியவில் லையா? நான் அவரிடம் அறியாமல் பழகி ஏமாற வில்லை. உணர்ச்சி வசத்தில் நிலை பிறழவும் இல்லை. அவராக என்னை ஏமாற்றவோ பலவந்தம் செய்யவோ இல்லை. என்னை நானாக விற்று விட்டு இன்று கல் யாணம் என்று கவுரவப் போர்வையில் மறைந்து கொள்ள முடியுமா? மேலும் மேலும்...'' என்று தடுமாறி நிறுத்தி னாள் ரமி.

அன்றைய நெகிழ்வைத் தாயிடம் கூட எப்படிச் சொல் வது?

அப்போதைக்கு ரமியால் தாயின் வாயை அடக்க முடிந்தது.

ஆனால் எல்லோருமே தனக்கு எதிராக வேலை செய்வது போலத்தான் அவளுக்குத் தோன்றியது.

தன் கதை முழுமையும் தெரிந்த பானுவேனும் தன் பக்கம் இருப்பாள் என்று நினைத்த ரமி அதிலும் ஏமாந்தாள்.

''உனக்காக நான் நிறையத் தியாகங்கள் செய்வேன் ரமி. ஆனால், ஆசிரமப் பிள்ளைகளுக்காக உயிரையே விட என்னால் முடியும். குளிர் காலங்களில் என் பிள்ளைகள் பாயில் சுருண்டு கிடப்பதைப் பார்த்து எப்படி நொந்திருக்கிறேன் தெரியுமா? அந்தத் துன்பத்தை நீக்க ஒரு கொலைகாரன் முன் வந்தால்கூட வரவேற்கவே செய்வேன். மேலும் மிஸ்டர் கவுதமன் உன்னைத் தூக்கிச் சென்று நாசப்படுத்தவில்லையே. இப்போதும் நல்லபடியாக மணம் புரியத்தானே விரும்புகிறார்'' என்று ஒதுங்கி விட்டாள்.

மணிமேகலையோ ரமியின் திருமணம் முடிந்து அவளுக்கு நல்வாழ்வு அமைந்துவிட்டது போலக் குதூ கலித்தாள்.

நிவாஸ் ஒத்து ஊதினான்.

பிறகு வருவதாகச் சொன்ன கவுதமனும் விடவில்லை. பலப் பல சொல்லி வாதாடினான்.

கடைசியாக, ''என் மகனுக்கு உயர்ந்த கல்வி, நிறைந்த செல்வம், சமூகத்தில் நல்ல அந்தஸ்து எல்லாவற்றையும் நாம் இருவரும் சேர்ந்தால்தான் கொடுக்க முடியும். தகப்பன் இல்லாத பிள்ளை என்ற அவச் சொல் தவிர அவனுக்கு உன்னால் தனியாக எதைக் கொடுக்க முடியும்?'' என்று மடக்கியபோது அவளால் பதில் பேச முடியவில்லை.

மகன் கதிரோ, விளையாட்டுச் சாமான் கடையையே தனக்கு வாங்கி அளித்த தந்தையிடம் ''அப்பா... அப்பா...'' என்று பைத்தியமாகி நின்றான். அவனை எப்படித் தகப்பனிடமிருந்து இனி பிரிப்பது?

கவுதமனையே மணந்து கொண்டு விடலாமா என்று கூட ரமிக்கு ஒரு தரம் தோன்றியது.

பழைய துயரங்களை எல்லாம் அன்று அவனது கரங்களில் மறந்தது அந்த எண்ணத்தை அசை போட வைத்தது.

ஆனால் பின்னர் அவளைப் பொசுக்கிய அவமானத் தீயும் நெஞ்சில் பசுமையாக இருந்ததே! எப்படி முடியும்?

இவள் ஒருபுறம் ஒதுங்கி ஓடத் தயார் வேறு முடிவு எடுத்தாள்.

மகளுக்கு மேலே குரலை உயர்த்தினாள்.

தைரியமாக முன் வந்து திருமண ஏற்பாடு செய்யும் படி கவுதமனிடம் கூறினாள்.



மறுத்த மகளிடம், ''இந்த முடிவைத் தடுப்பது என்றால் முதலில் என்னைக் கொன்றுவிடு'' என்று கத்தி வாயை அடைத்தாள்.

கோவிலில் திருமணம் அது இது என்று ஏற்பாடு நடக்க நடக்க ரமிக்கு நெஞ்சு பதறியது.

அன்று 'என்னைத் தவிர வேறு யாரையும் மணக்க மாட்டாய்' என்று எவ்வளவு கர்வத்துடன் கூறினான்!

பெண்களிடம் மதிப்பு இல்லாதவன்.

அதுவும் அவளிடம் அணுவளவும் அற்றவன்.

இவனிடம் வாழும் வாழ்வு எப்படி இருக்கும்?

அன்று அந்த நிர்ப்பந்தமான நிலைமையிலும் இளகிய மேனி இன்னும் இழையத்தானே செய்யும்?

அந்த நேரத்தில் அவனது கடினமான உதடுகள் எப்படி ஏளனமாக வளையக் கூடும் என்பதை எண்ணிப் பார்க்கையில் அவளுக்கு நெஞ்சு கூசியது.

அந்த அவமானத்தை நிச்சயமாக அனுபவிக்க முடியாது.

அதைவிட....

ரமி வெகுவாக யோசித்தாள்.

கதிரைக் கவுதமன் கைவிட மாட்டான்.

மகனை வளர்க்கவென்று தாயாரையும் அழைத்துக் கொள்ளுவான்.

இல்லாவிட்டால் ரஜனியைப் பானு அக்காள் பார்த்துக் கொள்ளுவாள்.

யாரும் அறியாமல் மறைந்து விட்டால் யாருக்கும் இழப்பு இல்லை. அவளுக்கு அவமானமும் இராது.

யோசனையாக நோக்கிய தாயின் பார்வையில் படாமல் கொஞ்சம் உடைகளை எடுத்து வைத்தாள்.

நள்ளிரவில் தாயும் பிள்ளையும் உறங்கிய பிறகு மெல்ல வீட்டில் இருந்து வெளியேறினாள்.

சந்தடியே இல்லாமல் ஓய்ந்த சாலை உள்ளூரச் சிலிர்ப்பை உண்டாக்கியது.

சற்றுத் தயங்கியவள் துணிவை வரவழைத்துக் கொண்டு மேலே நடந்தாள்.

திருப்பத்தில் நின்றிருந்த கார் ஒன்று அவள் அதைத் தாண்டிச் சென்ற சில நிமிடங்களில் உயிர் பெற்று அவளை தொடரலாயிற்று.

சமாளித்துப் பார்த்து முடியாமல் நெஞ்சு முழுமைக் கும் திகில் பரவி அவள் ஓடத் தொடங்கியபோது அவளை தாண்டிச் சென்று வழி மறித்தாற்போல வண்டியை நிறுத்தி விட்டு கவுதமன் இறங்கினான்.

''மீண்டும் ஓட்டமா?'' என்று கேலிக் குரலில் கேட்டான்.

யாரோ காவாலி என்று பயந்து போயிருந்த ரமிக்கு இப்போது ஆத்திரம் பொங்கவே உறுத்து விழித்தாள்.

''இந்த முழி நன்றாயில்லை காரில் ஏறு,'' என்றான் அவன் வெகு சாதாரணமாக.

''வழியை விடுங்கள்'' என்றாள் அவள் அதட்டலாக.

''வழியை விட்டு விலகி நிற்பதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைத் தொடர வேண்டியது இல்லை. காரில் ஏறு'' என்று அவனும் அதட்டினான்.

''முடியாது'' என்று உரைத்த அவளைப் பிடித்துக் காருக்குள் தள்ளிக் கதவை மூடிவிட்டுத் தானும் ஏறிக் காரை எடுத்தான்.



அவனது வீட்டின் முன்னே காரை நிறுத்தினான்.

ரமி இறங்கி வீட்டினுள் செல்லவும் மறுத்தாள்.

''இதோ பார் ரமி. நாளை இந்த வீட்டின் எஜமானியாக வரவேண்டியவள் இன்று தகராறு செய்து வேலைக் காரர்களை எழுப்பி அவர்கள் முன்னிலையில் உன்னை நீயே தாழ்த்திக் கொள்வது என்றால் அது உன் விருப்பம்'' என்று தோளைக் குலுக்கியவன் குனிந்து அவளை இலகுவாகத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

அவன் எச்சரித்தது போல வேலையாட்களை எழுப்ப வெட்கமற்று, சத்தமின்றித் திமிறிப் பார்த்தாள் ரமி.

கொஞ்சமும் சட்டை பண்ணாமல் ஒரு பெரிய அறையினுள் சென்று அவளைத் தரையில் விட்டுக் கதவைத் தாளிட்டான் அவன்.

அறையை ஒரு வேகப் பார்வையால் அளந்த ரமி திகைத்தாள்.

''என்ன இது?'' என்று கோபமாக அதட்டினாள்.

''ஆஸ்திக்கு மகன் மட்டும் போதுமா? ஆசைக்கு ஒரு மகள் வேண்டாமா?'' என்று கேலியாக மொழிந்துவிட்டு ''முன்பு என் மகனைத் தாங்கிக் கொண்டு ஓடினாய். இப்போது என் மகளைச் சுமந்து கொண்டு போ'' என்று அவளை நெருங்கினான்.

''சும்மா மிரட்டாதீர்கள்'' என்று தன் பயத்தை மறைத்து அலட்சியமாகப் பேச முயன்றாள் ரமி.

''முட்டாள்தனமாக பிடிவாதத்துக்கும் ஓர் அளவு வேண்டும் ரமி. என்ன சொன்னாலும் முரட்டடியாகப் புரிந்து கொள்ள மறுத்தால்... பேச்சு மொழி புரியா விட் டாலும் இந்த மொழியாவது புரிகிறதா என்று பார்க்க லாம்'' என்று கூறி அவளை இழுத்து அணைத்தான்.

ரமி முதலில் வெகுவாகத் திமிறினாள்.

ஆனால், பிறகு மெல்ல மெல்ல அவன் கைகளில் தன் உடல் குழையத் தொடங்கவும் அவமானம் தாளாமல் கண்ணீர் விடத் தொடங்கினாள்.

கண்ணீரை உணர்ந்ததும் அவளை விட்டு விலகினான் கவுதமன்.

அவள் விசித்து அழுவதை சற்று நேரம் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, ''இவ்வளவு வெறுப்பாக இருந்தால் திருமணத்தை நிறுத்திவிடலாம் ரமி. நானும் போய் விடுகிறேன் நீ நிம்மதியாக இரு'' என்றான் உணர்ச்சியத் துடைத்த குரலில்.

நீர் வடியும் கண்களோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள் ரமி.

''மெய் ரமி, நீ... நீ... கண்ணீர் விட்டால் என்னால் தாங்க முடியவில்லை. உன் விருப்பம் எதுவானாலும் அதன்படி நடந்து கொள்கிறேன். நீ அழாதே'' என்ற கவுதமன் சட்டென முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான்.

அவனது தோள்கள் விறைத்திருப்பதையும் பின்னே கோத்திருந்த கை முஷ்டிகள் இறுகி இருப்பதையும் அவனது வார்த்தைகளைக் கேட்டபோது உண்டான அதே ஆச்சரியத்துடன் கண்டாள் ரமி.

அவனும் வருந்துகிறான்! வேதனையோடு இருக்கிறான்!

அவளுடைய கண்ணீரை நிறுத்துவதற்காகத் திருமணத்தையே நிறுத்திவிடலாம் என்கிறானே?

வெறும் சதை வெறி கொண்டவன் அப்படிச் செய்வானா?



அவளுடைய அமைதிக்காக விலகிப் போய் விடுவதாகவும் கூறுகிறானே!

அப்படியானால் அவளது மேனியை விட மனதை அவன் உயர்வாக மதிக்கிறான் என்பதுதானே பொருள்?

அவன் முகத்தில் தேடிய பதில் கிடைத்தபோது போல ரமியின் கண்ணீர் நின்று மெல்ல மெல்ல முகம் தெளிந்தது.

மெல்ல அவனை அணுகி அவன் கையைத் தொட்டு இறுகியிருந்த விரல்களைப் பிரிக்கலானாள்.

அவன் மின்னல் விரைவுடன் நெருங்கி அவளை அணைத்துக் கொண்டான்.

இந்த அணைப்பில் ரமியின் மனம் அமைதி அடைந்தது.

ஆயினும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருந்தனவே.

நிமிர்ந்து அவன் முகத்தை ஒரு கேள்வியுடன் நோக்கினாள்.

புரிந்து கொண்டவனாக மெல்லிய முறுவலுடன், அன்றைக்கு இரு தினங்கள் கழித்து உன்னைத் தேடி உன் வீட்டுக்குப் போனேன்'' என்று தொடங்கினான் கவுதமன்.

ரமியின் உடம்பு விறைப்பது உணர்ந்து அவளை இறுக அணைத்து, ''நீ நினைப்பது சரிதான். உன்னை மறக்க முடியாமல் அன்று அந்த உறவை நாடித்தான் வந்தேன். ஆனால் நீ மறைந்த விதம் மனதில் பதிந்தது. அன்றிலிருந்து அடிக்கடி உன் நினைவு. உன் நினைப்பாகவே இருந்தேன் என்று சொல்லவில்லை. ஆனால்,

வேறு பெண்ணிடம் மனம் செல்லவில்லை. உன்னை மறக்க முயன்று பார்த்தும்கூட முடியவில்லை.

''மணிமேகலையின் சித்திரக் கண்காட்சியில் உன் சாயலை அவளது படங்களில் கண்டு விசாரித்துப் பார்த் தேன். அவளுடைய தாயார் எல்லாமே மணிமேகலை யின் சொந்தக் கற்பனை என்றபோது நான் நம்பவில்லை. அவளைத் தொடர்ந்தால் எப்படியும் உன்னைக் கண்டு கொள்ளலாம் என நினைத்தேன். கண்டு விட்டபோது, மகன் இருக்கிறான் என்று அறிந்தபோது ஏமாற்றமாகத் தான் இருந்தது. ஆயினும் நல்லவிதமாக உன் வாழ்வு அமைந்து விட்டதனால் நன்மையே என்றுதான் நினைத் தேன்.''

''ஒருவேளை அப்படியே இருந்திருந்தால்...?'' என்றால் ரமி சந்தேகமாக.

''உன் வாழ்வு மேலும் வளம் பெற ஆவன செய்திருப் பேன். மாறாக உன் அமைதியை... உன் அமைதியை அழித்து மீண்டும் உன்னை அடைய முயற்சி செய் திருப்பேன் என்றா நினைத்தாய்?'' என்றான் அவன் கோபமாக.

''எனக்கு... எனக்கு என்ன நினைப்பது என்று குழப்பமாக இருந்தது'' என்று தடுமாறினாள் ரமி.

அவளது கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் சுருளை மெல்ல விலக்கியவாறு, ''உன்னையே உணராமல் அசட்டுப் பிடிவாதம் பிடிக்கிறாய் என்றுதான் நானும் நினைத்தேன்'' என்றவன் அவள் முகத்தை நிமிர்த்தி, ''சொல்லு ரமி இன்னமும் என்மீது வெறுப்பாக இருக் கிறதா?'' என்று வினவினான்.



வெறுப்பா? அன்றே வெறுக்க முடியவில்லை என்று நினைத்தபடி 'இல்லை'யெனத் தலையசைத்தாள் ரமி.

இதழ்களில் அரும்பிய புன்னகை உடனே வாட ''இரண்டு வயதுப் பிள்ளையோடு சென்று நின்றால் எல்லோரும் என்ன பேசுவார்கள்?'' என்றாள் வருத்தத் துடன்.

''முன்பே காதலர்கள், ஒரு நாள் அளவு மீறிவிட்டேன். இவள் சுயமரியாதைக்காரி. கோபத்தில் கண் காணாமல் போய் விட்டாள். இப்போது கண்டுபிடித்து மூக்கணாங் கயிறு மாட்டி இழுத்து வந்தேன் என்று நான் தான் பறைசாற்றி விடுவேனே'' என்றான் அவன் இலகுவாக.

''எவ்வளவு பொய்!''

''முழுவதும் பொய்யில்லையே ரமி. முதல் வாக்கியம் தவிர மற்றதெல்லாம் அசல் நிஜம்தானே. உன் மன அமைதிக்காகத்தான் அந்த வாக்கியச் சேர்ப்புக்கூட....'' என்று இன்னமும் லேசாகத் தெரிந்திருந்த அவளது புருவங்களை மென்மையாக நீவிவிட்டான் கவுதமன்.

''நம்புவார்களா?'' என்று ஐயம் தீராமலே கேட்டாள் ரமி.

''என் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு நான் நின்றால் யார் தான் நம்ப மாட்டார்கள்! வேண்டுமானால் மச்சம் தெரிய இருவரும் மஸ்லின் ஜிப்பா அணிந்து கொள் கிறோம்'' என்று நகைத்தான் அவன்.

எதிரொலியாக அவளிடமும் சிரிப்பு மலரவும் ''உனக்கு ஒன்று காட்டப் போகிறேன்'' என்று உள்ளே சென்று ஒரு நகைப் பெட்டியை எடுத்து வந்து திறந்தான்.

பச்சைக்கல் செட் ஒளி வீசிச் சிரித்தது.

''இது... இது'' என்று மலைத்தாள் ரமி.

''இந்த செட் பற்றி மணிமேகலை சொன்னாள். உன் சரளா அத்தையிடம் ஆளனுப்பி வாங்கினேன். உன் அப்பாவின் வீட்டைக் கூட வாங்கப் போகிறேன்.''

பிரமிப்பு தீராமலே ''எப்படி அத்தை இதை விற்றார்கள்!'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் அவள்.

''எதற்கும் ஒரு விலை உண்டு ரமி'' என்று நகைத்தான் அவன்.

அவளிடம் பதில் இல்லாதது கண்டு முகத்தை நிமிர்த்திப் பார்த்துவிட்டு, ''அதற்குள் முகம் வாட வேண்டுமா ரமி. ஒவ்வொன்றுக்கும் வேறு பொருள் நினைத்து வேதனைப் படுவதனால் வாழ்க்கை நரகமாகி விடும் தெரியுமா? உன்னை வருத்த வேண்டும் என்று நான் எதையும் சொல்வேனா என்று யோசிக்க வேண்டாமா? முதலில் உன் மனதில் நம்பிக்கை வேண்டும். அன்பில் நம்பிக்கை வந்து விட்டால் இல்லாததை எல்லாம் நினைக்கத் தோன்றாது'' என்றாள் சிறு கண்டிப்புடன் அவன்.

அவனையும் வருத்தப்படுத்தி விட்டதை உணர்ந்து, ''என்னை மன்னியுங்கள்'' என்றாள் ரமி மெல்லிய குரலில்.

ஒரு கணம் அவளையே பார்த்துவிட்டு, ''பைத்தியம்'' என்று அவளை அணைத்துக் கொண்டான் கவுதமன்.

அந்த அணைப்பில், அன்று வரையில் பட்ட துன்பங்கள் அனைத்தும் எட்டாத தொலை தூரத்திற்குச் சென்று மறைந்து போக, எல்லையில்லா அமைதி வந்து சூழ்வதை உணர்ந்தாள் ரமி.

*


ஒரு மலர்
ரமணிசந்திரன்